# ஜகன்மோகினி

271



31 OCT 1945

271

DL
ஊ211,N22JM
N45.22.10
183106

அ 4 ணா

October 1945

...ண்டு 22 திங்கள் 10

"JAGANMOHINI," SINGAPERUMALKOIL.

# ஜகன்மோகினி

ஜீவியசந்தா ரூ. 50

வருஷ சந்தா ரூ. 3

தனிப்பிரதி அணா 4


ஐயுணர் வெய்தியக் கண்ணும் பயமின்றே
மெய்யுணர் வில்லா தவர்க்கு -திருவள்ளுவர்

ஜகன்மோகினியென்னுஞ் சஞ்சிகையைக் காக்க
ஜகன்மோகினி! மனத்தைச் சார்ந்து. -வீரராகவ கவி


Vol. 22. No. 10. பார்த்திப : புரட்டாசி October 1945



வெளியாகிவிட்டது!

# ஸ்ரீ கிருஷ்ணார்ப்பணம்

## முதலிய 15 கதைகள்

வை.மு. பத்மினி ஸ்ரீநிவாஸன்

எழுதிய, கருத்தைக் கவரும், பெண்மையை உயர்த்தும் சிறு கதைகள், படப்பொலிவுடன் உயரிய கிளேஸ் பதிப்பு, ஸ்ரீமதி "குமுதினி" அவர்களுடைய முன்னுரையுடன் வெளியாகியுள்ளது. இதுவரை வெளிவராத பல புதுகதைகளும், ஏற்கெனவே மோகினியிலும் நந்தவனத்திலும் வெளியான கதைகளும் சேர்ந்த கதம்பமாலை.

## அட்டவணை

| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| 1. பத்மகாந்தனி | 1 | 9. பெயர்க்கொலை | 55 |
| 2. உண்மையாகவா? | 7 | 10. புஷ்பக்காரி | 57 |
| 3. ஸ்ரீ கிருஷ்ணார்ப்பணம் | 17 | 11. புத்தி வந்தது! | 65 |
| 4. சர்வ பட்சி மகாநாடு | 21 | 12. ஆயிரம் நமஸ்காரம் | 69 |
| 5. சிருஷ்டியும் திருஷ்டியும் | 25 | 13. சமயஸஞ்சீவி | 80 |
| 6. மல்லிச்செடியில் ரோஜாப்பூ | 28 | 14. தர்மமே ஜயம் | 90 |
| 7. செம்பு மோதிரம் | 33 | 15. நித்ய மங்களம் | 100 |
| 8. வத்ஸலா | 42 | | |

(சூபர்பைன் கிளேஸ். 112 பக்கங்கள். சுமார் 20 படங்கள்.)

ரூ. 1—4—0

# பிரார்த்தனை செய்வோம்

இந்த சிறிய கிராமத்திலும் ஒவ்வொரு புதன்கிழமையன்றும் எங்கள் வீட்டிற்கு நேரில் உள்ள மைதானத்தில்தான் மாட்டுச் சந்தை கூடுகிற வழக்கம். சில மாதங்களுக்குமுன்பு இச் சந்தையை வேடிக்கை பார்த்தவாறு அதன் சமீபம் சென்றேன். சந்தை இரைச்சலில் குடியிருந்து கெட்டேனே! என்று ஒரு பழமொழி. மாட்டுக்காரர்களின் கூச்சலும், மாடுகள் கத்தும் சத்தமும் ஒருவித ஆனந்தமாகத்தான் தோன்றியது.

பசு மாடுகள் வந்திருக்கின்றனவா! என்று பார்த்துக்கொண்டே வந்தேன். ஒரு மரத்தடியில் நான்கு பசுக்கள் கன்றுகளுடன் நின்றிருந்தன. அவற்றின் சொந்தக்காரனைக் காணவில்லை. நான் தமாஷாக, "என்னப்பா! கோமட்டும் இருக்கிறது. கோபாலனைக் காணவில்லையே!" என்றேன்.

அங்கு முலாம்பழம் விற்றுக்கொண்டிருந்த ஒரு கிழவி 'கோபாலனா... அவன் பேரு மாணிக்கம்மன்னா!" என்றாள். அவளிடம் பழம் வாங்கும் ஒரு மனிதன், சற்று விஷயமறிந்தவன். அவன் கிழவியை நோக்கி... "அம்மா சொல்றது மாட்டுக்கார மாணிக்கத்தைதான்... அதெ கதெயாட்டும் சொல்றுங்க. பசுமாட்டை கோபாலன்—கண்ணன்—மேய்க்கல்லையா... அந்தமாதிரி அர்த்தம் வெச்சுப் பேசறுங்க." என்று வியாக்யானம் செய்தான். கிழவிக்கு ஆச்சரியமாகிவிட்டது. "ஆ...பசுமாட்டே கண்ணன் மேச்சானா... அதான் மவாத்மா காந்திகூட ஆடு மேய்க்கிறாராம். ஆட்டுப் பாலையே குடிக்கிறாராம்......மல்லாக்கொட்டே தின்றாராம்......அவரெயும் சாமியாட்டந்தானே பேசறுங்க!" என்றாள்.

இதைக் கேட்டதும் உண்மையில் எனக்குண்டான வியப்பிற்கு எல்லை இல்லை. அக்கிழவி என்னவோ இந்துமதத்தைச் சேர்ந்தவள்தான், பிறமதக்காரியல்ல. இந்துமதத்தில் பிறந்த இந்துக்கள் வணங்கித் துதிக்கும் கோபாலன் மாடு மேய்த்தான். அதனால் கோபாலன் என்று பெயர் வந்தது என்கிற தத்துவத்தை அறியவில்லை. ஐயோ பாவம்! அத்தனை பொறுமையுடன் புராணத்தை அவளுக்குப் போதிப்பவர்கள் யார்?

18306
சென்னை-600 008



ஆனால், இன்று உலகமெங்கும் பேசும் தெய்வமாகக் கொண்டாடிப் போற்றும் மகாத்மா காந்தியடிகளைப் பற்றி அவள் எவ்வளவு ஆர்வத்துடன் அறிந்திருக்கிறாள். ஆடு மேய்ப்பதாக ஏதோ தப்பபிப்ராயம் கொண்டிருந்தபோதிலும் அவரைப்பற்றி அவள் பேசியதைக் கேட்க என் இதயத்தில் ஒரு உணர்ச்சி பொங்கி எழுந்து தேகம் மயிர்கூச்செறிந்தது. கிழவியை நோக்கி "ஆயா! நீ அந்த காந்தியை பார்த்திருக்கிறாயா! அவர் ஆடுமேய்ப்பதாக உனக்கு யார் சொன்னார்கள்?" என்று கேட்டேன்.

கிழவி:—அம்மா! எக்க ஊட்லே 15 ஆடுங்க இருக்குது. எம் பேரன் அதை பாக்கறபோதெல்லாம் 'ஆபா! இத்தினி ஆட்டையும் காந்திக்குக் குடுத்துட்டா எத்தினி சந்தோஷப்படுவாரு தெரியுமா! அவரு ஆட்டுப்பாலு தான் சாப்பிடுவாராம்' இன்னு அவரெப்பத்தி சொல்லுவான். அவரு தான் சாமியாம். அவருதான் கொலதெய்வமாம்...இன்னு எம் பேரன் சொல்வான். அவரு நல்லா இருக்கிறாரா?" என்று விசாரித்தாள்.

என்னுடம்பு புலகிதமடைந்தது. "அவரு நல்லாயிருக்கிறார். இன்னும் எத்தனையோ வயசு நல்லாயிருக்கணுமுன்னு சாமியே வேண்டிக்கோ!" என்று சொன்னேன்.

இதுபோல் மூலை முடுக்குகளிலுள்ள பாமர ஜனங்கள்முதல் இன்று மகாத்மாவைக் கடவுளாக எண்ணியிருப்பதை என் அனுபவத்திலேயே பலவிடங்களில் பார்த்திருக்கிறேன். ஆவணி மாதத்தில் ஸ்ரீ கிருஷ்ண ஜயந்தியை எதிர்பார்த்து ஆஸ்திகர்கள் எவ்வளவு ஆவலாகக் கொண்டாடிக் களிக்கிறோமோ அதேபோல் புரட்டாசியில் (அக்டோபர் 2-ந் தேதியன்று) மகாத்மாவின் ஜயந்தியை இந்தியா பூராவும் எதிர்பார்த்துக் கொண்டாடும் காந்தியுகத்தைக் கண்ணாரக் கண்டு களிக்கின்றோம்.

கிருஷ்ணன் மாடுமேய்த்தான்; காந்தி ஆடுமேய்க்கிறார் என்று அக் கிழவி சொல்லியது ஒரு அம்சத்தில் பொருந்தியே இருக்கிறது. ஸ்ரீகிருஷ்ணனுடைய அம்சத்தில் அநேகம் த்யாகமூர்த்தியான மகாத்மாவிடம் ஜ்வலிப்பதை தத்ரூபமாய் பார்க்கிறோம். அத்தகைய புனிதமூர்த்தியின் 76-வது பிறந்த நாள் நாளது அக்டோபர் மாதம் இரண்டாந்தேதி வருகிறது. அன்று பாரததேசம் பூராவும் பண்டிகை கொண்டாடி அம்மகானுபாவன், சென்றதுபோக இன்னும் பல்லாண்டு பல்லாண்டாய், என்றும் சிரஞ்சீவிகளான ஆஞ்சநேயர் மார்க்கண்டேயர்போல் உலகில் வாழ்ந்து அவர் கண்களாலே சுதந்தர தேவியின் விடுதலைக் கோலத்தைக் கண்டுகளிக்கும்படியான பாக்யத்தைக் கொடுக்கும்படி பகவான் கிருபை செய்யவேண்டி நாம் எல்லோரும் ப்ரார்த்தனை செய்வோமாக. இதய பூர்வமாய் நாம் வேண்டி பஜிப்பதும் மகாத்மாவின் லக்ஷ்யத்தில் பங்கெடுத்துக்கொண்டு உழைத்து அவர் மனத்தை மகிழச் செய்வதுமே நாம் அப்புண்ணிய புருஷருக்குச் செய்யும் பேருபகாரமாகும்.

"காந்தி நீடூழி வாழ்க. காந்தியம் செழித்தோங்குக" என்று கும்பலில் கூக்குரலிட்டுவிட்டு நாம் தூர நிற்கும் காலம் இதுவல்ல. இந்தியாவின் மகத்தான சோதனைக்காலம் தேர்தல் என்கிற கட்டடத்தின்மீது நிற்கிறது. இந்தியாவின் தலைவிதியின் நிர்ணயத்தை எடைபோட்டுப் பார்க்கும் திராசுபோல் லீகும் வெள்ளையரும் காத்திருக்கிறார்கள்.

இம்மகத்தான பரிக்ஷையில் நாம் எல்லோரும் ஒன்றுகூடி ஏகோபித்த மனத்துடன் காந்தியின் சத்திய வாக்கை மேல்கொண்டு உழைத்து திராசின் நிறைக்குச் சரியானபடி படிப்பினையைக் காட்டவேண்டும். சாக்ஷாத் ஸ்ரீ கிருஷ்ண துலாபாரத்தை இப்போது ஒவ்வொருவரும் இதயத்தில் நினைத்துக்கொள்ளவேண்டும். ஸ்ரீ கிருஷ்ண பரமாத்மாவிடம் பேரன்பும் பக்தியும் கொண்ட ஸ்ரீ ருக்மிணி தேவி ஒரு துளசிதளத்தினால் வெற்றி பெற்று உலகில் அழியாப் புகழ் பெற்றது போல் நாம் இத்திராசில்


31 OCT 1948

**காங்கிரஸ்** பக்தி என்ற ஒரே துளசிதளத்தை வைத்து உலகமே ப்ரமிக்கும்படி வெற்றிக்கொடி நாட்டி பாரதமாதாவின் அடிமை விலங்கை அறுத்தெறியவேண்டும். அதுதான் மகாத்மாவின் இதயத்தில் அமுதம் வார்ப்பது போன்று இருக்கும். தேர்தல் என்கிற திராசுக்கோலில் மஞ்சள் பெட்டி என்கிற திராசுத்தட்டு நிற்கப்போகிறது. அதில் நீங்கள் காங்கிரஸ் என்கிற ப்ரமாணச்சீட்டை, இதய பூர்வமான தேசபக்தி, நம்பிக்கை, கட்டுப்பாடு, முதலியவைகளுடன்—அதையே துளஸிதளமாக எண்ணி—போடவேண்டியதுதான் தற்சமயம் ஏற்பட்டுள்ள கடமையாகும். இவ்வருஷத்தில் மகாத்மாவின் பிறந்தினத்தன்று நாம் எடுத்துக் கொள்ளவேண்டிய ப்ரமாணம்...வ்ருதம்... இது தான்.

அடுத்த வருஷம் ஒரு நிமிடத்தில் உருண்டு ஓடி இதே மகாத்மாவின் பிறந்த தினத்தை நாம் கொண்டாடும்போது 40 கோடி மக்களும் ஒருமிக்க ஒன்றுகூடி காங்கிரஸின் உயர்வை நிலைநாட்டி சோதனையில் தேறிய மகத்தான சந்தோஷத்தின் பலனை நேருக்கு நேர் கண்ணாரக்கண்டு சந்தோஷிக்கலாம்.

இதுதான் நாம் இப்போது செய்யவேண்டிய முதல் காரியம். இந்த நல்ல தருணத்தைக் கைத்தவறவிட்டுப் பிற்போக்கான பல படுகுழிகளில் வீழ்ந்து பரீக்ஷையில் தோல்வியுற்றோமானால் இன்னும் 100 வருஷங்கள் சென்றாலும் நாம் நமது சுயமரியாதையுடன் தலைநிமிர்ந்து நடக்கமுடியாது. அடிமைத்தளையின் சங்கிலி நம் பாரததேசத்து ஜனங்களை இறுக்கியடித்து நாசம் செய்துவிடும் என்பதுமட்டும் மறக்கவேண்டாம். ஒன்றுபட்டாலுண்டு வாழ்வு என்று அமரகவி பாரதியார் எழுதியதை வாழ்க்கையில் நிரூபித்துப் பயனடைவோமாக.

—வை. மு. கோ.

# விளக்கையா அணைப்பது?

"பருப்பில்லாமலா கல்யாணம்?" என்பது பழமொழி. கல்யாணத்திற்கு பருப்பு எவ்வளவு அவச்யமோ, முக்யமோ, ப்ரதானமோ அதைப்போலவே காங்கிரஸுக்குத் தமிழ் நாட்டுத் தலைவர் ஸ்ரீமான் ராஜாஜி அதிமுக்யமானவர் என்பதை ஒன்றுமே தெரியாத ஒரு பட்டிக்காட்டு ஆளைக் கேட்டாலும் சொல்லிவிடுவான். இருண்ட இடத்திற்கு விளக்கு வேண்டுமென்று கோருவார்களேயன்றி வேண்டாமென்று யாரேனும் சொல்வார்களா? விளக்கு ப்ரகாசத்தைக் கொடுப்பது என்னவோ உலகமறிந்த தத்துவம். அவ் விளக்கில் சில சமயம் சுடல் தட்டலாம். எண்ணெய் அதிகமாகிவிட்டாலும் ப்ரகாசம் குறையலாம். தப்பித் தவறி அஜாக்ரதையாக விரலை வைத்தவர்களுக்குச் சுடவும் சுடலாம். இவைகளுக்காக விளக்கையே வேண்டாம் என்று சொல்வார் உலகில் உண்டா? சுடலைத் தட்டித் தூண்டிவிட்டால் விளக்கின் ப்ரகாசம் ஜகஜ்ஜோதியாகி விடுமல்லவா? தற்போதைய நிலைமை இதே உதாரணத்தில்தான் இருக்கிறது.

இடைக்காலத்தில் ஏதோ சில அபிப்ராய பேதங்கள் ஏற்பட்டிருப்பினும், அதை இப்போது அடியோடு விட்டுவிட்டு, தூண்டி விடப்பட்ட விளக்குபோல் ப்ரகாசிக்கும் நிலைமையில், காங்கிரஸின் மகத்தான கட்டுதிட்டத்திற்கு உள்பட்டு வந்துள்ள ராஜாஜியை வேண்டாமென்று மனந்துணிந்து சொல்லும் கூட்டத்தைக் கண்டு நாம் பரிதாபப்பட வேண்டிதானிருக்கிறது. தமிழ்நாடு மட்டுமல்ல. அகில இந்தியாவே ஒப்பற்ற த்யாக வீரர் ஸ்ரீ ராஜாஜி என்று ஒப்புக்கொண்டு வரவேற்கும்போது அவர் பிறந்த தமிழ் நாட்டினரும் அடுத்த வீட்டுக்காரர்களாகிய ஆந்திரர்களும் அவரை விலக்க முயலுவதானது ப்ரசாசங் கொடுக்கும் விளக்கை நாமே அவித்துக்கொள்வதுபோலத்தானாகும். பெருந்தன்மையும், தராதரமும் அறிந்து ஏகோபித்து ஸ்வராஜ்ய ரதத்தை ஒன்று கூடி இழுத்து நிலையில் நிற்கச் செய்யவேண்டிய சமயத்தில், இம்மாதிரி வீண் வாதங்களையும், ரஸாபாஸங்களையும் கிளறிவிட்டுக்கொண்டிருப்பது நமக்கே இழுக்காகுமேயன்றி நன்மை சிறிதுமில்லை. நம் பாரத நாட்டின் சாபக்கேட்டால் ஏற்கெனவே உள்ள பல பிளவுகள் நம்மை விழுங்கி ஏப்பம் விடப் பார்க்கும் இந்த சோதனை நிறைந்த சமயத்தில் இம்மாதிரி ஒரு புதிய கிளர்ச்சியைக் கிளப்பி மற்றொரு பிளவை உண்டுபண்ணுவது கேவலத்திலும் கேவலமாகும். சோதனைக்காலத்தில் சோதனையிலிருந்து ஜெயிக்கக் கங்கணங் கட்டிக்கொள்ள வேண்டுமேயன்றி நம் தலையில் நாமே மண்ணைப்போட்டுக்கொண்டு காரியத்தைக் கெடுப்பதில் லாபமே இல்லை.



உலகத்தில் மகாத்மாவை ஒவ்வொரு குக்ராமத்திலும் ஜனங்கள் எவ்விதம் அறிந்துகொண்டிருக்கிறார்களோ, அதேபோல் ராஜாஜியையும் பரிபூர்ணமாக அறிந்திருப்பதை யாரும் மறுக்கவேமுடியாது. இதை நன்கறிந்தும் ஒரு சிலர் வீண் கூக்குரலிட்டு விரஸத்தை வளர்த்துவது கேவலம் கேலிக்கூத்தாகவே இருக்கிறது.

இத்தகைய முக்யமான சமயத்தில், உண்மை வீரரைப் புறக்கணிக்கக் கூக்குரலிட்டுப் போராடிக்கொண்டிருக்கையில், இதுதான் சமயம் என்று எத்தனையோ பேர்கள்,—காங்கிரஸின் அடிச்சுவட்டைக்கூட மிதித்திராதவர்களெல்லாம்—பசுத்தோல் போர்த்த புலிகள்—உள்ளே ப்ரவேசித்துப் பின்னும் கலவரத்தையும் குழப்பத்தையும்... ஏன்... சங்கடத்தைக் கூட உண்டாக்கி விடுவார்கள். உண்மையான காமதேனுவைப்போன்ற



ராஜாஜியை விலக்க எண்ணும் நேரத்தில் அதே கதவின் வழியாகப் போலி நபர்களை உள்ளேவிட்டு ஏமார்ந்து நிற்காமல் யுக்தா யுக்தமறிந்து நடந்து நாட்டின் நலனைக் கோருவதுதான் புத்திசாலிகளின் செய்கையும் லக்ஷியமும் ஆகும். தேர்தலின்மீது கொண்ட மோகத்தில் பலர் வந்து சேருவதற்கு ஆரம்பித்து விடுவார்கள். அம்மாதிரி வரும் போலிகளை உள்ளே சேர்க்க இடங்கொடுக்காமல் தடுக்க மேற்படி கோஷ்டியார் முயற்சித்தால் எத்தனையோ சிறப்பாக இருக்கும்.

அதை விடுத்து எந்தத்தலைவரால் தமிழ்நாடு புத்துயிரும், புத்துணர்ச்சியும் பெற்று இன்று புதிய பரிபக்குவமடைந்திருக்கிறதோ, அந்தத் தலைவரை விலக்கும்படிக் கூறுவதானது ஒரு குடும்பத்திலுள்ள தலைவனை விலக்க முற்படுவதுபோலத்தானிருக்கிறது. தலைவன் விலகிய குடும்பம் கலகலத்துப்போய் அஸ்திவாரமில்லாத கட்டடம்போலத்தானாகும் என்

பதை நினைவில் வைத்து, வீண்வாதத்தை நிறுத்தி, ஏகோபித்து ஒத்துழைத்து நமது லக்ஷியத்தின்மீது நடந்து, சோதனைக்காலத்தை வென்று உலகுக்கு நமது காங்கிரஸின் பெருமையை, அதன் மகத்தான சக்தியை கல்லின் மேல் எழுத்துக்கு நிகராகக்காட்டிப் பயனடைவோமாக. வை. மு. கோ.

---

## மோகினி ஓவியச் சோலை

## ஸ்ரீ தியாகராஜ கீர்த்தனை

*இராகம் : கேதாரகௌள* *தாளம் : ரூபகம்*

*பல்லவி*

வேணுகான லோலுனி கன வேயிகன்னுலு காவலெனெ —வே

*அநுபல்லவி*

அலிவேணுலெல்ல த்ருஷ்டிசுட்டி வேயுசும்ரொக்குசு ராக —வே

*சரணம்*

விகஸித பங்கஜ வதனலு விவித கதுல நாடக
நொகரி கொகரு கரமுன நிடி யோரகனுல ஜூடக
சுகரவமுலு கலதருணுலு ஸொகஸுகானு பாடக
ஸகல ஸுருலு த்யாகராஜ ஸுகுனிவேடக வச்சி —வே

## பெரியாழ்வார் திருமொழி

தாய்மார்மோர்விற்கப்போவர் தமப்பன்மார்கற்றுநிரைப்பின்புபோவர்
நீயாய்ப்பாடியிளங்கன்னிமார்களை நேர்படவேகொண்டுபோதி*
காய்வார்க்கென்றுமுகப்பனவேசெய்து கண்டார்கழறத்திரியும்*
ஆயாவுன்னையறிந்துகொண்டேன் உனக்கஞ்சுவனம்மந்தரவே-

# ஸ்ரீ கிருஷ்ண லீலை




## தியாகராஜ கீர்த்தனை.

1. ஸ்ரீ கிருஷ்ணன் வேணுகானம் செய்தல். 2. இரு கோபியர்கள் கண்ணனுக்கு ஆரத்தி எடுத்தல். 3. கோபியர் விளக்கேற்றி, அதைச்சுற்றி, திருஷ்டி கழித்தல். 4. கோபியர் விதவிதமாய் நாட்டியமாடல். 5. கைகளைக் கோத்துக்கொண்டு எட்டியாடியவாறு கண்ணனை ஓரைக்கண்ணால் பார்ப்பது. 6. சிலர் தம்புரா வீணை முதலியவற்றுடன் பாடுவது. 7. தேவர்கள் கண்டு களிப்பது. 8. ஸ்ரீ தியாகராஜரின் க்ருஷ்ண தியானம்.




1. தாய்மார்கள் மோர் விற்கிறார்கள். 2. தகப்பன்மார்கள் மாடுமேய்க்கிறார்கள். 3. கிருஷ்ணன் ஆச்சியர் வீட்டில் புகுதல். 4—5. கண்ணன் அவர்களுடன் ஓடி ஆடி விளையாடுதல். 6. கம்ஸன் முதலானோர் கிருஷ்ணனை வெறுத்துப் பேசி மகிழ்தல். 7. ஆயர்பாடியிலுள்ளோர் கிருஷ்ணனை ஏசிப்பேசுவது. 8. யசோதை அமுதுண்ண கிருஷ்ணனை அழைப்பது.

## கலைவரம்

பூர்வ கல்யாணி] [திரிபுடை தாளம்

பல்லவி

கலை வரந் தருவாய்—ஓம் சக்தி
கமல ஜோதியே, தாயே
விமல ஸரஸ்வதியே (கலை)

அநுபல்லவி

சலசல வெனப் பொங்கும்
சங்கீதத் திலென் ஜீவன்
தங்கப் படகு போலத்
தவழ்ந்து மகிழ்ந்து செல்லக் (கலை)

சரணம்

மேரு தண்ட வீணை வேத ஓங்காரம் பாட,
விதவிதப் பதம் வைத்தே ஹ்ருதயப்ராஹ்மன் ஆட,
பேரின்ப ரசங்களை வாரி வாரிப் பருகி,
பிறவாமல், இறவாமல்
மறவாமல், அன்புசெய்யும் (கலை)

## பாரதி சொரூபம்

மெல்லிய தங்கக் கொடியிலே பூத்த
வீர விழிக்கனல் கொண்டவன்
சொல்லின் உணர்ச்சியைத் தூண்டியே துள்ளித்
துள்ளிக் குதித்திடும் பாடகன்.

அச்சமில்லை யெனப் பேசிடும்—வாள்
ஆயுதம் போல்வளர் மீசையான்
துச்ச அடிமைப் பிழைப்பினை—தூ
தூவெனச் சொல்லிடும் வாயினன்.

சாதிகள் பொய்யெனச் செப்புவான் எங்கும்
சமரஸ பேரிகை கொட்டுவான்
வீதியிலும் கவி பாடியே—அவன்
வீரச் செருக்குடன் செல்லுவான்.

பண்டிதர் கொண்ட தமிழினை நாட்டில்
பாமர ரும்பெறச் செய்தனன்
பெண்டிர் நிமிர்ந்து நடக்கவே அ
பேதவாதங்களைப் பேசினன்.

தீரன் அறிவிற் சிறந்தவன் - புதுத்
தீர்க்க தரிசி வரகவி
வீர சுதந்தர சக்தியே இவன்
வேடம் புனைந்ததென் றேதுவோம்.

மங்கிக் கிடந்த தமிழுக்கே மறு
மலர்ச்சி வேகம் அளித்தனன்
பொங்குக பாரதியின் புகழ் அவன்
போற்றிய செந்தமிழ் வாழ்கவே !

---

# காலத்தை வென்ற கவி

அச்சத்தை ஓட்டி அடிமைத் தளைபோக்கி
துச்ச நினைவுகளை தூரறுத்து—மெச்சவே
ஞாலப் புகழோங்க நாட்டை எழுப்பினன்
காலத்தை வென்ற கவி.

எல்லாரும் ஓர்குலமே என்று முரசடித்துப்
பொல்லாத வேற்றுமையைப் போக்கினன்—சொல்லின்
அருவியாய் வந்தான் அமரகவி; வீரத்
திருவில் வெடித்தெழுந்த தீ.

*சுத்தானந்த பாரதி.*

# 4. ஜனநாயக வெற்றி

நேற்றுலகம் இரத்தக் காட்சியாயிருந்தது; எங்கும் மனித வேட்டை; குண்டுப் புகை; ஒருபுறம் யுத்தச் சாவு; மறுபுறம் பஞ்சச்சாவு. ஒருபுறம் வியாபாரக்கொள்ளை; காகிதப் பணக் குப்பை; மறுபுறம் எலும்பெடுத்த பட்டினிப் படைகளின் அழுகுரல்; அனாதைகளின் ஓலம். ஒருபுறம் நாசம்; மறுபுறம் தொழிலாக்கம்.

ஜர்மனி,இத்தாலி,ஜப்பான் ஆகிய மூன்று நாடுகளும் இப்போரில் வெற்றிமேல் வெற்றிபெற்றுப் படுதோல்வியடைந்து புழுதிமேவிப் போயின; இன்னும் இருபது முப்பதாண்டுகளுக்கு இவை தலை தூக்க முடியாது. ஜப்பானின் பேராசை படுநாசத்தில் முடிந்தது. நாட்டில் ஆறிலொருபங்கு பகைவர் குண்டுக்கிரையானது. ஜர்மனி இடிந்து மடிந்து தகர்ந்து போனது.

இரண்டும் அகம்பாவத் திமிர் பிடித்த நாடுகள். ஹிட்லர் தனது நார்டிக் ஜாதியே உயர்ந்தது என்றான்; மிகாடோ தானே சூரிய புத்திரன், தனது ஹிண்டோ ஜாதியே உயர்ந்தது என்றான். இரண்டு அகம்பாவங்களும் இன்று புல் முளைத்துப் போயின.

வென்ற நாடுகளில் அமெரிக்காவிற்கு அதிகச் சேதமில்லை. அங்கே குண்டுவிழவில்லை. அமெரிக்கப்பணமும் படையும்போர்முனையை ஆண்டன. எல்லா நாடுகளும் அமெரிக்காவுக்குக் கடன்பட்டிருக்கின்றன. பிரிட்டன்கடனில் மூழ்கியிருக்கிறது. அது ஜெர்மனியின் விமானத் தாக்குதலால் சேதமுற்றது; ரஷ்யா முதலில் பரிதாபகரமாக வருந்திப் பிறகு ஜெர்மனியைத் துரத்தி வீழ்த்தியது. ஹிட்லரை வீழ்த்தியதிற் பெரும்பங்கு ஸ்டாலினைச் சேர்ந்தது. சீனம் இரத்த வெள்ளத்தில் நீந்திக் கரை சேர்ந்தது.

இன்றுலகில் சோவியத் ரஷ்யா, அமெரிக்கா, இங்கிலாந்து, சீனம் ஆகிய நான்கு தேசங்களே தலைமை வகிக்கின்றன. ஸான்பிரான்ஸிஸ்கோ மஹா நாட்டில் இந்த நான்கே ஆதிக்கம் பெற்றன. பிரான்ஸ் இப்போதுதான் விடுதலை பெற்றுத் தலைநிமிர்கிறது. ஐரோப்பா இன்னும் சரியான நிலைக்கு வரவில்லை.

பிரான்ஸில் தளவாய் கோல் ஒரு வகையாக அமைதியை நாட்டினான்; ஆனால் அவன் தானே சர்வாதிகாரியாகித் தன் இஷ்டப்படி காரியங்களை நடத்துகிறான். ஸிரியா அல்ஜீரியாவில் துப்பாக்கி முனையில் நடத்திய சுயேச்சாதிகாரம் அவன் பெயரைக் கெடுத்துவிட்டது. பிரான்ஸிலேயே தேர்தலில் அவன் படுதோல்வியடைந்திருக்கிறான். ஆனால் தளவாய்கோல் கர்மவீரன். எடுத்த காரியத்தைக் கண்டிப்பாக நிறைவேற்ற வல்லவன். சமீபத்தில் அவன் வாஷிங்டனில் ட்ருமானைக் கண்டு நல்லபெயர்வாங்கி, பிரான்ஸிற்கும் வேண்டிய சரக்குகளைக் கப்பல் கப்பலாகக் கொண்டுவந்திருக்கிறான். பிரான்ஸில் நாஜியாட்சி நடந்தபோது அஷ்டதரித்திரம் கூத்தாடியது. குளிருக்குக் கணப் பெரிக்க விறகில்லாமல், வீட்டிலிருந்த மேஜை நாற்காலிகளைக்கூட உடைத்தெரித்து மக்கள் கணப்புக் காய்ந்தனர். உணவில்லாமல் இறந்த

வர் பலர். "ஐயோ கொடுமை! அடிமை ஒழிக!" என்றால் துப்பாக்கி குண்டு மண்டைக்கு வரும். அந்த நாசி-தர்பார் அடியோடொழிந்தத; எனினும் அதனால் வந்த தீமைகள் ஒழிய இன்னும் ஈராண்டாகும்.

இங்கிலாந்தில் குண்டுகளாலும் கண்ணிகளாலும் வாணங்களாலும் வந்த சேதம் கணக்கிலடங்காது, அழகான கட்டடங்கள் இடிந்து தரைமட்டமாயின. பெரிய பல கப்பல்கள் பாதாளயாத்திரை போய்விட்டன. நாட்டின் பொருளாதார நிலை சீர்குலைந்தது—இங்கிலாந்து தன்னைத் திருத்தித் தலைநிமிர ஓராண்டாகும். இங்கிலாந்திற்கு மீண்டும் உயிர்தந்தார் சர்ச்சில். இந்தப் போரில் அவர் இரவு பகலாகப் பாடுபட்டார். உண்ணும்போதும், குளிக்கும்போதுங்கூட அவர் போர் நடவடிக்கைகளைக் கவனித்து உடனுக்குடன் ஆவன செய்தார். ஆனால் அவர் முடியரசு-வாதி-சுயேச்சாதிகாரப் புலி; பிடிவாதமான கன்ஸர்வேடிவ். இந்தியா என்றால் அவர் மனம் கல்லாய் விடுகிறது. பொதுத் தேர்தலில் அவர் படுதோல்வியடைந்தார். அவருக்குப் பின்பாட்டுப் பாடி இந்தியருக்கு "நாஸ்தி" சொல்லிக்கொண்டிருந்த எமெரியும் ஏமாறி பல்டியடித்துவிட்டார். இங்கிலாந்தில் இப்போது தொழிற்கட்சி முன்னணியில் நிற்கிறது. கன்ஸர்வேடிவ் கட்சி மண்ணைக் கௌவியது. இதனால் முடியரசான இங்கிலாந்திற்கூடத் தொழிலாட்சியின் வேகமும் பரந்துவருவது வெட்டவெளிச்சம்.

தளவாய் கோல் நான்காம் குடியரசை நாட்டியதும், மாஸ்கோவுக்குச் சென்று ஸ்டாலினுடன் ஒப்பந்தம் செய்துகொண்டான். வாஷிங்டன் சென்று ட்ரூமானுடன் கலந்து பேசினான்—இவை ஜனநாயக நாடுகள்—பொதுஜனசம்மதமே இந்நாடுகளை ஆளுகின்றன. இங்கிலாந்து ஒன்றுதான் முடியரசு நாடு.

இப்போதுள்ள காலப்போக்கு ஜனங்களைஜனங்களால் ஜனங்களே ஆள விரும்புகிறது. நான் என்று எந்தத் தனி மனிதனும் கிளம்பிச் சுயேச்சாதிகாரம் செலுத்த இனி முடியாது. மூஸலோனி அப்படிக் கிளம்பிச் சுயேச்சாதிகாரம் செலுத்தினான். அவன் இத்தாலியில் கல்வியும் தொழிலும் சுகாதாரமும் வளர்த்தான்; ஆனால் போர்—வெறிகொண்டு அநியாயமாக அபிஸீனியாவைத் தாக்கி இரத்தம் வடித்தான். அநியாயமாக ஹிட்லருடன் சேர்ந்து பிரான்ஸைக் கொல்லை வழியாகத் தாக்கினான்—கர்ம பலன் அவனைச் சுட்டு, அவனுடைய பாஸிஸத் தோழரைச் சுட்டு எல்லாரும் காறித் துப்பும்படி தெருவில் மாட்டிவிட்டது.

ஹிட்லர் உலகிலேயே சுயேச்சாதிகாரம் பண்ணக் கிளம்பினான். ராகெட்பாமுக்குமேல் அணுவெடிகூடப் பண்ணப்புகுந்து நாசித்திமிரால் ஐரோப்பாவை சர்வ நாசம் செய்தான். முடிவில் அவனே ஒழிந்தான்; அவனுடைய ராக்ஷஸ தூதர் தற்கொலை புரிந்துகொண்டனர். ஜப்பான் ஆசியாவின் வல்லரசாகி எவ்வளவோ முன்னேறியது. ஆனால் அதை சாம்ராஜ்ய வெறிபிடித்தது. ஜெர்மனியை அபிநயித்து அதுவும் அநியாயமாகச் சீனத்தைத் தாக்கிச் சித்திரவதை செய்தது. ஜப்பானிய சேனை சென்ற இடமெல்லாம் படுகொலை, படு கொள்ளை, கற்பழிவு, சிசுவதை, தீச்சேதம்—இவைகளே கண்டோம். முடிவில் பிண்டத்திற்குக் கூடத் திண்டாடி ஜப்பானியப் புலிகள் நரமாமிசத்தை உண்ணும் நிலைக்கு வந்துவிட்டனர். போர்க் கைதிகளை அடித்துண்டார்களாம்.

ஒருவரை ஒருவர் குத்தி, ஊனுண்டார்களாம் — விநோதமான கொடுமை! நாகரீகம் எந்த நிலைக்கு வந்து விட்டது! யந்திர மூளையும் குண்டுத்திமிரும் இரத்த வெறியும் கொண்ட நாகரீக மனிதன், முடிவில் காட்டுப்புலியும் கனிபாலும் (Cannibal) ஆய்விட்டான்.

இப்போது இரண்டு நாடுகள் சீரும் செழிப்புமாக வாழ்கின்றன. (1) சோவியத் ரஷ்யா (2) அமெரிக்கா —இரண்டும் குடியரசு நாடுகளே. ஆனால் அமெரிக்கா முதலாளிகளின் நாடு, பணக்காரர் கோட்டை; அது அணு வெடிவைத்து ஆளை மிரட்டுகிறது. இரக்கமில்லாமல் அணுவெடி போட்டு இலட்சக்கணக்கான மனிதரைப் பரலோக நரகத்திற்கு அனுப்ப அது துணிந்து நிற்கிறது.

ரஷ்யா ஒன்றுதான் இப்போது உண்மையான ஜன-ஆட்சி நாடு, அங்கேதான் தொழிலாளிகளுக்குச் செல்வாக்குண்டு. முதலாளிகள் அங்கே தலைதூக்க முடியாது. வேலை செய்தவனுக்கு அன்புடன் உணவளிக்கிறது பொதுவுடைமை நாடு. அதன் வேகமே இப்போது உலகில் பரவிவருகிறது. உலகெங்கும் பொதுவுடைமைக்கட்சி வேலைசெய்கிறது. ஸ்டாலின் இப்போதுள்ள ஜனாட்சியுலகை ஆளுகிறான். அவன் சரியான காலத்தில் சரியான காரியம் செய்து தனது தாராள மனதைக் காட்டுகிறான். பொதுவுடைமைக் கொடி நாட்டும் இடமெல்லாம் ஜனங்களுக்குச் சமப்பங்குதான். ஒவ்வொரு குடும்பத்திற்கும் தேவையான காணியும் தொழிற்கருவிகளும் அளிக்கப்படுகின்றன. உழைப்பின் பலன் சோவியத் சர்க்காருக்குச் சென்று பொது ஜனத்திற்குச் சமமாகப் பயன்படுகிறது. சமீபத்தில், தான் வென்ற மஞ்சூரியாவை ஸ்டாலின் ஷியாங்கே ஷேக்கிற்குத் திருப்பிக் கொடுத்துச் செய்துகொண்ட ஒப்பந்தம் வியக்கத்தக்கது. ரஷ்யாவிடம் ஜனநாயக உலகம் நல்ல மதிப்பு வைத்திருக்கிறது. இந்த அசுரப் போரின் பெரும் பலன் சுயேச்சாதிகாரத்தின் தோல்வி; ஜனநாயகத்தின் வெற்றி எனலாம்.

---


# பாலர் மோகினி இரண்டாவது புத்தகம்

## விசேஷ அம்சங்களுடன், அனேக படங்களுடன்!

- ★ பாப்பா பாட்டுகள்
- ★ சங்கீத அப்பியாசம்
- ★ வேடிக்கைக் கதை
- ★ விலங்கு நூல்
- ★ ஹாஸ்ய நாடகம்
- ★ பக்திக் கதை
- ★ நீதிக் கதைகள்
- ★ ஸம்ஸ்க்ருதக் கதை
- ★ மூளைக்கு வேலை-விசேஷப்படங்களுடன்
- ★ மற்றும் ரஸமான அம்சங்களுடன்

ஜகன்மோகினி அளவில் வெளிவருகிறது. உயர்ந்த கிளேஸ் பதிப்பு அணா 6 தபால் மூலம் அணா 7.

உடனே முந்துங்கள்.

பி.ஸ்ரீ

# கம்பன் கண்ட சமரச சன்மார்க்கம்

"யாரையா நீர்? எங்கே தேங்காய், பழம்?" "காணிக்கைக்குக் கூட விதியில்லையென்றால், உடல் வணங்கி, ஒரு கும்பிடு போடவும் சக்தியில்லையா? சுத்த மோசமான ஆசாமி!"

—இப்படி இருவர் ஏக காலத்திலே கூச்சலிட்டதும், மெய்ம்மறந்து நின்றவர் தமது சிந்தனைகளிலிருந்தும் விழித்துக் கொண்டார். "காணிக்கை கொண்டு வந்திருக்கிறேன். கும்பிடத்தான் தெரியவில்லை!" என்று மெள்ளச் சொன்னார்.

இப்படிச் சொன்னவர் வேறொருவருமில்லை; கம்பன் என்ற கவிச் சக்கரவர்த்திதான். அறிந்துகொள்ளாமல் தான் மேலே சொன்ன இருவரும் பழித்தார்கள், பரிகசித்தார்கள். ஏதோ புத்தி புகட்டவும் முயன்றார்கள்.

ஆழ்வார்களின் கொள்கைகளுக்கு இணங்க, ராமானுஜரின் புதிய தரிசனத்திற்கு இசைய, வந்தவர்களெல்லாம் "ஓம் நமோ நாராயணாய" என்று சரணாகதி செய்துகொண்டிருந்தார்கள். அரசர்களும், பிரபுக்களும் வர்த்தகர்களும் ஏராளமாகக் காணிக்கைகொண்டுவந்திருந்தார்கள். கம்பனுள்ளமும், "நாராயணாய நமஃ" என்ற வாக்கியத்தைக் கேட்டதும், அதன் பொருளிலேயே மூழ்கிப் போயிற்று.

—எங்கும்நிறைந்தபரம்பொருளை அல்லவா 'நாராயண' சப்தத்தால் குறிப்பிடுகிறார்கள்? அத்தகைய பரம்பொருளை எந்தத் திசையிலிருந்து எப்படிக் கும்பிடுவது? இந்த விதமாகக் கவிஞர் சிந்தனையென்ற அலைகடலில் முக்கி முழுகிக்கொண்டிருக்கும்போதுதான் மேலே சொன்ன குரல்கள் காதில் விழுந்தன.

## கம்பன் சொன்ன பதில்

நாராயணாய
நமவென்னும் நன்னெஞ்சர்
பாராளும் பாதம்
பணிந்தேத்து மா(று)அறியேன்
காராளும் மேனிக்
கருணாகரமூர்த்திக்(கு)
ஆரா தனைஎன்
அறியாமை ஒன்றுமே!

[ நன்னெஞ்சர்: நல்ல நெஞ்சையுடையவர்கள் (ஆழ்வாராதியர்கள்). ஏத்துமாறு: ஏத்தும் விதம். காராளும் மேனி: மேகம்போல் அழகும் வன்மையும் பொருந்திய திருமேனி.]

அக் காலத்தில் ஸ்ரீ வைஷ்ணவம் என்ற பாகவத தர்மத்தைத் 'தீதில் நன்னெறி' (பரம சாத்விகமான அருள் நெறி) என்று குறிப்பிட்டார்கள்,—இந் நாளில் காந்தியடிகளின் அஹிம்ஸா நெறியைக் குறிப்பிடுவதுபோல. இத்தகைய நன்னெறியிலே நிலைபெற்ற நன்னெஞ்சர்கள் ஆழ்வார்களும் அவர்களை ஒத்த பாகவதர்களும். அத்தகைய பெரியோருக்குத்தான் 'பாராளும் பாதம் பணிந்தேத்தும்' வழி தெரியும் என்பது கம்பன் கருத்து. "அந்த வழி எனக்குத் தெரியாததால்தான் நான் சரணாகதி செய்யாமல் நின்று கொண்டிருக்கிறேன், நெடுமரம் போலே!" என்பது கவிஞனுடைய விநயமான குறிப்பு.

ஆனால் கம்பன் காணிக்கை கொண்டுவந்திருந்ததாகவே சொன்

ஞன். அந்தக் காணிக்கைதான் என்ன? "அறியாமை ஒன்றுமே!" —அறியாமை ஒன்றுதான் இறைவனுக்கு ஒரு சிறிதும் உரியதன்று; தனக்கே ஏகபோகமானது என்பது கருத்து.

தனக்கு ஒன்றும் தெரியாது என்று சொல்லிவந்த ஸாக்ரடீஸ் என்ற அறிவாளியைத்தான் கிரேக்கர் தெய்வம் ஒப்புக்கொண்டதாம். அறியாமையை அறிந்தவன் அறிஞன் என்பது ஸாக்ரடீஸ் கதையின் உட்பொருள். இதே கருத்தைத்தான் திருவள்ளுவரும் வெளியிடுகிறார். அறியாமையை அறிவிப்பது தான் அறிவு என்ற இக்கருத்தைத் தான் கம்பன் எவ்வளவு உணர்ச்சி —வேகத்துடன் பக்தி பரவசமாக வெளியிடுகிறான்!

கம்பன் பாடிய இத்தனிப்பாட்டு இவனது சன்மார்க்கப் பெரு நெறிக்கு ஒரு நல்ல சாட்சி என்று கருதலாம். கம்பனுடைய வைஷ்ணவமும் ராமபக்தியும் ஸாராம்சத்தில் சர்வ சமய சமரசந்தான்.

**ராமாயண-சாட்சி.**

காவிய முகப்பிலேயே இந்தச் சமரச உணர்ச்சி வெளிப்படுகிறது. சாம்பல் பூத்த கோடைமேகம், சிவபெருமானைப்போலச் சென்று திருமாலைப்போல மீளுகிறது, மழைக்கால மேகமாக—என்று கவிஞன் கூறும் மேகவர்ணனையிலேயே சைவ வைஷ்ணவ சமரசத்தைக் காண்கிறோம்.

ராமாவதாரத்தை விஷ்ணுவின் அவதாரமாக மட்டும் இக்கவிஞன் கூறவில்லை. மும்மூர்த்திகளும் ஒருங்கே வந்து ராமனாக அவதரித்தார்கள் என்று அனுமன் வாயிலாக வெளியிடுகிறான். பிரம்மா, விஷ்ணு சிவன் என்ற மூவர்க்கும் முதலான பரம் பொருளே ராமனாக அவதரித்தது என்று கூறுவதும் கம்பனுடைய சமரச உணர்ச்சியைத்தான் வெளியிடுகிறது.

இந்த உணர்ச்சி மேலும் மேலும் விரிந்து செல்லுகிறது. மூலபலவதைசெய்து ராமன் நிற்கும் நிலையை வருணிக்கும்போது, சர்வஸம்ஹார காலத்திலே நிற்கும் நீலகண்ட மூர்த்திபோல் தோன்றுகிறான். மேலும், மகத்தான தியாகங்களைச் செய்து வரும் ராமனுடைய தியாகங்களுக்கெல்லாம் சிகரமாக மூலபல வதையைக் குறிப்பிட்டு, வாய் படைத்தவர்களெல்லாம் ராமனை வாழ்த்தினார்கள் என்று கூறி, உலகத்திற்கெல்லாம் ஒரு லட்சிய மூர்த்தியாக ராமனைக்காட்டுகிறான், கம்பன்.

மேலும் சிவபெருமானை விசேஷ கௌரவத்துடன் கம்பன் குறிப்பிடுகிறான். மூன்று லோகத்திலுமுள்ள பெரியவர்கள் எந்தஎந்த இஷ்டமூர்த்தியை நோக்கி மலர்தூவி வழிபட்ட போதிலும் அந்த மலர்களெல்லாம் சிவபெருமானைச் சூழ்ந்து விளங்குகின்றன என்கிறான். "சிவன் பெரியவன் விஷ்ணு பெரியவன்) என்று வாதாடுகிறவர்களுக்குப் பரகதி அருமைதான்!" என்கிறான்.

எல்லா மதங்களும் ஒரே ஞானப் பிரவாகத்தின் பலதுறைகள் என்று காவிய முகப்பிலே கூறுகிறவன், மிதிலைப் பெண்கள் ராமனுடைய அழகுகளை முடிவுறக் காணவில்லை என்று கூறுமிடத்திலும், பரம்பொருள் பலவேறு சமயங்களிலும் பிரதிபலிப்பதை ஞாபகப்படுத்துகிறான்.

ராமனுடைய தோளைக் கண்டவர்கள் வேறு அழகைப் பார்க்கவேயில்லையாம். காலழகைக் கண்டவர்கள் நிலையும் அப்படியே; கையழகைப் பார்த்தவர்களும் அப்படியே

ஈடுபட்டு மெய்ம்மறந்து நின்ருர்களாம். அந்த வடிவத்தை அந்தப் பெண்கள் முடிவுறக்காணுத்து, பரம்பொருளின் சில அம்சங்களேயே காணும் பலவேறு சமயிகளின் நிலைமையைத்தான் நினைப்பூட்டுகிறது கவிஞனுக்கு. இப்படி வருணிக்கும்போது, ராமனுடைய முகத்தை ஒரு பெண்ணும் பார்த்ததாகக் குறிப்பிடவில்லை. பலவேறு சமயிகளிலும் உண்மையின் முகத்தை அப்படியே கண்டவரில்லை என்பது குறிப்பு.

இவற்றை யெல்லாம் பார்க்கும்போதும், யுத்தகாண்ட முகப்பிலே "உண்டு என்ருல் கடவுள் உண்டு; இல்லை யென்ருல் இல்லைதான்!" என்று கூறுவதைப் பார்க்கும்போதும், "கடவுள் இல்லை என்ற சொல்லிலும் கடவுள் வியாபித்திருக்கிருன்" என்று சொல்வதாகப் பிரகலாதனைக் குறிப்பிடும்போதும், கம்பனுடைய சமரச சன்மார்க்க ஹிருதயம் நாஸ்திகர் உள்ளிட்ட உலகம் அனைத்தையும் பேரன்போடு தழுவிக்கொள்கிறது என்று தோன்றுகிறதல்லவா?

---

ஸ்ரீமதி ரங்கப்ரியை

குடும்ப வைத்தியம் 6

# இருமல் மருந்து

கமலம் :- பாட்டி! வாருங்கள். எப்போது பார்த்தாலும் உங்களுக்கே தொந்தரவு கொடுக்கின்றேன். குழந்தைக்கு ஜலதோஷம் பிடித்துக்கொண்டும், மாரில் கபம் கட்டிக் கொண்டும் இருமலாயிருக்கின்றது, அதற்கொரு மருந்து சொல்லுங்கள்.

பாட்டி:- ஆஹா! காலையில் எழுந்ததும் குப்பமேனி செடியிலுள்ள இலைகளை பூச்சி புழு இல்லாமல் நன்ருய் பார்த்து உன் கை நிறைய பறித்து வந்து கசக்கி ரசம் பிழிந்துகொள். குழந்தை ஒரு வயதுக்குள்பட்டிருந்தால் அரை பாலாடை ரசம் எடுத்துக்கொள். இலையுடன் கூட ஒரு கல் உப்புவைத்து கசக்கிஞயானுல் ரசம் சலசல வென்று வரும். ஒரு வயதுக்கு மேல்பட்ட குழந்தையாயிருந்தால் நிறைய ஒரு பாலாடை ரசம் இருக்கலாம். பெரிய குழந்தைகளுக்கும் இந்த மருந்தைகொடுக்கலாம் பெரியவர்களும் கூடச் சாப்பிடலாம், இதனுடைய குணம் என்ன வென்ருல் வயற்றிலிருக்கும் கபத்தை யெல்லாம் வாந்தியின் மூலம் வெளியில் தள்ளிவிடும். குழந்தையாயிருந்தால் மருந்தைப் போட்டு தொட்டிலில் விடாமல் மடியில் வைத்துக் கொண்டிருக்கவும் மருந்தைக் கொடுத்த அரை மணிநேரத்துக்குள் வயிற்றிலிருக்கும் கோழையெல்லாம் வாந்தியாய் விடும். கடைசியில் பசுமையாக அந்த ரசமும்வெளியில் வந்துவிடும்.

மறுதினம் பசுமஞ்சள், மிளகு, புழுங்கலரிசி, இஞ்சி இதுகளை எண்ணெயில் போட்டுக்காய்ச்சி தலைக்குத்தேய்த்து ஸ்நானம் செய்துவை. பிறகு நுணுஇலை உன்கையால் ஒருபிடி, வேப்பிலை பெரும்பிடியாய் ஒருபிடி இதுகளை பாணலியில் போட்டு அடுப்பின்மேல் வைத்து கருநிறமாகும் வரையில் துடுப்பால் வறுத்துக்கொண்டே யிரு. பிறகு ஒருடீஸ்பூன் கருஞ்சீரகம், ஒருடீஸ்பூன் ஓமம் இதுகளைப் போட்டு பளபள வென்று வெடிக்கையில் கால்படி ஜலத்தை விட்டு ஒருதேர் சுக்கு ஒருதுண்டு சித்தரத்தை நறுக்கிப் போட்டு ஆழாக்கு கஷாயமாகக்காய்ச்சி இரண்டு வேளை விதம் மூன்று நாளைக்கு கொடுத்தாயானுல் கபம் இருமல் எல்லாம் நன்ருய் குணமாய் விடும். அப்படியில்லையேயேல் மறுமுறையும் இதே பிரகாரம் செய்தவருமல் குணமாய் விடும். ஒருகால் கக்குவன் இருமலாயிருந்தால் இதே மாதிரி செய்து கொண்டேவந்தால் ஜாஸ்தியாகாமல் மூன்று அமாவாசைவரையில்இருந்துவிட்டு குணமாய் விடுகிறது. கக்குவான் இருமலாயிருந்தால் மூன்று அமாவாசை கழித்துதான் குணமாகும் என்று பெரியோர்கள் சொல்லுவார்கள் மருந்தின் பேரில் குறைகூருதே. இத்துடன் கூடமஞ்சள் இரண்டு கொம்பு. சித்தரத்தை 2 துண்டு மிளகு ஒருஸ்பூன் இதுகளை நன்ருய் இடித்து தூளாக்கி மூன்று விரல் கொண்ட சிட்டிகை எடுத்து கால் ஆழாக்கு பசும்பாலில் போட்டுக் காய்ச்சி காலையிலும் மாலையிலும் கொடுத்துவா. நன்ருய் குணமாய் விடுகிறது. நான்போய்வருகிறேன்.

பாட்டி! இந்தாருங்கள் மஞ்சள் குங்குமம்.

ஸ்ரீ உ. வே. ப்ர. ப. அண்ணங்கராச்சாரியர் ஸ்வாமி



# இரணியன் வதைக் கதை

(சென்ற இதழ் தொடர்ச்சி)

இவ்வளவுஞ் சொல்லக் கேட்ட ப்ரஹ்லாதன் மீண்டும் தந்தையை நோக்கிச் சொல்லலுற்றான்;— "அப்பா! உனக்கு நான் உணர்த்த வேண்டுவன பலவுமுண்டு; கேளாய்: கல்விச்சாரமாக யான் சொல்லும் வார்த்தை சுருக்கமுடையதாயினும் பிறருடைய சாதாரணமான கல்வி ஞானம் முழுவதையும் தன் வசமாக்கவல்லது, அங்ஙனம் யான் சொல்வதைக் கேளாய். "வித்தின்றி விளைவதொன்றில்லை" என்னும் பழமொழி உனக்குத் தெரியாததன்றே. மூலகாரணப் பொருளாகிய கடவுளொருவரில்லாமல் பிரபஞ்ச தோற்றம் நிகழாதுகாண். நீ கொண்டுள்ள விபரீத ஞானத்தையொழித்து உண்மையை யுணர விரும்புவாயானால் தத்துவப் பொருளை உனக்குக் கையிலங்கு நெல்லிக் கனியாகக் காட்டித் தருவேன்.

ஆதியில் உலகங்களைப் படைத்தவனும் பிரளய காலத்தில் அவையனைத்தையும் தனது திருவயிற்றினுள்ளே அடக்கிவைத்துப் பாதுகாப்பவனும், எல்லாப் பொருளினிடத்தும் அந்தர்யாமியாய் எள்ளினுள் எண்ணெய்போல உள்ளும் புறமும் கலந்து பொருந்துபவனும் அவனேகாண். வேதாந்தமாகிய உபநிஷத்துக்களில் தெளிந்து சித்தாந்தப் படுத்திக் கூறிய பரதத்வம் அவனேகாண். இத் தத்துவமுணரும் பாக்கியம், மாஞானிகட்கே உள்ளதொன்றாம். சகல பிரபஞ்ச வடிவமாய்ப் பரிணமித்துப் பல்வேறு வகையாகத் தோன்றினும் தனது தனி நிலைமை மாறுபடாமலே யுள்ள அக் கடவுளின் தன்மை யாவராயினும் அறியும்படி ஓராளவிற்பட்டதாமோ? யாகம் முதலிய கிரியைகளும் அவற்றின் பலனும் அப்பலன்களைக் கொடுத்தருளுகிற முதற்கடவுளும் அப்பயன்களைப் பெறுகிற சிவனும் அவ்வெம்பெருமானது சொரூபமே. அவனது பெருமையையும் அருமையையும் எவரேலும் அறிவரேல் துன்பக் கடல் கடந்து இன்பவீடடைவர்.

சேதனர்கள் செய்யும் ஒவ்வொரு ஸுக்ருதமானது ஒவ்வொரு பலனை யளிக்கக் கூடியதே யன்றி ஒன்றே எல்லாப் பலன்களையும் அளிக்கக்கூடியதன்று; அப்பரமனது கருணையோவெனில் நினைத்த நினைத்த பயன்களை யெல்லாம் அளிக்கவல்லது. பற்பல தேவர்களை உத்தேசித்துச் செய்யும் ஹோமங்களின் முடிவில் அத்தேவர்கட்கெல்லாம் தலைவனான திருமாலைக் குறித்து "ஓம் ஸ்ரீவிஷ்ணவே ஸ்வாஹா" என்று சொல்லி ஓர் ஆகுதி செய்வர்கள்; அந்த ஆகுதி ஸகல சராசரத்துக்கும் த்ருப்தியளிக்கும் தன்மையை நோக்கி அவ்வெம்பெருமானது உண்மையை உணரலாம்.

பிரமன் முதலிய உயிர்களெல்லாம் அப்பெருமானது திருநாபிக் கமலத்தின் ஒரு பகுதியிலே தங்கும். சிந்தைக்கும் கோசரமல்லனான அத் திருமால் காண்பவர்களுடைய கண்களினுள்ளும் மறைந்துள்ளான்; மாஞானியர்களுடைய மனத்தில் நிறைந்திருப்பான்; பஞ்ச பூதங்களிலும் அந்தர்யாமியாய் மறைந்துள்

ளான். ஸகல பிராணிகளினுடைய வும் மனமொழிமெய்களிற் பொருந்தியுள்ளான்; அவனது நிலைமையை ஆலோசிக்குமிடத்து, ஓர் அக்ஷர மாகிய ஓமென்னும் ப்ரணவத்தில் மறைந்துள்ளான், ஸகல வேதங்களிலும் விரிந்துள்ளான் என்னத்தகும். காமம் வெகுளி முதலிய தீய குணங்களைத் தன்னடியார்க்குத் தீர்த்தருள்கின்ற அத்திருமாலினது திருநாமங்களின் மஹிமையும் அவனது படைப்பமைப்புக் கெடுப்புத் தொழில்களின் திறமும் எவராலேனும் சொல்லித் தலைக் கட்டற்பாலனவோ? இங்ஙனம் ஒப்பற்ற பெருமைவாய்ந்த ஸ்ரீமந்நாராயணனை இகழ்வதனால் அந்தோ! நீ பெற்றிருக்கின்ற செல்வங்களும் ஆயுளும் பெயரும் அழிவது மாத்திரமே யன்றி நிலைபெற்ற வுயிரையும் நீ யிழக்கின்றனையே யென்று நானிரங்கி அப்பெருமானது திருநாமத்தைத் துதித்து அவனை வாழ்த்தினேன், என்ன பிழை செய்தேன் சொல்லிக்காண்'' என்று கூறி முடித்தான் (பிரகலாதன்.)

இவை கேட்டலும் இரணியனுக்குண்டான கோபம் வருணிக்க இயலாததாயிருந்தது. எல்லாவுலகங்களும் அஞ்சும்படி யெழுந்த அக்கோவத்தின் உக்கிரத்தால் ஸூரியன் முதலிய சோதிகளும் மேலுலகமும் சுழலலாயின; பூமியினிடங்கள் அசையலாயின; ரத்தத்தைச் சொரிந்த அவனது கண்களினின்று புகைகள் மேலெழுந்தன; இங்ஙனம் கோவத்தின் எல்லையிலே நின்ற அவன் தனது பரிஜனங்களை நோக்கி 'இப்பாவிப் பயலுக்கு இதனைக் காட்டிலும் என்னோடு விளைக்கும் பகைமை வேறென்று முள்ளதோ? வஞ்சனையாக என் குடலிலே ஊறியிருந்து இப்படிப்பட்ட பகை வடிவமொன்று உண்டாயிற்று. இவனது எண்ணத்தை இன்னமும் அறிய வேண்டுவதில்லை; எனது தொன்று தொட்ட பகைவனை திருமாலுக்கு அன்புமிக்க தொண்டன்யானென்று கூசாது கூறுகின்ற இவனைக் கொன்றிடுங்கள்' எனக் கட்டளையிட்டனன். உடனே யமகிங்கரர்கள் போன்ற அசுரர் பலர் வந்து பிரகலாதனைப் பிடித்துக்கொண்டார்கள்.

கோபாக்கினி சொலிக்கின்ற அஞ்சாத கோக்கையுடையவர்களான அவ்வசுரர்கள் ஒரு யானைக் குட்டியைப் பல சிங்கக்கூட்டங்கள் சூழ்வதுபோல சூழ்ந்து அரண்மனை வாயிலின் பெருவெளியிலே அவனைக் கொண்டுபோய்ச் சேர்த்து ஆயிரக்கணக்கான மழுக்களையும் கூரிய வாட்படைகளையும் உயரவெடுத்து அவன்மீது வீசினார்கள்; உயிருடனே இவனுடலைத் தின்று விடுவோமென்று சொல்லிக் கொண்டு இடிபோல் பயங்கரமாக அதட்டினார்கள். அவர்கள் வீசியெறிந்த மழுக்களும் வாட்களும் பரமபக்தனை அவனை யாதொன்றும் செய்யமாட்டாவாயின. தாக்கவும் குத்தவும் பிளக்கவும் அவர்களெறிந்த ஆயுதங்களெல்லாம் அவனுடலிற் பட்டவளவில் முறிந்து நுண்ணிய துகள்களாய் ஒழிந்து அவனுடம்பு முழுவதிலும் தினவு சொறிதல் போன்ற தன்மையையும் செய்யாவாயின. அங்ஙனமாக அவன் எம்பெருமானது இணைத் தாமரையடிகளையே மேன்மேலுஞ் சிந்தை செய்துகொண்டும் அவனது திருநாமத்தையும் உயர உச்சரித்துக் கொண்டும் விளங்கினன்.

பின்பு அவ்வசுரர்கள் இரணியனிடஞ்சென்று "வலியோனே! எங்களிடமிருந்த சிறந்த பெரிய ஆயுதங்களெல்லாம் பொடியாய்

விட்டன. அவற்றால் உன் பிள்ளையி னுடம்புக்குச் சிறிது தீங்குமுண்டாகவில்லை; இனி நாங்கள் செய்ய வேண்டிய செயல் யாதோ கட்டளையிடவேணும்" என்று கூற, அது கேட்ட இரணியன் "அப்பயல் மாய மனத்தனாதலால் அம்மாயை வலிமைகொண்டு ஆயுதங்களைக் கட்டிவிட்டான் போலும்; இருக்கட்டும்; விரைவாக நெருப்பை மூட்டி நிறைத்து அதில் அவனைத் தள்ளுங்கள்" என்றுரைத்தான்.

அங்ஙனமே அவ்வசுரர்கள் நெருப்பை மூட்டுந்தொழிலிலே முயன்று நின்றார்கள். ஒரு பெருங் குழியிலே விறகுகளை மலைபோல உயரமாக அடுக்கி குடங்குடமாக எண்ணெயையும் வெண்ணெயையும் நெய்யையும் சொரிய, நெருப்பு வானத்தளவு மெழுந்து சொலிக்க அதில் பிரகலாதனை யெடுத்துப் போகட்டார்கள். அப்போது அவன் ஹரிநாம ஸங்கீர்த்தனமே செய்து கொண்டிருக்கவே அந்த நெருப்பு குளிர நின்றது.

உடனே அசுரர்கள் இரணியனிடம் ஓடிச் சென்று "மகாப்ரபுவே! உன் மைந்தனைச் சுழன்றெரிகின்ற நெருப்பு மிக்க பெருங்குழியிலே போகட்ட பொழுதும் அந்த நெருப்பு அவனை எரிக்கவில்லை; இனி மற்றும் நாங்கள் செய்யத் தக்கது யாது?" என்ன, இரணியன் கோபாக்கினிபொங்கி யெழுகின்ற கண்ணினனாய் "என் கட்டளைக்கு இணங்கி நடவாத அக்னிதேவனையும் கட்டிக்கொடிய சிறையில் வைத்திருங்கள்; எனது கள்வக்குமரனைப் பிடுங்கித்தின்றுமாறு அஷ்டமஹாநாகங்களையும் அவன்மேல் ஏவுங்கள்" என்றனன். அவ்விரணியன் நினைத்தமாத்திரத்தில் அனந்தன் முதலியன அஷ்ட மஹா நாகங்கள் அங்கு வந்து சேர்ந்து ப்ரஹ்லாதன் மேற் பாய்ந்து தம் விஷப் பற்கள் அழுந்த ஊன்றிக் கடித்தன; அங்ஙனம் கடிக்கவும் ஸ்ரீ சேஷசயனனை ஸ்ரீமந் நாராயணனிடத்துப் பரம பக்தியே வடிவெடுத்த அச் சிறுவன் சிறிதும் வருந்திலன். பாம்புகளுக்கு வைரியாகிய கருடனும் நடுக்க மடையும்படி அந்த அஷ்ட மகா நாகங்கள் ப்ரஹ்லாதனை கடித்துப் பிடுங்கியபொழுது அவற்றின் பற்கள் வலிமை யொழிந்து, ஒடிந்து உதிர்ந்தன; கடிப்பதற்காக அவை பற்களை ஊன்ற வைத்தபொழுது அவற்றின் துளைகளிலிருந்தெல்லாம் விஷம் பாயாமல் அமுதத் துளிகளே ஊறி யொழுகின. (தொடரும்)



○

தாதா! நீ மூணுங்கல்யாணம் பண்ணிண்டயே அதைப்பாத்து பக்கத்தாத்து மாமா பரியாசம் பண்ணினா. இப்ப அவர்மட்டும் அறுபதாங்கல்யாணம் பண்ணிக் கப் போறாரமே அதுக்குமட்டும் நாம்ப பரியாஸம் பண்ண வாண்டாமா?

○

ஸ்ரீமதி "குகப்ரியை"

# சேரி அளித்த செல்வம்

"சிருங்காரமில்லாமல் கதைகள் எழுதமுடியுமா? அப்படியே எழுதினாலும் அவைகள் சுவையுள்ளதாய் இருக்கமுடியுமா? பழந் தமிழ் நூல்கள் "தமிழர் வீரத்தையும் காதலையுமே போற்றி வளர்த்தார்கள்" என்று சொல்லுகின்றன. வீரமும் காதலுமே இலக்கியங்களில் முதன்மையான இடம் பெறுகின்றன. ஆகவே காவியங்களிலும் வீரமோ அல்லது காதலோ இல்லாத காவியம் எப்படி இருக்கமுடியும்? இது கிடக்கட்டும். இன்று இலக்கிய உலகில் காதற் கதைகள்தான் மனங்கவரும் தன்மையுடையதாயிருக்கின்றன. பண்டை நூல்களில் அகப்பொருள் நூல்கள்தானே மிகுதி. ஆகவே, காதலும் வீரமும் இல்லாத கதையில் சுவை ஏது!" என்று சிலர் சாதிப்பதுண்டு.

இந்தக் கேள்விகளுக்கு எழுந்து நின்று விடை சொல்வதுபோல் அமைந்திருக்கின்றன சில கதைகள். பொதுவாக இயல், இசை, நாடகம் என்னும் மூன்றினுள், நாடகங்களில் தெலுங்கிலே பத்ராசல இராமதாஸரது சரிதமும், தமிழிலே நந்தன் சரித்திரமும் சிறந்த உதாரணங்கள்.

'நந்தன் சரித்திரம் ஆனந்தம்" என்கிறார் நாடகத்திறமை மிகுந்த கீர்த்தனாசிரியர் ஸ்ரீ கோபாலகிருஷ்ண பாரதி. நம் தமிழ் நாட்டு மக்களிடத்திலே நந்தனைப் பற்றியாவது, அவன் சரித்திரம் 'தேனினும் பாலினும் இனியது' என்றாவது சொல்லவே தேவையில்லை. தென்னாடுடைய சிவன் என்று சிவபெருமானைக் குறிப்பதுண்டு. அதைவிடத் தென்னாட்டிலே பிறந்த எங்கள் நந்தன் தென்னாட்டிற்கே உரிய தனிப் பெரும் செல்வம் நந்தன் என்று சொல்லவேணும் என்றே நமக்குத் தோன்றுகிறது.

பக்தியே உருவெடுத்து வந்தது போலிருந்த அந்த நந்தனுக்குக் கோயில் உண்டா? அவனை உலகம் கடவுளாக, அல்ல தீண்டாமையை ஒழிக்கவந்த ஒரு ஆதர்சப் புருஷனாகக் கொண்டாடுகிறதா? என்று கேட்டால் அதற்கு விடையளிப்பது மிகவும் சுலபம். சேரி தந்த செல்வன் மக்களது நெஞ்சிலே இடம் பெற்றுவிட்டான்! அது போதுமா? போதாது. ஆகையால் 'திருப்புன்கூரிலே சிவாலயத்தின் வடகிழக்கு மூலையில் சிலா ரூபமாய் இன்றும் உட்கார்ந்திருக்கிறான்.

* * * *

வைத்தீச்வரன் கோயில் புகை வண்டி நிலயத்திலிருந்து சுமார் 10 மைலுக்குள்ளிருக்கும் அந்த அழகிய கோயில். நாற்புறமும் பச்சைப் பசேலென்று அலை வீசும் வயல்கள் அங்கங்கே சிறுசிறு கூட்டமாய் நிற்கும் குளிர்தரும் சோலைகள் இவைகளுக்கிடையே வளைந்து வளைந்து செல்லும் சிறு பாதை. அந்தச் சிறு சாலையில் இரண்டு வண்டிகள் ஒரே சமயத்தில் செல்லமுடியாது. சாலையில் இருபுறமும் அழகிய சரக்கொன்றை மரங்கள் சிவபெருமானது திரு உருவை நினைவு மூட்டும். அந்தி வெயிலில் மின்னும் மஞ்சள் நிறமுள்ள அம் மலர்களைப் பார்க்கும்பொழுது, சரக்கொன்றையல்ல, பொன்கொன்றை என்றே தோன்றும். சாலையை ஒட்டி அங்கங்கே சிறு சிறு நீர் நிலைகள், அல்லியும்

ஆம்பலும் பூத்து நிற்கும். நாரை கொக்கு, வக்கா முதலிய புள்ளினங்கள் பசுமையான அந்த வயல்களுக்கிடையே வெள்ளை வெளேரென்ற தமது கூட்டத்தாரோடு சித்ரம்போல் காட்சி தரும். கண்ணுக்கெட்டிய தூரம் ஒரே பசுமை.

உழவர்கள் தோள்களிற் கலப்பையைச் சுமந்து எருதுகளைக் கயிற்றோடு விட்டுவிட்டு அவைகளின் பின்னே மெல்ல மெல்லத் தெம்மாங்கு பாடிச் செல்வர். அந்தி வானத்தின் அழகும், அந்தப் பசுவயல்களின் பேரெழிலும் அங்கங்கே காணப்படும் அழகிய சின்னஞ் சிறு நீர் நிலைகளும் இயற்கையரசியின் மாட்சியைக் காண்பிக்கும். எங்கெங்கேயோ எப்பொழுதோ படித்த மருத நிலக் காட்சிகள் நம் கண் முன் விரியும்.

**தண்டலை மயில்களாட**
**தாமரை விளக்கந்தாங்க**
**கொண்டல்கள் முழவினேங்க**
**குவளை கண் விழித்து நோக்க**
**தெண்டிரை எழினி காட்டத்**
**தேம்பிழி மகர யாழின்**
**வண்டுகளினிது பாட**
**மருதம் வீற்றிருக்கும் மாதோ!**

என்று கம்பர் இந்தச் சோழநாட்டு மருத நிலத்தின் பெருமையைத் தான், தான் கண்ட கோசல நாட்டிற்குக் கொண்டுபோய்விட்டாரோ? என்று சிந்தித்த வண்ணம் இந்த அற்புதக் காட்சியிலே மெய்மறந்து போவோம். திடீரென்று வண்டியின் சட்டங்கள் தலையின் பின்புறம் மோதும். சொப்பன உலகிலிருந்து தடாலென்று கீழே விழுவோம்.

வைத்தீசுவரன் கோயிலிலிருந்து திருப்புன்கூர் செல்லும் பாதையில் 'நொடி' அதிகமில்லை என்றுதான் வண்டிக்காரன் சொல்லுவான். ஆனால் குறைந்தது நாலு தடவையாவது தலையோடு தலையோ, வண்டியின் சட்டங்களோ மோதியே தீரும். அதிலும் அந்த ஒற்றை வண்டி எருதுகளோ மாதம் காதவழி மாயமாய்ப் பறக்கும். இந்த வைபவத்தில் இடை இடையே வண்டிக்காரனுக்கு 'குஷி' கிளம்பிவிடும். உச்சஸ்வரத்தில்,

**அரும்பரும்பாய் வெற்றிலையாம்!**
**செட்டிக்கடை மிட்டாயாம்!**
**மிட்டாயி வாங்கித்தாரேன்**
**தங்கம் நில்லாலே.**

என்று முடித்து, டுர்ரீ! என்று மாடுகளை விரட்டிக் கையிலுள்ள சாட்டைக் கழியை வண்டிச் சக்கரத்தில் வைத்து 'டகடகடக'வென்று சப்தம் செய்வான். அவனை நாம் என்ன சொல்ல முடியும்?

சுமார் ஒரு மணிநேரம் சென்றால் தொலைவிலிருந்து அழகிய கலசங்களோடுகூடிய உயர்ந்த கோபுரம் தெரியும். கோபுரங்கள் வைத்தீச்வரன் கோயிலவ்வளவு பெரியதல்ல. அவைகளுடன் ஒப்பிடும் போது சிறியவைதான். கோபுர வாசலை அடுத்து வலப்புறத்தில் விசாலமான குளம். நாற்புறமும் வரிசையாய் வீடுகள். குளக்கரையின் ஒருபுறத்துத் தெருவேதான் சந்நிதித் தெரு. சந்நிதித்தெரு மிகவும் அகலம். மற்ற மூன்றும் குறுகலானவை. குளத்திற்கு நேர் எதிரே கோயிலை அடுத்து அழகிய கல்தூண்களுடன் கூடிய பெரிய சத்திரம். சத்திரத்தின் திண்ணைகளில் அகதி, பரதேசிகளின் கூட்டம். இராமலிங்கரது திருவருட்பாவின் அடிகளை அங்கொன்றும் இங்கொன்றுமாகச் சிலர் பாடிக்கொண்டிருப்பார்கள்.

மிகவும் அழகிய அந்தக் குளம் மாசுமறுவின்றித் தெளிந்து பெரியோர்களின் நெஞ்சம்போலிருக்கும். கைகால் கழுவ இறங்கினாற்போதும்

பெரிய பெரிய மீன்கள் (சராசரி ஒரு வாழைப் பூவின் மடலவ்வளவு பெரியது) நம்மைக் கண்டதும் துள்ளிக் குதித்து ஓடும். அந்தக் குளத்திலே மீன்களை ஒருவரும் பிடிப்பதில்லையாம்! செக்கர் வானத்தின் அழகும், அந்தக் குளத்தில் தோன்றும் பிரதிபிம்பமும், வெள்ளி நிறமுள்ள அந்த மீன்களின் விளையாட்டும் எங்களை அங்கேயே நிற்கச் செய்தன. இதற்குள் சந்த்யாகால பூஜைக்குரிய மணிச்சத்தம் கேட்க நாங்கள் கரை ஏறினோம்.

கண்டாமணி ஆடுது கண்டுபிணிவாடுது
பரவசமாகுது பாவங்கள் போகுது.

என்று யாரோ ஒரு பக்தர் மெய்மறந்து மாஞ்சி ராகத்தில் பாடிக்கொண்டே போனார். நாங்களும் பரபரவென்று நடந்து கோபுர வாசலை அடைந்தோம். எந்தக் கோபுரவாயிலிலும் கிட்டாத அந்த அற்புத சேவை. வழியில் மறைவின்றித் தீபாராதனைகள் அங்கிருந்தே எங்களுக்குக் கிடைத்தன.

அடாடா! நமக்கே எத்தகைய மெய் சிலிர்ப்பு. நந்தி விலகியதும் நந்தனுக்கு எத்தகைய பரவசம் ஏற்பட்டிருக்க வேண்டும்? ஆ! அந்த நந்தனுடைய ஒப்பற்ற பக்தி தான் என்ன? ஆவல் மிகுதியினாலே

சிவலோகநாதன் திருச்சன்னிதானம்
மலையாகி நந்தி மறைத்திடும் இங்கே
பலகாலம் செய்த பாழ்வினை குவிந்து
மலையாகி இப்படி மறைத்ததோ?

என்ற உடனே சிவபெருமான் பயந்துபோனாரோ என்றுநினைக்கும் படியிருக்கிறது பின்நடந்த சம்பவம்.

"சற்றே விலகி இரும் பிள்ளாய்! திருநாளைப் போவானல்லவா வந்திருக்கிறான்!" என்று கொஞ்சலாய்ப் பேசுகிறார். மேலும், நான் சொல்லு முன்பே நீ விலகி இருக்கவேணும் என்று கண்டிப்பதுபோல—அவன் சித்தம் குறையில் நமது செல்வம் முற்றும் குறையும்—அதாவது பக்தன் மனம் கோணலாகாது என்ற என்ற தேவ இரகசியத்தையும் வெளியிட்டாராம்! இத்தகைய அற்புதம் நிகழ்ந்த அந்தப் பவித்ரமான இடத்தை மிதிக்கும்போது, நமது உடல் புளகித்து மெய்மறந்துபோவதில் ஆச்சர்யமென்ன?

தீபாராதனை முடியுமுன்பே நாங்கள் நந்தி மண்டபத்தை அடைந்தோம். அங்கே நாங்கள் கண்ட காட்சி மின்னும் வியப்புக் கடலில் ஆழ்த்தியது. விலகிய நந்திதேவர் தம் உரிமையை முற்றும் விட்டுவிட விரும்பவில்லை. ஒரேவாயிற்படியில் 2 குழந்தைகள் ஒரேசமயத்தில் நின்றால் எப்படிப் பக்கத்திற்கு ஒருவராக நிற்பார்களோ, அப்படி ஒரு புறத்துக் கோபுரக் கதவுக்கு நேர் எதிரிலேதான் விலகி நிற்கிறார்.

அடியிலிருக்கும் பீடம் ஐந்தடி உயரமிருக்கும். அதன் மேல் திமிலைச் சிலிர்ப்பது போலவும் நாவினால் உதடுகளை நக்கிக்கொண்டிருப்பது போலவும் நிமிர்ந்து படுத்திருக்கும் அந்த நந்தியின் உருவம் மொத்த உயரம் பன்னிரண்டு அல்லது பதினன்கு அடிகள் இருக்கலாம். இதை 'மலைபோலே ஒரு மாடு படுத்திருக்குது' என்று சொல்லாமல் வேறெப்படிச் சொல்லமுடியும்? சற்றே எட்டி நின்றுதான் அந்த நந்திதேவரது முகத்தைப் பார்க்கவேணும்.

நந்தி மண்டபம் தாண்டிச் சில படிகள் ஏறினால் மிகப் பெரிய பிராகாரம், துவாரபாலகர்கள் மற்றக் கோயில்களில் நிற்பது போலின்றி தலையைச் சாய்த்து ஆச்சர்யத்தினால் மலர்ந்த கண்களுடன், நந்தனையும் நந்தியையும் எட்டிப் பார்ப்பது போல் நிற்கிறார்கள்!

அந்தப் பிராகாரத்திலே சிவபெருமான் சந்நிதிக்கு இடதுபுறமாகத்

தேவியின் சந்நிதி. தேவியின் பெயர் வடிவுடையாள் அதாவது திரிபுர சுந்தரி. பெயருக்கேற்ப மூவுலகங்களையும் வென்ற வடிவழகியாய், கைகளை நீட்டி நம்மைத் தழுவி எடுத்துக் காக்க நிற்பவள்போல் நிற்கிருள். வெள்ளியினுலான பெரிய பிறை வடிவம் ஒன்று தேவியின் மங்கல நாணேடு இசைக்கப்பட்டிருக்கிறது. அதன் கருத்தென்னவென்று சொல்வார் இல்லை.

வைத்திச்வரத்தைப் போலவே இங்கேயும் சிவபெருமான் செப்புக் கவசமணிந்த இலிங்கவடிவுதான். பெயர் புற்றிடங் கொண்டார். ஆகவே, புற்றே சிவபெருமான் என்றும் சொல்வதுண்டு. ஆறுகால பூஜை மிகவும் விமரிசையாய் நடைபெறும். ஜனநெருக்கம் அதிகமில்லாவிட்டாலும், ஓதுவார்களின் பாடல், நாட்டியம் முதல் எல்லாம் வெகு பக்திச்ரத்தையோடு அனுசரிக்கப்படுகின்றன. அந்த அழகிய சிற்றூரில் மிகச்சிறந்த மேளக்காரரும், எம்பெருமான் அளிக்கும் மானியத்தோடு திருப்தியாய், அவருக்கு இசைப்பணி செய்வதே பெரும் பேறு என்று வசிக்கின்றனர்.

அர்ச்சனை, அபிஷேகம், பூஜை இவைகள் முடிந்து மறுபடி நந்தி மண்டபம்வரச் சுமார் ஒருமணி நேரமாயிற்று. குழந்தைகள் பிராகார முழுவதும் ஓடியாடித்திரிந்து வந்து சேர்ந்தார்கள். அமைதியான அந்தக் கோயில் தவம்செய்வோர்க்கே உரியது என்று தோன்றிற்று.

* * * *

நந்திமண்டபத்தை அடுத்த பெரிய பிராகாரத்திலே ஈசான்னிய மூலையில்தான் நந்தன் கோயில். அழகிய கற்சிலையாக நமது கண்முன் தோன்றுகிருர். பழைய நூல்களிலே சித்திரத்தில் மரத்தடியிலே சப்பணமிட்டு உட்கார்ந்து யோகத்தில் அமர்ந்திருக்கும் முனிவர்களைப் போல, கால்களைச்சப்பணமிட்டு சின்முத்திரையுடன் கூடிய சையராய் உட்கார்ந்திருக்கிருர். தலையிலிருந்து சடைக்கற்றைகள் இரு தோள்களிலும் வழிந்து தொங்குகின்றன. கண்மூடி மௌனியாயிருப்பது போல் தோன்றுகின்றது முகமண்டலம்.

சிவநாமாவளிகளையே சொல்லி, பில்வத்திலுைம்,விபூதியிலுைம் அர்ச்சித்து, முடிவில், "இவர்தான் திருநாளைப்போவார் என்கிற நந்தனர், அக்னியிலே மூழ்கி முனிவடிவம் பெற்ருர், சிவலோகநாதனும் கணபதியும் பிரத்யக்ஷமான ஸ்தலம்." என்று சடபடவென்று அடுக்கிக் கொண்டே போனர்.

"அக்னியிலா மூழ்கினர்! தீ என்பது கற்பனை. ஞானக்னியிலல்லவா குளித்திருக்க வேணும்?' என்று நமது உள்ளுணர்வு கேட்கும்.நந்தன் சந்நிதியிலே ஏற்படும் அந்தத் தெய்வீக உணர்ச்சி "பிறப்பு நலம் தருமோ? பேதையீரே!" என்று நம்மைக் கேட்பதுபோலிருக்கும். நாங்கள் நெடுநேரம் மெய்மறந்து அந்தச் சந்நிதியின் வாயிலிலேயே நின்றுவிட்டோம். கோபாலகிருஷ்ண பாரதிகள் கண்டதும், சேக்கிழார் சொன்னதுமான பல அற்புதக் காட்சிகள் எங்கள் சிந்தையில் ஓடத்தொடங்கின.

புலைப்பாடியும்—கூரைவீடும்—சுரைபடர்ந்திருப்பதும் அதைச் சுற்றிலும் நாய்கள் குலைத்திருப்பதும், பருந்தோடி வட்டமிடுவதுமான காட்சிகள் — படிப்படியாய்த் தோன்றின. எவ்வளவு நேரம் இந்த நிலையில் நின்றிருந்தோமோ தெரியாது. பிராகாரத்திலே, கோயிலின்

பின்புறத்துக் கோபுரவாயிலில்தான் நந்தன் குளம் என்று குருக்கள் சொன்னதும் நிலை பெயர்ந்தோம்.

அந்தப் பெரிய பிராகாரமுழுவதும் மதுரைக் கோயிலின் ஆடி வீதிபோல, பெரிய பெரிய பலகைக் கற்கள் பரவியிருந்தன. நெல், கேழ்வரகு, உளுந்து, முதலியவைகளை உலர்த்தி வாரிக் களஞ்சியங்களுக்குச் சுமந்து சென்று கொண்டிருந்தார்கள் சில பெண்கள். "ஏதேது! இந்தப் புற்றிடங்கொண்டார் பெரிய சம்சாரிபோலிருக்கிறதே" என்றாள் திரிபுரம். "ஆமம்மா! சகல சராசரங்களுக்கும் படியளக்க வேண்டாமா?" என்றார் குருக்கள்.

* * * *

சாதாரணமாகத் தகப்பனார் ஒரு சிறந்த செயலைச் செய்திருந்தால் மைந்தரும், தாமும் அப்படிச்செய்ய வேணுமென்று ஆசைகொள்வது சகஜம். ஆனால் தந்தை தன் பெருமைக்கும் கௌரவத்திற்கும் தகாத ஒரு செயலைச்செய்தால் மகனும் செய்யவேணுமென்று விரும்புவானா? என்று யாராவது நம்மைக் கேட்டால், செய்யவும் மாட்டான் விரும்பவும் மாட்டான் என்று பதில் சொல்லுவோம். ஆனால் இதற்கு நேர்மாறான ஒரு செயல் திருப்புன்கூரிலே நடந்தது. தந்தையாகிய சொக்கலிங்கப்பெருமான் பிட்டுக்கு மண்சுமந்தாரே, நாமும் ஒருநாள் சுமந்து பார்க்கவேணும் என்று ஆசைப்பட்டாராம் பிள்ளையார். குட்டையைக் குளமாக்கவேணுமென்று தொடங்கிய நந்தனுக்கு எதிரில் கூடையும் மண்வெட்டியுமாய் வந்து நின்றாராம் பிள்ளையார்.

"நீ ஆரப்பா?" என்றார் நந்தனார். வந்தவனோ விஷமச்சிரிப்புடன் விகடமாக "நான் உன் ஆளப்பா" என்றான். "குட்டையைக் குளமாய் வெட்டுவேன்" என்று பிராசம் பேசாமல் மோனை முறியாமல் சொன்னார் நந்தனார். அந்த மனிதன் இளநகையரும்பி—"வெட்டினால் வெகு புண்ணியம்" என்றான்.

"அற்பமாய்ப் பதக்கு நெல் கொடுப்பேன்" என,

"அப்பனே! இது போதும் போதும்" என்றானாம். அந்தக் கூலியாள் வெட்டிய அழகிய குளம் மேலண்டைக்கோபுரத்திற்கெதிரே, பெரிய ஏரிபோல் நீர் நிறைந்து, கொட்டியும், ஆம்பலும் பூத்து நிற்கிறது. இதற்கு அழகிய படிக்கட்டுகள் இல்லை. சுற்றிலும் புற்களும் பூண்டுகளும் முளைத்து புதர்புதராய் மண்டிக்கிடந்தும் தீர்த்தம்மட்டும் மாசுமறுவின்றித் தெளிந்து பார்க்கும் பொழுதே உடலும் உள்ளமும் குளிரும்.

கோயிலை மும்முறை வலம்வந்து வணங்கி வெளியேவந்தோம். மெல்ல மெல்ல வந்து வண்டியைக் கட்டினான் வண்டிக்காரன். குழந்தைகள் அந்த ஊமை வெளிச்சத்திலே ஒருவரோடொருவர் மோதிக் கூச்சலிடத் தொடங்கினர். விட்டுப் பிரிய மனமில்லாமல் திரும்பத் திரும்பப் பார்த்த வண்ணம் நாங்கள் வண்டியில் ஏறினோம். எங்கள் தயக்கத்தைக் கண்ட வண்டிக்காரன், "எத்தனை நாள் தங்கினாலும், எத்தனைமுறை தரிசனம் செய்தாலும் தெவிட்டாது திருப்புன்கூரார் சந்நிதி. நானும் ஒன்றுவிட்டொரு நாளாவது வராமலிருப்பதில்லை. சாமி இருக்கிறது சென்னப்பட்டணமா! கட்டாயம் திருவிழாவுக்கு வந்துடுங்க" என்று அகமும் முகமும் மலர்ந்து உபசரித்தான்.

வண்டி உடலைச் சுமந்து செல்ல, மனம் அந்தக் கோயிலின்மீதே சுழன்று நிற்கிறது.

# தவளையும் காக்கையும்

ஒரு அழகான பூந்தோட்டம். அந்தத் தோட்டத்தின் நடுவிலே ஒரு குளம். அந்தக் குளத்தில் பல தவளைகள் வாசம் செய்து வந்தன. அவைகளில் ஒன்று கரையேறி வந்தது; குதித்துக் குதித்துத் தாவித் தாவிச் சென்றது; மல்லிகை முல்லை ரோஜா முதலிய செடிகள் நிறைந்திருந்த ஒரு இடத்திற்குப் போய்ச் சேர்ந்தது.

இந்த இடம் பார்வைக்கு அழகாயிருந்தது. இதனல் தவளை சந்தோஷமடைந்தது. இப்போது தவளையின் கண்கள் பளிச்சென்று மலர்ந்தன. அதன் உடம்பு உப்பிற்று.

இப்படியிருக்கையில் அதனுடைய காலைக் காகம் ஒன்று பற்றியது. தவளை 'என்ன இது?' என்று பயந்தது; திறுதிறுவென்று விழித்தது. அந்த நிமிஷமே தன்னைப் பற்றிய காகம் தன்னை உயரத் தூக்கிக்கொண்டு போவதைக் கண்டது. கண்டதும்—"இனி நாம் செத்தோம்" என்றெண்ணி நடுங்கியது; அந்த நிமிஷமே மூர்ச்சையாயிற்று.

இதற்குள் அந்தக் காகம் பறந்துபோய் ஒரு பலாமரத்தின் கிளையிலே உட்கார்ந்தது. இப்போது தவளைக்கு மூர்ச்சை தெளிந்தது. நல்ல நினைப்பு வந்தது "ஆபத்துக்காலத்தில் பயப்படுவது கூடாது. அது மூடத்தனம். அதிலிருந்து தப்ப உபாயம் தேடவேண்டும். அதுதான் புத்திசாலித்தனம்"

என்று அதன் தகப்பனர் அடிக்கடி அதற்குச் சொல்வது வழக்கம். இச்சமயம் அது அதன் நினைவுக்கு வந்தது. உடனே அதற்குத் தைரியமுண்டாயிற்று. இப்போது காகம் தவளையைக் கொத்த எண்ணி இங்கும் அங்கும் பார்த்தது. இதைக் கண்டது தவளை. உடனே காக்கை பிரமிக்கும்படி கலகலவென்று சிரித்தது !

183106.

இதைக் கேட்டதும் காகம் ஆச்சரியமடைந்தது. "இப்போது இன்னும் கொஞ்சநேரத்தில் நீ சாகப்போகிருய் இது உனக்குத் தெரியும். தெரிந்திருந்தும் சிரிக்கிருயே? சாவதில் உனக்கு இஷ்டமா?" என்று கேட்டது.

தவளை:—இல்லை. நீ சற்றுநேரத்தில் சாகப்போகிருய்! அதை எண்ணிச் சிரிக்கிறேன்—என்றது.

காகம்:—எப்படி ?

தவளை:—இந்த மரத்தில் என்னுடைய பாட்டனர் வாசம் செய்கிருர். அவர் பெரிய பலசாலி. யாருக்கும் பயப்

படமாட்டார். அவர் உன்னைக் கண்டால் சித்ரவதை செய்து விடுவார்—

இதைக் கேட்டதும் காகம் பயந்து தவளையைத் தூக்கிக்கொண்டு வேறொரு மரத்திற்குப்போய் ஒரு கிளையிலே உட்கார்ந்தது. உட்கார்ந்ததும் தவளை முன்போல் சிரித்தது.

காகம்:—(பயந்து) "என் சிரிக்கிறாய்?" என்று கேட்டது.

தவளை:—இந்த மரத்தில் என் தகப்பனார் இருக்கிறார். இவர் பொல்லாதவர். உன்னைக் கண்டால் உருவந் தெரியாமல் கொன்றுவிடுவார். அதை யெண்ணிச் சிரிக்கிறேன்—என்றது.

காக்கை பயந்து உடனே அம்மரத்தை விட்டுப் பறந்து சென்றது. வழியில் ஒரு கிணறிருந்தது. அதைக் கண்ட காகம் "தவளையாரே, இந்தக் கிணற்றங்கரை சௌகர்யமாயிருக்குமா?" என்று கேட்டது.

தவளை:—இங்கே உனக்கு ஆபத்திராது. இங்கே என் உறவினர் யாருமில்லை. சௌகர்யமான இடம். நான் உன்னை இரண்டு இடங்களிலே காப்பாற்றியிருக்கிறேன். இல்லையா? நீ அதை யெண்ணி எனக்கு ஓர் உபகாரம் செய்ய வேண்டும். அது உனக்கு விரோதமானதல்ல. கேள்—

"நீ என்னை விடப்போவதில்லை. கொன்று தின்னப் போகிறாய்? இது நிச்சயம்! ஆதலால் நீ உன் மூக்கை நன்றாகத் தீட்டிக்கொண்டு எனக்கு உபத்திரவ மில்லாமல் என்னைக் கொன்று தின்று விடு. இது எனக்கு நீ செய்யும் நல்ல உபகாரமாகும்"—என்றது.

காக்கை, "நல்லது அப்படியே யாகட்டும்"—என்று கூறி அந்தக் கிணற்றங்கரையி லுட்கார்ந்துகொண்டு மூக்கைத் தீட்ட ஆரம்பித்தது. தவளை, "இதுதான் சமயம் தப்பித்துக்கொள்ள என்று நினைத்து—உடனே எழும்பிக் கிணற்றில் தோப் என்று குதித்துத் தப்பிக்கொண்டது!

காக்கைக்கு இப்போது தவளையின் தந்திரம் தெரிந்தது. ஆனாலும் காக்கை "தவளையாரே! நான் உன்னிடம் ஓர் இரகஸ்யம் சொல்லணும் வந்து கேட்டு விட்டுப் போ" என்று தந்திரமாய் அழைத்தது.

தவளை:—நான் எப்படி உன்னிடம் வருவேன்! நீ இங்கே வந்து தூக்கிக்கொண்டு போனால்—என்று கூறிக் கொண்டே தண்ணீரில் முழுகிவிட்டது.

---




கல்யாண முகூர்த்தம் ஆனதும் கல்யாணப்பிள்ளை "ஹி.....ஹி..... நான் நன்னா நடந்துண்டேனா...... எனக்கு இதுதான் புதிசு...முன்னே பின்னே பழக்கமில்லே...ஹி...ஹி ...எல்லாம் சரியா நடந்தேனா...என்றான்..சிரிக்காமல் என்ன செய்வது?

* * * *

ஒரு போலீஸ் உத்யோகஸ்தர் வீட்டிற்கு நாங்கள் போயிருந்தோம். அவரது மனைவி ஏதோ பேச்சுக்கு மத்தியில்....போலீஸ்காரன் பெண்டாட்டி பதிவ்ருதையாயிருக்கமுடியாது...அவரு வர பாதி ராத்திரியாகும். நான் சாப்பிட்டு படுத்துண்டுடுவேன்...என்றாள். எல்லோருமே சிரித்துவிட்டோம்.

* * * *

ஒரு பழைய சிநேகிதரை வெகு நாட்களுக்குப் பிறகு பார்க்க நேர்ந்தபோது அவர் "சரி...நன்றாயிருக்கிறாயா....நன்னாயிரு.... சரிதான் ....நன்னாயிருக்கையோல்லியோ.... சந்தோஷம். சரி......நன்றாயிருக்கிறாயா?"...என்று திரும்பத் திரும்ப இதையே பேசும்போது என்ன பதில் சொல்வது?...

* * * *

எதுக்கு எதுபொருத்தம் நீங்களே பாருங்கள். வெகு நாட்கள் கலியாணமாகாத ஒரு குழந்தை, வயது 22 தான். அதையும் ஒருவன் கல்யாணம் செய்து மறுநாளே பூனாவுக்கு அழைத்துச் சென்றுவிட்டான். பெண்ணைப் பெத்தவர்கள் வழியனுப்ப வந்தார்கள். பெண் போய்விடுகிறாளே என்று தாயார் கண்ணில் ஜலம் ஊறியது. கூட வந்த ஒரு அம்மா..."உம்...ஆண்டாண்டுதோறும் அழுது புரண்டாலும் மாண்டார் வருவரோ மானிலத்தில்...இன்றுப்பலே, நீ இன்னிக்கெல்லாம் அழுதா ஒம் பொண்ணு வருவாளா? போகட்டும்...நாலாறு மாஸம் இருந்து வரட்டும்...அழாதே ...எப்படியிருக்கிறது உபமானம்?

* * * *

ஒரு அம்மாளின் தமையனார் இறந்துவிட்டார். அதற்குப் பலரும் உபசாரத்திற்கு வந்தார்கள். அந்தம்மாள் சொல்லுகிறாளாம்...."சரி... அப்பா பூட்டேர்....மின்னேயே அக்கா பூட்டா....சின்ன அண்ணாவும் இனிமே பூடுவான். படுக்கையாயிருக்கான்...சரி....இனிமே நானும் களம்பவேண்டியதுதான். என்ன... அவாள்ளாம் பூட்டா...நானும் பயணம் புறப்படவேண்டியதுதான்.... ரொம்பநாள் இருக்கக்கூடாது...... என்ன சொல்றே?"....என்றாள்..... இதற்கு எப்படி பதில் சொல்வது... நீங்களே சொல்லுங்கள்...




டாக்டர்:—என்னம்மா! உடம்பு எப்படி இருக்கிறது.

நோயாளி:—கால்வலி தேவலே...

டாக்டர்:—ஓகோ? கால், வலி குறைந்தது. மீதி முக்கால்வலி அப்படியே இருக்கிறதாக்கும்... அதையும் ஓட்டி விடுகிறேன்.

* * * *

டாக்டர்:—திடீரென்று குழந்தைக்கு வயிற்றுப்போக்கு என்றால், என்னத்தைத் திங்கக்கொடுத்து விட்டாய்.

பெண்:—ஐயோ! நான் ஒண்ணுமே கொடுக்கல்லேயே! நேற்று வீட்டிலே விசேஷம். அதுக்கு சேஞ்ச சாப்பாடும் வடையும் போளியும் தவிர, ஒரு பிஸ்கோத்து கூட நான் குடுக்கல்லே எனக்குத் தெரியாதுங்களா...

* * * *

டாக்டர்:—என்ன ... ப்ரஸவித்தவளுக்கு இன்று 5 வது நாளாச்சே பத்தியம் போடலாமான்னு கேட்க வந்தீர்களா?...

வந்தவர்:—அப்படி கேட்பது தான் உலக ரீதியாச்சே. மூணாம் நாளே பத்யம் போட்டு நாலாம் நாளே ஜுரம் வந்து 5ம் நாளே உங்களிடம் வந்துவிட்டேன்...

* * * *

டாக்டர்:—என்னடா உடம்பு?

நோயாளியின் தகப்பன்:—நாலு நாளா ஜொரங்க. எதித்த வூட்டு ஏகாம்பரம் பார்த்து டைபார்டி ஜொரம் இன்னான். பக்கத்து வூட்டு பரசுராமன் டபிள்நிமோனியாங்கரான். அண்டேவூட்டு அகிலாண்டம் டபிள்நிமோனியா இல்லே; ஸிங்கிள் நிமோனியாத்தான் இன்னாள். எங்கமாமன் பாத்து மலேரியா இன்னான். என்பொஞ்சாதி பாத்து இம்பூளுஇஞ்சா இன்னா. கோடி வூட்டு குப்பன் பையன் பாத்து, ஜன்னிஜொரம் இன்னான். எம்பாடு வெலெவெலென்னு போச்சு...... இன்னஜொரம்னு கண்டுகிட்டு போவவந்தேனுங்க...

டாக்டர்:—அடேயப்பா! இனுமே யாருக்கும் ஜொரத்தின்பேர் தெரியலெயாக்கும் பாவம்...அதானே... இதுக்குபேர் ஸரிகம பதனிஸா...... ஜொரம்னு பேர். வீட்டுக்குப்போய் அப்பாவும் பிள்ளையும் பஜனை பண்ணுங்கோ சரியாயிடும்...

* * * *

டாக்டர்:—டேய்! இந்த மருந்தே சாப்பிடு. ரவை கஞ்சி குடி; சோறு தின்னக்கூடாது.

நோயாளி:—என்னங்க ... ஒரே முட்டா பிப்பிடி ரவ கஞ்சி குடிக்கச் சொல்றீங்களே! ஒரு லோட்டா கஞ்சிகூட குடிக்கக்கூடாதுங்களா எனக்கு ரேஷன் கார்டுலேகூட காப்பிடி அரிசிபோட்டு இருக்காங்களே...

# மதுமா மனமா

வை. மு. ஸ்ரீ.

அத்தியாயம் 10

## விழிப்பும் உழைப்பும்

"ஸம்ஸார ஸாகரத்தைக் கடப்பதற்குப் பக்தியாகிய தோணி அத்யாவச்யம். அதை நம்மால் எளிதில் சம்பாதித்துக்கொள்ள முடியாது. எம்பெருமான் அருள, நாம் அதைப் பெறவேணுமாதலால், எம்பெருமானை நோக்கி அத்தகைய பக்திப் பெருங் காதலை அருள்புரிய வேணுமென்று பிரார்த்திப்பதே நமது கடமை. கருணாசாகரனின் கிருபா மூலமாகவே அவன் திருநாமஸங்கீர்த்தனத்தில் ஈடுபட்டுக் கடைத்தேற வேண்டும்.

"ஸம்ஸாரத்தை ஸாகரமெனக் குறிப்பிடுவது எவ்வளவு பொருத்தமானது! கடல் நீர் நிரம்பியிருக்கும்; காற்றினால் அலைமோதப் பெறும்; இறங்கினவர்களை உள்ளே தள்ள வல்ல பல சுழிகளையுடைத்தாயிருக்கும்; முதலைக் கூட்டங்கள் விசேஷமாயிருக்கும். அதுபோலவே இப்பிறவிப் பெருங்கடலும் ஆசையென்னும் நீர் நிரம்பியும், காமமாகிய காற்றினால் கிளப்பப்பட்ட மோகமாகிய அலைகளை யுடையதாயும், புருஷனை உள்ளே அமுக்குவதில் சுழிகளோடொத்த சக்தி வாய்ந்த மனைவிகளையுடையதாயும், பிடுங்கித் தின்பதில் முதலையோடொத்த சக்தியுடைய பிள்ளைகள், கூடப்பிறந்தவர்கள் முதலானோரையுடையதாயுமிருக்கின்றது. கரைகாணவொண்ணாத ஆழ்ந்த ஸம்ஸாரக் கடலில் வீழ்ந்து வருந்துகிற நாம் 'அதனை எவ்வாறு கடக்கவல்லோம்?' என்று சிறிதும் அஞ்சவேண்டியதில்லை.

"நாம் பல பாவங்கள் செய்திருக்கிறோமாகையால் பரலோகத்தில் நமக்கு யமதண்டனைகள் விசேஷமாகக் கிடைக்குமே, என் செய்வது?—என்றும் பயப்படவேண்டாம். இப்பாவங்களாகிய சத்துருக்கள் நம்மேல் ஒரு அதிகாரத்தையும் செலுத்த யோக்யதையற்றவைகளாக ஆக்க ஸ்ரீமந் நாராயணனையே சிந்தித்தல் வேண்டும். துக்க ஸாகரத்திலே ஆழ்ந்தவர்களும் கண்டு களிப்புறும்படி புன்முறுவல் செய்யும் திருமுக மண்டலத்தையுடைய பரம புருஷனிடம் இடைவிடாது தியானம் செய்யவேண்டும்.

"விண்மீதிருப்பாய் மலைமேல் நிற்பாய் கடல் சேர்ப்பாய் என்றபடி பரமபதத்திலும், திருமலையிலும், திருப்பாற்கடலிலும், எங்கும் ஸர்வ வ்யாபியாய் எழுந்தருளியிருக்கும் ஸ்ரீமந் நாராயணனே இங்கும் கோயில் கொண்டெழுந்தருளியிருக்கிறார். இந்த நாராயணகிரி நாதனே வைகுந்த நாதன். அவ்வெம்பெருமானே பக்தியாகிற ஓடத்தைத் தந்தருளி, கரையேறுவதற்கு ஓடமில்

லாது தவிக்கிற மானிடர்க்கு வழிகாட்டி ரக்ஷிக்கட்டும்! நம் இந்திரியங்களைப் பகவத் விஷயத்திலேயே உபயோகப்படுத்தவேண்டும்.

“நாக்கே! நாராயணனை ஸ்தோத்ரம் செய்; நெஞ்சே! கிருஷ்ணனைப் பற்று; கைகளே! திருமாலை ஆராதியுங்கள்; காதுகளே! கருணாசாகரனின் சரித்திரங்களைக் கேளுங்கள்; கண்களே! கண்ணழகனை ஸேவியுங்கள்; கால்களே! பகவத் ஸந்நிதியைக் குறித்துப் போங்கள்; மூக்கே! முகுந்தனின் திருவடிகளிற் சாற்றிய திருத்துழாயை அநுபவி; தலையே! எம்பெருமானை வணங்கு. உள்ளமே! விழித்துக்கொள், கைங்கரியத்தில் ஈடுபட்டு உன்னையும் பிறரையும் உயர்த்திக்கொள்.”

இக்கடைசி வார்த்தைகளை உபந்யாஸகர் சொல்லி முடிக்குமுன், கூட்டத்திலிருந்து ஒருவர் பரபரப்புடன் மெய்சிலிர்க்க ஆவேசத்துடன் ஓடிவந்து அவரது காலடியில் சாஷ்டாங்கமாக விழுந்து, அவர் கால்களைப் பிடித்துக்கொண்டு பக்திப் பரவசத்துடன் கதறினார். “ஸ்வாமி! கண்ணைத் திறந்துவிட்டீர்! வழியைக் காட்டிவிட்டீர்! விழிப்பு ஏற்பட்டுவிட்டது. இனி உழைப்புதான் என் லட்சியம். இதற்குமுன் உம்மிடம் எவ்வளவோ அபசாரப் பட்டிருக்கிறேன். ஸர்வ அபராதங்களையும் க்ஷமித்து என்னையும் ஒரு தொண்டனாக ஏற்றுக்கொள்ள வேண்டும்!”

நாராயணகிரியில் நரஸிம்ஹ ஜெயந்தி உத்ஸவத்தின் போது சன்மார்க்க ஸபையின் ஆதரவில் முதுந்தமாலை உபந்யாஸத்தை உள்ள முருக, பக்திப் பெருக்கெடுக்க, அருளிச்செய்து வந்த நிர்மலானந்த ஸ்வாமிகள் திடீரென்று கோபிநாத சாஸ்திரிகளுக்கு ஏற்பட்ட விழிப்பைக்கண்டு பூரித்தார். ‘கோபிநாதரே! பழங்கதையை மறந்துவிடும். இந்த க்ராமத்தின் பெரிய பண்ணையாகிய நீரே இந்தச் சுற்று வட்டாரத்தில் தொண்டுபுரியத் தகுதியானவர். பணத்தினால் ஏற்பட்டதைவிட பக்தியினால் உமது செல்வாக்கு பன்மடங்கு அதிகரிக்கும். சற்றுமுன் விளக்கியதுபோல், பக்தியானது அவன் அருளினால் தான் வரும் என்பது பிரத்யக்ஷமாகிவிட்டது. ஸம்ஸார ஸாகரத்தில் பெருந்துயருக்கு உள்ளாகிய பிறகே, பகவான் உமக்குப் பக்திக்கண்ணைத் திறந்துவிட்டு, அடியார்க்கடியராகத் தொண்டு செய்யும் பரிபக்குவத்தை அளித்திருக்கிறார். தரித்திர நாராயணனுக்குச் சேவை செய்வதே ஸ்ரீமந் நாராயணனுக்குத் திருவுள்ளம். பகவானைப் பெறுவதில் முக்கிய சாதனம் பக்தி ரூபமான அன்பே. எல்லோரிடத்தும் அன்பு செலுத்த வேண்டும். உம் வட்டாரத்திலுள்ள ஊழியர்களைத் தீண்டாதாரென்று விலக்கியிருக்கிறீர்களே, அவர்களைத் திருக்குலத்தினராக்கி இந்த நாராயணமூர்த்தியின் திருவடிக் கீழ்ப் புகுரவிட்டு பக்திபண்ணச் செய்யும். பக்திபண்ணிக்கொண்டிருந்தால் முக்தி பெறலாமே! உம் வாழ்வில் இன்று ஓர் சுதினம். ஸ்ரீ நரஸிம்ம ஜெயந்தியன்று ஸகல நரர்களுக்கும் ஊழியம் செய்ய முன்வாரும்! பழைய கதையை மறந்துவிடும்!” என்று அன்பொழுக வரவேற்றார்.

* * * *

“இது என்ன ஆச்சரியகரமான சொப்பனம்! என் மனமாறுதல் அடைந்து ஏழைகளுக்கு ஊழியம் செய்யவாரம்பித்து ஒரு வருடத்திற்கு மேலாகிறது. இன்று இப்படி

ஓர் சொப்பனம் தோன்றக் காரணமேன்? ஒருவேளை நான் நிர்மலானந்த ஸ்வாமியிடம் மன்னிப்புக் கேட்டுக்கொண்டு அவருடன் தொண்டனாக உழைக்கவேண்டுமென்பது இந் நாராயண மூர்த்தியின் திருவுள்ளமோ! அதுவும் நரஸிம்ம ஜெயந்தி யன்று நடந்ததாக வன்றோ இந்த சம்பவம் கனவில் தோன்றியது! நரஸிம்ம ஜெயந்தி நாளது சனிக்கிழமை யன்றல்லவா வருகிறது—இன்னும் மூன்றே நாள் தானிருக்கிறது! சரி! என் சகல இந்திரியங்களையும் பகவத் விஷயத்திலேயே உபயோகப்படுத்த வேணுமென்று நினைவுறுத்தவே இந்த சம்பவம் நிகழ்ந்ததுபோலும்......

"நரஸிம்ம ஜெயந்தியன்று ரகுவீரஸிம்ம மகாராஜா சமூகத்தின் முன்னிலையில் ஸ்ரீ நிர்மலானந்தரின் தொண்டனாகச் சேர்ந்து உழைக்க ஆரம்பிக்கிறேன். இந்தக் கனவும் பகவத் ஆக்ஞையின் ஓர் அம்சம் எனக் கருதி, சகல விஷயங்களையும் நிர்மலானந்தருக்குத் தெரிவித்துவிடுகிறேன்" என்று தீர்மானித்தார் சேவகர் சாஸ்திரியார்.

* * * *

நரசிங்கம்பட்டினத்து ஹரிஜன ஊழியக் கழகத்தார் ஸ்ரீ சாஸ்திரியாருக்கு அமோகமான வரவேற்பளித்தனர். நிர்மலானந்தருடன் பேட்டியும் ஏற்பாடு செய்தனர். நரஸிம்ம ஜெயந்தியன்று மாலை அந்த சமஸ்தானப் பத்திரிகைகளில் ஸ்ரீ கோபிநாத சாஸ்திரிகளைப் பற்றியே விசேஷமாக எழுதப்பட்டிருந்தது. அவருக்கேற்பட்ட சொப்பனம், அவரது தீர்மானம், ராஜகுருவுடன் சந்திப்பு, அரசருடன் பேட்டி முதலிய சகல விவரங்களையும் வெளியிட்டு, அதன் முடிவில் சாஸ்திரிகளின் அறிக்கையொன்றையும் பிரசுரித்திருந்தார்கள். அது வருமாறு:—

"என் வாழ்நாளில் இன்று ஓர் சுதினம். இன்று நடந்த விசேஷ சம்பவங்களையும், அவற்றிற்குக் காரணமாயிருந்த பகவத் ஆக்ஞையையும் மேலே குறிப்பிட்டிருக்கிறார்களாதலால் நான் வாசக மஹனீயர்களின் நேரத்தை வீண்போக்க விரும்பவில்லை. இந்த நரஸிம்ம ஜெயந்தியன்று நான் செய்துள்ள தீர்மானத்தைச் சகலருக்கும் தெரிவிக்கவே இவ்வறிக்கையை வெளியிடுகிறேன்.

"ஆதியில் எனக்கிருந்த ஜாதிச் செருக்கும், பணத்திமிரும் என் பிள்ளையின் பித்ரு த்ரோகத்தால் மாறி, என்னை ஒரு ஊழியனாக மாற்றியது யாவரும் அறிந்ததே. புத்ர சோகத்தால் என் மனைவி மறைந்தாள். என் சகோதரி மனக்கலக்கம் தீர பதரிகாச்ரம யாத்திரை சென்றவள் இவ்வுலகையும்விட்டுக் கிளம்பிவிட்டாள். எனக்கு இனி நாராயணகிரியில் யாதொரு வேலையுமில்லை. என் சொத்துக்களை தர்மம் செய்யத் தீர்மானித்திருக்கிறேன். என் சுயார்ஜித சொத்துக்களை என் இஷ்டம்போல் விநியோகிக்க எனக்குப் பூரண உரிமையுண்டு. என் சொத்துக்களை முறையே பங்கிட்டு, பரிபாலிக்க இன்னும் சில தினங்களில் ஒரு கமிட்டி ஏற்படுத்தி, இது சம்பந்தமான பத்திரத்தைத் தயார் செய்யப் போகிறேன். எனக்கென்று காலணாகூட வைத்துக் கொள்ளப் போவதில்லை. என் வீட்டைப் பள்ளிக்கூடமாக அமைத்து, அதற்கென நிதி ஒரு லக்ஷமும், நாராயணகிரி கோவில் கைங்கரியத்திற்காக ஒரு லக்ஷமும் எழுதிவைக்கப் போகிறேன். முன்பொரு சமயம் நான் கொடுமை செய்த ஹரிஜனப் பெண் மாரியம்மாவுக்குப் பத்தாயி

ரம் ரூபாய் அளிக்கத் தீர்மானித்திருக்கிறேன். அவள் இப்போது எங்கிருக்கிறுள் என்று தெரியாததால், இந்த அறிக்கையைக் கண்ணுற்றால் அவள் உடனே எனக்குத் தகவல் கொடுக்கும்படிக் கேட்டுக்கொள்கிறேன். என்னிடம் பண்ணையாட்களாக ஊழியம் செய்த ஒவ்வொருவனுக்கும் ஒரு காணி நிலம் அன்பளிப்பாகக் கொடுக்கப் போகிறேன். மிகுதியுள்ள சகல சொத்துக்களையும் (ஜாபிதா தயார்செய்து) ஹரிஜன ஊழியக் கழகத்திற்கே எழுதிவைத்து விடப்போகிறேன். இன்னும் சில தினங்களில் இவை சம்பந்தமான சகல பத்திரங்களையும் எழுதி சரியான கைகளில் ஒப்படைத்துவிட்டால் எனக்குப் பூரண நிம்மதி ஏற்படும். பிறகு, என் கடன் பணி செய்து கிடப்பதே!"

தந்தையை விட்டுப் பிரிந்து சீமையில் தனிவாழ்வு வாழும் பிள்ளைக்கும் இவ் விஷயம் தெரியும் பொருட்டு, தகுந்த முன்னுரையுடன் ஷை விவரங்கொண்ட அறிக்கை சீமைப் பத்திரிகைகளிலும் விளம்பரம் செய்யப்பட்டது.

* * * *

பொது ஜனவக்கு புகழ்மாலையைச் சூட்டலாயிற்று. "எல்லாவற்றிற்கும் மனம்தான் காரணம். உள்ளத்தில் விழிப்பும் சத்காரியத்தில் உழைப்பும் ஏற்படுவது மனத்திரு விளையாடலே!

---

## க்ஷேம லாபங்கள்

நாளது 1-10-45 முதல் காகிதக் கட்டுப்பாடு திட்டங்களை ஓரளவு தளர்த்தி சர்க்கார் அறிக்கை வெளியிட்டிருப்பதை நேயர்கள் கவனித்திருக்கலாம். ஜப்பானிய யுத்தம் ஆரம்பித்ததிலிருந்து இதுவரை—கடந்த மூன்றரை வருடங்களில் வெளியாகி முற்றும் செலவழிந்து விட்ட மோகினி பிரசுரங்களின் புதிய பதிப்புகள் விரைவாகத் தயாராகி வருகின்றன வென்பதைச் சந்தோஷத்துடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

நிற்க, நந்தவனமும் பாலர்மோகினியும் அதிகப்படியான வாசகர்களுக்குக் கிடைக்கும்படியாகவும் ஏற்பாடு செய்து வருகிறோம். பாலர்மோகினி பெரிய அளவில் வெளிவருவது பற்றியும், நந்தவனம் இனி குறைந்த விலையில் வெளிவருமென்பதைப் பற்றியும் வேறு இடங்களில் அறிவிப்புகளைக் காண்க.

பத்மினியின் சிறுகதைகள் இப்போது ஒரு தனிப்புத்தக வடிவில் உருவாகி, ஸ்ரீமதி தமிழினியின் முன்னுரையுடன் வெளியாகியிருப்பதை வாசகர்கள் வரவேற்று ஆதரிப்பார்களென்று நம்புகிறோம். வேறொரு பக்கத்தில் விஷய அட்டவணையுடன் விவரமான அறிவிப்பைக் கவனிக்கவும். இப்புது எழுத்தாளிக்கு மோகினி அன்பர்கள் பேராதரவுகாட்டி உத்ஸாகமளிக்கும்படியாகக் கோருகிறோம்.

நாளது நவம்பர் மோகினியில் வாசகர்களுக்குக் குதூகலமளிக்கும் விசேஷச் செய்தியை வெளியிட முடியுமென்று நம்புகிறோம். நினைவிருக்கட்டும். —ஆசிரியை

# ஆசைப்ரவாகம்

**வை. மு. கோ**

**67வது நவீனம்....**

## 31

தலைகால் தெரியாத சந்தோஷம், சுலோசனாவின் குடும்பத்தையே முற்றுகையிட்டுக்கொண்டது என்றால் மிகையாகாது. இந்தியாவின் (Map) உருவம்போல் ஒரு கை அகலத்திற்கு வைரத்தில் பதக்கம் செய்து அதை கவர்னர் பெண் கலியாணத்திற்கு சுலோசனாவின் பெயரில் பரிசு கொடுப்பதற்காக ஏற்பாடு செய்து வைரவேலை வெகு மும்முரமாக நடந்து வருகிறது.

கவர்னரின் மகளுக்கே கொடுப்பதால் வைர ஷாப்புக்காரனின் பெருமையும் கூறத்திறமில்லை. சுலோசனாவின் குடும்பத்தினர் சீமை ப்ரயாணத்திற்குத் தயாராகிவிட்டார்கள். கவர்னரின் ஏற்பாடு என்றால் கேட்கவேண்டுமா? இந்த நாட்டிய கோஷ்டியாருக்கே ஒரு தனிக் கப்பல் சித்தமாயிற்று. முதலில் சில மாதங்கள் தள்ளி கல்யாணத்தை நடத்த இருந்த கவர்னர் தம்பதிகள் யுத்த நிலைமையைக் கண்டதும் இன்னும் போகப் போக தேச நிலைமை எப்படி யாகுமோ! என்கிற பயத்தினால் உடனே கல்யாணத்திற்கு ஏற்பாடுசெய்ததால் இவர்களுடைய ப்ரயாணமும் எதிர்பார்த்ததை விட விரைவில் கூடிவிட்டது.

சுலோசனாவின் மத்தியகால வாழ்வில் அவள் இருந்ததை இப்போது அறவே மறந்தாள். கணவன் வீட்டிற்குப் போனால் பலவிதமான ஒத்திகைகள் நடக்கமுடியாது. அந்த ஒரு அனுகூலத்திற்காகவே தாயார் வீட்டிலேயே இருந்தாள். ஆனால் தன் கணவன் தன்னை எதிர்பார்த்துக்கொண்டிருப்பான் என்பதும் நினைவில்லாமலில்லை. அங்கு போனால் ஒத்திகைக்குத் தடங்கலாவதுடன் சீமை ப்ரயாணத்திற்கே முட்டுக்கட்டை விழுந்தாலும் விழும் என்பதால் துணிந்து இருந்தாள்.

எனினும் அவனிடம் சொல்லிக் கொள்ளாமல் வந்துவிட்ட பிறகு, இன்னமும் பார்க்கவில்லை. அதோடு சொல்லாமலேயே போய்விட்டால் என்ன நினைப்பானோ என்கிற எண்ணமும் ஊடே தோன்றாமலில்லை. நடன கோஷ்டியின் சீமை ப்ரயாணத்தை முன்னிட்டுப் பலவிடங்களில் இவர்களுக்கு தேனீர் விருந்தும் உபசாரப் பத்திரங்களும் அளிக்கப்படுவதால் இந்த வைபவத்தை விட்டு வருவதற்கு மனது இசையவில்லை. ஊருக்குப் புறப்படுமன்று போய் தனுக்காக மயக்கிச் சரிப்படுத்தி விடலாமென்று தீர்மானித்தாள்.

இவர்கள் கப்பலேறுவதற்கு இரண்டு மூன்று தினங்கள் முன்புதான் ரகு வைரஷாப்பில் இவர்கள் செல்லும்போது பார்த்ததும் ஆத்திரத்துடன் திரும்பிவந்ததுமான சம்பவம் நடந்தது. கூறத்திறமற்ற ஆத்திரத்துடன் வீட்டுக்கு வந்தான். கண்மண்ணு தெரியாத வேகத்தில் வரும்போது வாசற்படி தடாரென்று தலையில் பலமாக இடித்ததால் ஹா... என்று தலையை அழுக்கிக் கொண்டு அப்படியே உட்கார்ந்தான்.

தன் கையில் ரத்தம் தோய்ந்திருப்பதையும் தலையில் ரத்தம் வரு

---

குறிப்பு:—பக்கம் 76; காலம் 2. 18-வது வரி முடிந்ததும், அத்யாயம் 29 ஆரம்பம் என்பதைக் கவனிக்கவும்.

வதையுமறிந்து மறுபடியும் உள்ளே வந்து, தலையை அலம்பிக்கொண்டு ஈரத் துணியால் அப்படியே சுற்றி இரு கைகளாலும் தலையை அமுக்கியவாறு உட்கார்ந்தான். அடி பட்டதன் அதிர்ச்சியில் மயக்கமாய் இருக்கிறதென்று வந்ததால் உடனே எழுந்துபோக முடியாது போயிற்று.

எனினும் இதயக் கடலில் கொந்தளிக்கும் ஆத்திர அலை ஓயவில்லை. புறப்படும்போது அபசகுனம்போல் ரத்தகாயம் உண்டாகியும் அது இவனுக்கு பொருட்படவே இல்லை. சில நிமிஷங்கள் கழித்ததும் மறுபடியும் எழுந்து வெகு வேகமாக வீதியில் சென்றான். மனப் போருக்கு முன் ரணத்தின் வலிகூடத் தெரியவில்லை. "கருக் கொலை செய்த பாதகியை... ஐயோ! எப்படி முகத்தைப் பார்ப்பது....இன்னும் ஆறு மாதங்கள் சென்றால் ச்வர்ண விக்ரகம்போன்ற குழந்தையின் தாமரை முகத்தைப் பார்த்து என்னிதய சூரியன் மலரும் நன்னாள் என்று வரும்! என்று வரும்? என்று ஏங்கித் துடித்து நிமிஷத்தைக் கடத்திய என் ஆசைக் கோட்டையை இடித்து நிரவிய நாசகாலியின் முகத்தை மறுபடியும் பார்ப்பதா?

அன்னியனுடன் அன்னிய நாடு சென்று மானங் கெட்டு கூத்தாடுவதையே முக்கியமாக எண்ணிக் கொலை செய்த பாதகியை இனி கொண்டு வைத்துக்கொள்வதா!... அவளுடன் மறுபடியும் குடித்தனம் செய்வதா? சிச்சி! இதை நான் சகித்தாலும் உலகம் சகிக்குமா! ஏசிப் பேசி நகைக்காதா! கருக் கொலையின் ரகசியம் ஊரே அறிந்து சந்தி சிரிக்கையில் அத்தகைய மானங் கெட்டவளை மீண்டும் அழைத்து வருவதா?...அப்படி அழைத்து வந்தும் மறுபடியும் ஓடிவிட்டால்?...

அப்பப்ப! அந்த அவமானத்தைச் சகிக்க முடியுமா! ஓடிப்போகிற சண்டாளிக்கு மானமோ, வெட்கமோ ஒன்றும் கிடையாது. அந்தப் பாதகியைக் கொண்டு வைத்துக் கொண்டு, பந்தியில்பரிமாறி உலகை ஏமாற்றித் தம்மைப்போன்ற பெரிய மனிதர்கள், செல்வச் செருக்கு கொண்டவர்கள் உலகிலேயே இல்லை என்று மார்பு தட்ட அவள் அப்பனும் அண்ணனும்... ஏன்? பத்து மாதம் சுமந்து பெற்ற தாயார்கூட சளைக்க மாட்டார்கள். அவர்களுக்கு உலகத்தைப் பற்றிய சிந்தனையே இருக்காது. ஓடிப்போய் சந்தி சிரித்துக் கூத்தாடிய கழுதையை நாய்போல் விலக்காது ஆதரித்து மேளமடித்துவிட்டதை மகத்தான வெற்றியைக் கண்டுவிட்டது போல் துள்ளுவார்கள். அவர்கள் மனது துணியும்... கடவுளுக்கு பயப்படாத பாவிகளாக விருப்பதனால்தானே கருவழிக்க உடந்தையாயிருந்ததோடு பிறத்தியானுடன் ஓடுவதற்கும் தயாராகவிருக்கிறார்கள். என் மனம் அப்படி மானத்தை விட்டு, செத்த உடலாக மறத்துக் கட்டைபோலாகவில்லையே...

வீணாக நாயைக் குளிப்பாட்டி நடு வீட்டில் வைப்பதுபோல் அவளைக் கொண்டு வைப்பதில் இனி என்ன இன்பமிருக்கிறது?... அவளையா இனி நான் மனப்பூர்வமாக நேசிக்க முடியும்?... சிச்சி! குப்பைத் தொட்டியை நான் மதுர பாண்டம் என்று மதிமயங்க இனியுமா கண்ணவிந்து விட்டது?

நல்ல பரிபக்குவத்திற்கு வந்து ஒரு நிலைப்படவிருந்த என் மனத்தையும் மயக்கி, மானத்தையும் போக்கி, கொலையும் செய்து, கூத்தாடவும் துணிந்து ஓடின கழுதையை இனி நான் அழைப்பதா!

வீட்டில் வைத்து சம்சாரம் செய்வதா!...என்னை வேண்டுமென்று வஞ்சித்த பாதகியை மனைவி என்பதா! இம்மாதிரி செய்வதைவிடக் கண்ணை மூடிக்கொண்டு கிணற்றில் விழுந்து சாகலாம்.

ஐயோ பாவம்! மனைவி செய்த கொடுமையைச் சகிக்காது ப்ராணனை விட்டான். அவன் மகா மானி!'' என்று உலகம் என்னைப் பற்றிக் கூறும்படி ஏன் செய்யக் கூடாது? மானம் போனபிறகு இனி குடித்தனம் செய்வதா... சில கம்மனாட்டிகளைப்போல் மனைவி ஓடி விட்டாலும் சரி, சினிமாராணியாய் விட்டாலும் சரி, எப்படியோ சகித்துக் கொண்டு அந்த சண்டாளிகளிடம் கூடிக் குலாவி குடித்தனம் செய்ய என் மனம் சகிக்கவே இல்லையே... ஆம்...கண்டிப்பாக இனி இந்த உயிரை விட்டு விடுவதே சரி. இன்னொரு குழந்தையைப் பெற்றுக் கொண்டு வாழலாம் என்று புத்தி போதித்த பாவிகள் கண் முன்பு அந்த சண்டாளி விதவையாகி மங்களமற்று நிற்கட்டும், பிறகு பிள்ளையைப் பெற்றுக்கொண்டு மகிழட்டும். சீமைக்குப்போய் குதிக்கட்டும். அவளை அழைக்கும் ஆசையை இதோடு ஒழித்துத் தலைமுழுகி விடுகிறேன். எனது சவத்தைக்கூட அவள் பார்க்காதபடிக்குச் செய்து விடுகிறேன் என்று மனம் மாறியவனாய் வெகு தொலைவிலிருக்கிற ப்ரம்மாண்டமான ஏரிக்குச் சென்றான்.

ஜன நடமாட்டம் அதிகமில்லாததால் இடுப்பில் கல்லைக் கட்டிக் கொண்டு ஏரியில் இறங்கி விடுவது என்கிற தீர்மானத்துடன் ஒரு மரத்தடியில் போய் உட்கார்ந்தான், இத்தனை வெறுப்பும் வைராக்யமும் நிறைந்துள்ள மனத்தில் தன்னை உயிருக்குயிராக நேசிக்கும் கிழவர்களின் நினைவு திடீரென்று வந்ததால் அவனையறியாது ஒரு துள்ளு துள்ளினான். "ஐயோ! என்னையே அவர்களுடைய வாழ்க்கைக்கு ஜீவாதாரமாக நம்பியிருக்கையில் என்னால் எள்ளளவு சந்தோஷமும் சுகமும் அனுபவிக்கவில்லை யெனினும் கடைசி காலத்தில் சோகமாவதில்லாதிருக்கும்படிச் செய்யாவிட்டால் நான் பாவியிலும் பாவியாக ஆகமாட்டேனா! தெய்வம் ஒன்று இருப்பதை நம்புகிறவர்கள் பாவ புண்ணியத்தின் தராதரத்திற்குப் பயப்படவேண்டுமல்லவா! இந்த தர்மசங்கடத்திற்கு என்ன செய்வது?"

என்று குழம்பிப்போய் மகத்தான யோசனையிலாழ்ந்துக் கண்ணீர் வடிக்கும் சமயம் ஒரே குரலில் சுமார் நூறு பேர்களுக்குமேல் சேர்ந்து

"வீர வாளை ஏந்தி நாங்கள் தீரப்
போர்கள் புரிகுவோம்.
கோர யுத்தம் செய்து வெற்றிக்
கொடிகள் எங்கும் நாட்டுவோம்:
எதிரியை விரட்டி இன்ப வெற்றி
முரசு கொட்டுவோம்.

என்கிற வீரப்பாடலை வீரர்கள் அணிவகுத்துப் பாடியவாறு செல்லும் இன்னிசையைக் கேட்டதும் அவனுடைய சுண்டிய ரத்தத்தில் அவனையறியாத ஒரு மின் வெட்டு தாக்குதல் பளிச்சென்று தாக்கி, உறைந்தும் சோர்ந்தும் போயிருந்த ரத்தத்தில் துடிதுடிப்பும் உணர்ச்சியும் உண்டாக்கி அவனை எழுந்து இந்த சப்தம் வந்த திக்கைப் பார்க்கச் செய்தது.

நூற்றுக் கணக்கான வீரர்கள் அணிவகுத்துச்செல்லும் அழகையும் சகலத்தையும் தேசத்திற்காக த்யாகம் செய்த அந்த வீரக் கனலின் ப்ரகாசம் அவர்களின் முகத்திலும் கண்களிலும் அபாரமாய் ஜ்வலிக்

கும் அபூர்வ சக்தியையும் அஞ்சா நெஞ்சம் படைத்த வீரத்தின் சோபை அவர்களுடைய நடையிலேயே கம்பீரமாகக் காக்ஷியளிக்கும் அத்புதத்தையும் கண்ட ரகுவின் உணர்ச்சி குபீரென்று மாறுதலையடைந்து அவனேவியக்கும்படி ஒரு நூதன ஆவேசமுண்டாகியது.

முன்பொரு நாள் இதே போன்ற வீரர்களின் பவனி வருவதைக் கண்டதும் சுலோசனாவை வலுவில் இழுத்துக்காட்டியதும் அன்றுநடந்த சம்பவங்களும் அவன் கண்முன்பு சித்திரக் காக்ஷிபோல் தோன்றி அவனைக் குழப்பின. "ச்சீ! சற்று முன்பு பயித்தியக்கார காரியம் செய்ய எண்ணினேனே! இந்த கட்டையை அவசியமாகக் கொலை செய்து ஒருவருக்கும் உதவாப் பிண்டமாக ஆக்குவதைவிட தேசத்தின் நலனுக்கும் பொதுமக்களின் நன்மைக்குமான இந்த அத்புதத்யாக சேவையிலீடுபட்டு ஏன் வீரசொர்க்கம் போகக்கூடாது. நான் சாவதால் யாருக்கென்ன நன்மை? கிழவர்களின் வயிற்றெரிச்சல் ஒன்றுதானே மிஞ்சும்.....கடவுள் மீது ஆணையாக இனி நாளை சாவதில்லை. என்னுடைய சாவும் ஒரு உபகாரமாகவே முடியட்டும்.

எந்த எஜமானரிடம் வேறு ஆபீஸில் மாற்றல் உத்யோகம் கூட வேண்டாம் என்று கேட்டுக்கொண்டேனோ அதே எஜமானரிடம் போய் நான் பட்டாளத்திலேயே சேர்ந்து சேவை செய்கிறேன். என்னை எடுத்துக் கொள்ளுங்கள் என்று கேட்டு உடனே கிளம்பிவிடுகிறேன். நான் அதிக பணம் சம்பாதித்து யாரைக் காப்பாற்றவேண்டும்?... ஆம்... இது தான் தீர்மானமான முடிவு!"...என்று வெகு உறுதியாக எண்ணியபடியே வீட்டை நோக்கிக் கிளம்பினான்...

## 32

"என்ன ரகுநாத்! நீ கூறுவது உண்மையான வார்த்தையா! வெளியூருக்குமாற்றுகிறேன் என்பதற்கே தியங்கி மயங்கி பயந்த நீயா பட்டாளத்திலேயே சேர்ந்து உழைப்பதாகக் கூறுகிறாய். அதிலும் சண்டை நடக்கும் இடத்திற்கே போகவேண்டுமென்று வேறு கேட்கிறாய். உன் மனைவி நடனராணி இசைந்தாளா?"

என்று இவனுடைய மேலதிகாரி கேட்கும்போது ரகுவின் கண்களில் நீரே தளும்பிவிட்டது. தன் மனைவியின் செய்கையை இவரும் அறிந்து தான் தன்னைக் குத்திக்காட்டுவது போல் கேட்கிறாரோ! என்றுகூடத் தோன்றியது, அவருக்கு எவ்விதமான பதிலும் சொல்லத் தெரியாமல் தியங்கினான். எனினும், "சார்! தேசத்தின் நிலைமையைவிட தேகத்தின் நிலைமை முக்யமாகத் தோன்றி முதலில் என்னை அஞ்ஞானம் மறைத்தது. இப்போது என் அறியாமைத்திரை தானே விலகிவிட்டது..."

என்று அவன் கூறி முடிப்பதற்குள், அதிகாரி ஒருமாதிரியாகச் சிரித்துக்கொண்டு "உம்... உலகத்தில் மூன்றுவிதமான வைராக்யங்கள் இருக்கிறதல்லவா! அதுபோல் இது ஒரு வைராக்யம் போலும்... ஆனாலும் உன் மனைவி செய்தது மகா மோசமான காரியம். இன்னும் 5 மாதங்கள் சென்றால்தான் ஒரு அழகிய ச்வர்ண பிம்பத்தை.... காணக்கிடைக்காத தங்கத்தைக் கண்டு களிக்கும் பாக்யம் கைம்மேல் கிடைத்திருந்ததை இப்படிக் கொலை செய்தது மகா தவறு... குலப் பெண் இம்மாதிரி செய்தாள் என்பதை உலகம் அறிந்து என்ன தான் தூற்றுகிறது தெரியுமா!

ரகுநாத்! ஏதோ உன் குடும்ப விஷயத்தைப்பற்றி நான் அதிக ப்ர ஸங்கித்தனமாகப் பேசுவதாய் நினைக்காதே. அதே ஆஸ்பத்திரியில் அதே ஸ்பெஷல்வார்டில் என் மகள் ப்ரஸவித்திருந்தாள். அப்போது நான் தினம் போய்ப் பார்த்து வந் தேன். அங்குள்ள நர்ஸ்கள், குட்டி டாக்டர்கள், வேலைக்காரிகள் சகல ரும் இதே பேச்சுத்தான் பேசிக் கொண்டார்கள். கலைக்காகக் கொலை செய்த கொலைராணி என்று பரிகஸித்ததையும் நான் காதால் கேட்டேன்...உம்....அது கிடக்கட் டும். நீ திடீரென்று ராணுவத்தில் சேர்ந்தால்...

என்பதற்குள்......"சார்! இனி என்னை எதுவுமே கேட்கவேண் டாம். தயவுசெய்து என்னை உடனே ராணுவத்தில் சேர்த்துவிடுங்கள்"... என்று கண்ணீர் முட்டக் கேட்டான். அடுத்தக்ஷணமே ரகுவின் பெயர் பட்டாளத்தின் ஜாபிதாவில் சேர்க் கப்பட்டது. உடனே கிளம்புவ தாகக் கையெழுத்துடன் பதிவு செய்தாயிற்று.

அதன் பிறகே அவன் மனம் ஒரு சிறிது சாந்தியடைந்ததாகத் தோன் றியது. எனினும் அவன் எதிர்கால வாழ்க்கையின் லக்ஷியத்தையும் தான் தகப்பனாராகப் போகிறோம், நமக்குப் பிறக்கும் குழந்தை பிள்ளை யானால் உயர்தரப் பட்டதாரியாகச் செய்து உபமான புருஷனாகச் செய்யவேண்டும். பெண்ணைப் பிறந்தால் முற்றிலும் புதிய முறை யில் ஆதர்சப் பெண்ணாகச்செய்து இன்புறவேண்டும் என்றெல்லாம் அவன் எண்ணி கற்பனைசெய்து வந்தது முற்றும் படுசூரணமாகி விட்ட அதிர்ச்சியின் பயங்கர உணர்ச்சிமட்டும் அவனை விட்டுச் சடுதியில் மறையவே இல்லை.

முதலில் சுலோசனை பிரிந்தபோது முறிந்த வாழ்க்கை மரம் அப்படியே முறிந்துபோயிருக்கக் கூடாதா? மறுபடியும் பட்டமரத்தில் பால் துளிர்த்து வாழ்க்கையில் புதிய இன் பங்களைக் காணச்செய்துப் பின் இப்படியாசெய்து சோதிக்கவேண் டும் என்ற துக்கம் ஆறவில்லை; தீர வில்லை. திரும்பி தன் வீட்டிற்குப் போவதற்கு அவன் மனது எத னாலோ கூசி நடுங்கியது.

பேசாமல் ஊர்சுற்றி அலைந்து விட்டுப் பின்னர் வீட்டிற்குத் திரும்பி னன். இவன் வீட்டு வாசலில் சுலோ சனாவின் கார் நிற்பதைக்கண்டு தீயை மிதித்தவன்போல் துள்ளி னன். அவள் மறுபடியும் தன்னைக் கண்டுடைக்க வந்திருக்கிறாள்போ லும்...உம்...இந்த வாரமே கப்ப லேறுவதற்கான சகல ஏற்பாடும் நடந்துவிட்டதை உலக வாயிலா கவே அறிந்த நான் இனி இந்த மா மால நாட்டியத்திற்கு மசியப்போ கிறவன்? உம்...இனி இந்த ஜென் மத்தில் அம்மாதிரி நினைக்கவேண் டாம் ஒருவேளை தான் வைத்த பர்ஸை எடுத்துச் செல்வதற்காக வந்திருப்பாளோ!... இருக்கலாம்... எதற்கு வந்தால் எனக்கென்ன... நாம் இனி அந்த கொலைகாரி முகத் தைப் பார்க்கவேண்டாம்" என்று தீவிரமாக எண்ணியபடியே திரும் பிப்போய்விட்டான்.

அன்று பூராவும் அவன் வீட்டுப் பக்கமே வரவில்லை. அவன் மனோ வேதனை சிறிதுமாறுவதற்காக இந்த பட்டாளம் உடனே கிளம்பி விடக் கூடாதா என்று தோத்திரம் செய்ய வாரம்பித்தான். மறுதினம் காலை யில் இவன் வீட்டிற்கு வந்தபோது மேஜைமீது ஒரு கடிதம் இருந்தது கண்டு முதலில் அதைப் படிக்க இஷ்டமின்றி அலக்ஷியமாக வீசி

எறிந்தான். எனினும் கொலைக்கும் அஞ்சாத பாதகி என்னதான் எழுதியிருக்கிறாள் பார்க்கலாம் என்று படிக்க வாரம்பித்தான்.

“அன்பருக்கு வந்தனம். உபய க்ஷேமங்கள். தங்களை சில மாதகாலமாய் நான் பார்க்கமுடியாத நிலைமையில் இருந்துவிட்டது பற்றி கோபிக்கவேண்டாம். தாங்களாவது ஒரு முறைவந்து பார்த்திருக்கலாம். பழய மனஸ்தாபத்தை இன்னும் பாராட்டும் முறையில் என்னை மறந்து விட்டீர்கள். நாம் பெற்றோராகும் விஷயத்தில் இருவரும் வெகு வெகு ஆர்வத்துடன் எதிர்பார்த்திருந்தும் தெய்வச்செயல் வேறாகி சகலத்தையும் மாற்றிவிட்டது. இந்த அபார்ஷன் விஷயமாக நான் சிக்காக விழுந்ததற்கு சுமார் ஒரு ஆயிரம் ரூபாயிக்குமேல் என் தகப்பனாருக்குச் செலவாகி யிருக்கிறது. நம்முடைய ஏழை நிலைமையில் நான் இச்சமயம் தங்கியிருந்தால் செலவுக்கு மிகவும் கஷ்டப்பட்டுப் போயிருப்போம். ஏற்கெனவே இந்த 4, 5 மாதத்தில் வீட்டில் அசாத்ய செலவால் என் சிநேகிதை கமலினியினிடம் 500 ரூபாய் கடன் வாங்கியிருக்கிறேன். அதையே திருப்பிக் கொடுக்க முடியவில்லை. நமக்கு வாழ்க்கை நடத்தப் போதிய பணமில்லாத குறையை நான் எத்தனை லக்ஷ்யம் செய்யாமலிருந்தாலும் வெகு மேன்மையாக வாழ்க்கை நடத்தி வழக்கமாகிவிட்ட என்னால் முடியவில்லை. எப்படியோ கஷ்டப்பட்டுக்கொண்டு இருந்ததனால்தான் சரியான போஷாப்பும், ஆகார வசதிகளும் புஷ்டியாக இல்லாததால் இப்படி அபார்ஷனாகிவிட்டது. என்று லேடி டாக்டர் சொன்னாள். அதுவும் இருக்கலாம் என்றுதான் எல்லோரும் அபிப்ராயப்பட்டார்கள் (என்கிற இடத்தைப் படிக்கும்போது ரகுவின் தேகம் பற்றி எரிந்தது. வெயர்வை வெள்ளம் குபீரென்று பொங்கி வழிந்தது...“அடீ சண்டாளீ! த்ரோகி! நீ செய்த கொலையின் வண்டவாளம் யாருக்கும் தெரியாதென்று எண்ணியா இப்படியொரு நாட்டியம் ஆடுகிறாய்! பகவானே! இப்பேர்ப்பட்ட நாசகாலிகளுக்கு நீ துணையிருந்தா வேடிக்கைப் பார்க்கிறாய். என் இதயம் கொதிக்கிறதே!” என்று எண்ணியவாறு மீண்டும் படிக்க வாரம்பித்தான்.)

அதிகாலையில் எழுந்தவுடனே அப்பட்டமாகக் கறந்த பசுவின் பால் நுரையுடன் குறைந்தது கால்படி பால் சாப்பிடுவேன். பிறகு எட்டு மணிக்கெல்லாம் ரொட்டி காப்பி. 10 மணிக்குச் சாப்பாடு. 1 மணிக்கு பழவகைகள். மூன்று மணிக்கு பாதாம் பருப்பு, அக்ரோட், பிஸ்தா, கல்கண்டு முதலிய ட்ரைப்ரூட்ஸ். 5 மணிக்கு டீயும் டிப்பனும். 8 மணிக்குச்சாப்பாடு. படுக்கும்போது முதல் தரமான பழவகைகள், பால். இத்தனையும் சாப்பிட்டு நான் வளர்ந்தது உங்களுக்குத் தெரிந்த விஷயம். எனது கலையின் ஆர்வத்தை முன்னிட்டே என் பிதா இத்தனை உயர்ந்த முறையில் வளர்த்து வந்தார்.

சாதாரண நாளாக விருந்ததால் நான் ஏதோ நம் வீட்டில் கிடைத்த ஆகாரத்தைக்கொண்டு ஒருமாதிரி இருந்தேன். கர்ப்பமான சமயத்திலும் பழய போஷாப்பு இல்லாததால் பலம் குன்றிச் சிதறிவிட்டது. பாழாகிவிட்ட உடம்பு பழயபடி உரம் பெற்றுத் தேறிய பிறகு நான் அங்கு வர எண்ணினேன். நமது ஏழ்மை நிலையில் எனக்கு மிக்க வருத்தமும் கஷ்டமும்தான் உண்டாகியதே யன்றி வாழ்க்கையில்

இனிப்புண்டாகவில்லை. பெரிய பங்களா, உயர்ந்த கார், கொட்டிலில் பசுமாடு. பிரம்மாண்டமான தோட்டம். புதிய புதிய உடைகள் ஆபரணங்கள், சதா வீட்டில் விருந்தினர்கள். ஆடல் பாடல்கள் முதலியவைகளுடன் எப்போது இருக்கப் போகிறோம் என்ற ஏக்கம் என்னை வாட்டிக்கொண்டிருந்தது.

என்னுடைய குறையை நீக்க லேடி கவர்னர் தன் மகளின் கல்யாணத்திற்காக இந்திய நாட்டியக் கலையின் சிறப்பை தன் தேசத்தினர் அறிந்து மகிழும் பொருட்டு என்னையும் என்னுடன் ஸ்ரீமதி உஷாதேவியையும் அழைத்திருக்கிறார். இச் செய்தி எனக்கு மிக்க மகிழ்ச்சியை அளிக்கிறது. சண்டை யொன்று திடீரென்று மும்முரமாகி விட்டதால் கல்யாணம் அடுத்த மாதமே ஏற்பாடாகி எதிர்பாராத விதமாய் ப்ரயாணம் நெருங்கிவிட்டது. நீங்களும் வந்தால் அழகாய்த்தானிருக்கும். நீங்கள் இதற்கு ஒப்பமாட்டீர்கள் என்று தெரிவதால் உங்களை வற்புறுத்தவில்லை. ஸ்ரீமதி உஷாதேவி மகத்தான கண்ணியம்வாய்ந்தவள். பெரிய குடும்பத்தில் பிறந்தவள். ஆகையால் அவளுடன் ஆடுவதற்குத்தான் நான்போகிறேன். வெற்றிகரமாக திரும்பி வரும்போது 50 ஆயிரமாவது பணம் கிடைக்கும். உடனே உங்களுக்கு பெரிய வேலையும் செய்து வைப்பதாக கவர்னரும் அவர் மனைவியும் சொல்லியிருக்கிறார்கள். இந்த சந்தோஷச் செய்தியை நேரில் சொல்லிச் செல்ல வந்தேன். தாங்கள் இல்லாததால் எழுதி வைத்துச் செல்கிறேன். நான் போய்வருகிறேன். கோபிக்க வேண்டாம். நாம் பிற்காலத்தில் ஏராளமான செல்வத்துடன் சந்தோஷமாய் வாழலாம். சுலோசனா"

படித்து முடித்ததும் அவனை இன்னதென்று விவரிக்க வியலாத சித்ரவதை செய்தது. "போகிற பிசாசு கல்லைத் தூக்கிப் போட்டுவிட்டுச் சென்றதாம் என்பார்கள். அது போல் மனமும் மெய்யும் துணிந்து கருக்கொலை செய்துவிட்டு ஓடிப் போகப் போவது மன்னிபில் என் மீது பழி வேறு போட்டுவிட்டுப் போகவும் துணிந்துவிட்டாளா! கமலினியிடம் கடன் 500 ரூபாயாம். ...ஆகாரத்தில் போஷணை இல்லையாம்... அடாடாடா....என்ன அக்ரமம்! என்ன நெஞ்சு துணிபு?" என்று குமுறுகிறான். இதயம் வெடித்து விடும்போலாகிவிட்டது.

## 33

"அவசரம்...வெகு சீக்கிரம் புறப்படும் பட்டாளத்திலேயே நீ போக வேண்டும் என்று ப்ரத்யேகமாய்க் கேட்டுக்கொண்டதால் இந்த வகுப்பில் உன்னை யனுப்ப ஏற்பாடாகிவிட்டது. உடனே தயாராய் கீழ்காணும் விலாஸத்திற்கு வந்து சேரவும். * * *

* * பட்டாளத்தின்
ப்ரத்யேக அதிகாரி"

என்கிற கடிதத்தைப் படித்ததும் ரகுவின் இருண்ட இதயத்திலும் ஒரு சோபையும், வரண்ட கண்களில் ஒரு ப்ரகாசமும், சூனிய மனத்தில் உணர்ச்சியும், நிராசை நெஞ்சில் ஒரு சிறந்த த்யாகத்தைத் தான் செய்யப்போகும் சந்தோஷத்தின் ரேகையும் படர்ந்து அவனை ஊக்கின. க்ரமப்ரகாரம் செய்யவேண்டியப் பரிக்ஷைகள் முற்றும் முன்பே ஆய்விட்டதால் ராணுவ உடையணிந்து வைராக்யமும் தைரியமும் முகத்தில் ப்ரகாசிக்க உயர்ந்த வீரனாகக் கிளம்பிவிட்டான். அந்த கூட்டத்தில் ஆயிரம் பேர்களுக்கு மேலாகக் காணப்பட்டார்கள்.

பட்டாளத்தில் போகும் பெருமை ஒருபுறமிருக்க அதில் முக்கால் பங்கு மனிதருக்குமேல் "ஐயோ! போகிற நாம் நல்லபடி திரும்பி வந்து பெண்டாட்டி, பிள்ளைகள், பெற்றோர் உற்றார்கள் முதலியவர் களை மறுபடியும் காண்போமா! வெற்றி பெற்றுத் திரும்பி வரு வோமா! அன்றி வீர சொர்க்கத்திற் குத்தான் போய்விடுவோமா! என்ற கவலையும் துக்கமும் பாதிக்க முகத் தில் சோகக் களை தாண்டவமாடுகி றது. எங்களைப் பெற்ற தாய்நாடே! எங்கள் அன்பிற்கினிய தாய்நாடே! எங்களுக்கு வெற்றியை அளித்து வாகைமாலை சூடிக்கொண்டு மீண் டும் உன்னிடம் வந்து உன் பொன் னடியில் வணங்கி இன்புறும்படி ஆசிர்வாதம் செய்...என் தாயே!... என்று ஒவ்வொரு வீரனின் இதய மும் த்யானித்துக் கை குவித்துச் சிரம் கவிந்தது. கண்களில் ப்ரவாக மாகப் பொங்கி வழியும் நீரை சிலரால் அடக்கவே முடியவில்லை. ஒவ்வொருவருடைய உணர்ச்சியும் அவரவர்களின் இதயக்கடலில் கொந்தளித்துத் தவிப்பது போல் கருங்கடலில் அனேகக் கப்பல்களும் தோணிகளும் நிலைதடுமாறி ஆடிய படியே மிதந்து நின்றன.

ராணுவத்தின் வழக்கப்படி பட் டாளங்களை அணிவகுத்து அழைத்து வந்துக் கப்பலில் ஏற்றினார்கள். ஒரு சிலர்மட்டும் கண்ணீரே விடாது தளராத உறுதியைக் காட்டுவது போல் கல்லாயிருந்தார்கள். அந்தக் கூட்டத்தில் முற்றிலும் மாறிப்போய் ராணுவ உடையில் நிற்கும் ரகுவை யாருக்குமே தெரியவில்லை.

அதே கடலில் அதே நேரத்தில் பட்டாளங்கள் புறப்படும் கப்பலுக் குச் சற்று தூரத்தில் வெகு வசதி யான சிறிய கப்பல் வெகு அழகாக நின்றிருந்தது. அந்த கப்பல்தான் நடன கோஷ்டியினரை ப்ரத்யேக மாய் அழைத்து வரும்படி லேடீ கவர்னர் நியமித்திருந்த கப்பல் என் பது ரகுவுக்குத் தெரியாது. யாரோ துரைமகன் போகப்போகும் கப்பல் என்று எண்ணினான்.

எந்த விஷயமும் அந்தந்த இடத்தி லுள்ள வேலைக்காரர்களின் மூலம் வெகு அழகாக ப்ரசாரமாவதை வீட்டிலுள்ள வேலைக்காரர்கள்முதல் பெரிய தொழில்சாலையிலுள்ள வர்கள் வரையில் நன்றாக அறிய லாம். அதேபோல் கப்பல்துறைமுகத் தில் வேலை செய்யும் நூற்றுக்கணக் கானவர்கள் பட்டாளம் புறப்படும் கப்பலைப் பார்த்து, ஒரு பெரிய நெடுமூச்சுடன் "உம்...பாவம் மக் கள் மனுஷாளைவிட்டு தேசத்திற்காக சகலத்தையும் த்யாகம் செய்துவிட் டுக் கப்பலேறுகிறார்கள்... இவர்களை யெல்லாம் ஆண்டவன்தான் காப் பாத்தணும். நல்லபடி சந்தோஷ மாய் திரும்பிவரணும் பாவம்! கண் ணாலே கொட்ற ஜலத்தெப்பாரு"... என்று அங்கலாய்த்தார்கள்.

அவர்களே, ஸ்பெஷல் கப்பலின் ஆடம்பர கோஷ்டியைப் பற்றியும் பேசிக்கொண்டு "இருந்தாலும் இப் படியல்லவா இருக்கணும்? அதோ அந்த கப்பலில் கவர்னரின் பெண் கல்யாணத்திற்காக இந்திய நடன கோஷ்டிபோகிறார்கள். அவர்களு டைய அதிர்ஷ்டமே அதிர்ஷ்டமல் லவா! யாரோ நடன ராணியாம்... ராஜாவாம்...அவங்க குடும்பமே அப் படியே புறப்பட்டுவிட்டதாம். கப்பல் முழுக்க அவங்களைச் சேர்ந்த பின் பாட்டுக்காரர்கள்தான் வந்திருக் கிறார்கள். அதோ பாரேன் வந்து எறங்கிட்டாங்க....அடேயப்பா! எத் தனை கும்பு பாத்தியா!" என்று ஒரு வருக்கொருவர் பேசும்போது தற்



செயலாய் ரகுவின் காதில் விழுந்ததும் மனது ஒரே துள்ளு துள்ளியது.

"அட க்ரகசாரமே! இரண்டு பேரின் வாழ்க்கைப் பாதையை இரண்டு விதமாய் ஒரே சமயத்தில் இக்கடலில் பிரித்து வேறு பகவான் வேடிக்கைப் பார்க்கவேண்டுமா! இதுவும் என் பாவந்தானு, அவர்கள் கப்பலாவது நாளை கிளம்பக்கூடியதாயிருக்கக் கூடாதா! என்ன சோதனை இது!" என்று எண்ணி மனம் துடித்தவாறு கப்பல் தளத்தின் பிடியைப் பிடித்தவாறு வெளிப்புறம் பார்த்தபடி நின்ருன்.

அவனையறியாது கண்கள் தானுகவே இழுத்து நாட்டிய கோஷ்டி

யினர் செல்லும் கப்பல் பக்கம் தாவின. சுலோசனா, உஷா, சுதர்சன் சுலோசனாவின் குடும்பத்தினர், இதர பெரிய ப்ரபுக்கள் ஆகிய ப்ரமாதக் கூட்டம் நிற்பதும் மாலைகளை சுமை சுமையாக அந்த நாட்டியக்காரர்களின் கழுத்தில் குவித்து வாழ்த்துக்கள் கூறுவதும், எல்லோருக்கும் பல்லை இளித்துக்கொண்டு பதில் சொல்வதும் பைனாகுலரின் உதவியால் இதே கப்பலிலுள்ள பல பேர்கள் பார்த்துப் பல மாதிரியாகப் பேசுவதும் ரகுவுக்குத் தெரியாமலில்லை.

திருடனுக்குத் தேள் கொட்டினால் அதை யாரிடம் சொல்லமுடியும்! இவள் வேறு யாருமில்லை. என் மனைவிதான் என்று சொல்லிக் கொள்ள முடியுமா! இதயத்தில் நடக்கும் போராட்டத்தை வெகு ச்ரமப்பட்டு அடக்கிக்கொண்டுவேறு பக்கம் திரும்பிச்சென்றான். இந்த கப்பல் உடனே கிளம்பிவிடக் கூடாதா!'' என்று துடிதுடித்தான்.

அந்த கப்பலின் முன்பு நடக்கும் ஆரவாரத்தின் எதிரொலி இவன் காதைத் துளைத்துப் பின்னும் சித்திரவதை செய்கின்றது. தலையை இரு கைகளாலும் கெட்டியாகப் பிடித்துக்கொண்டு ஒரு தனிப்புறம் போய் நின்றான். பகவானே கப்பல் மாலுமியின் மனத்தில் புகுந்து வேலை செய்வதுபோல் கப்பல் கிளம்புவதற்கான சங்கு ஊதப்பட்டதும் வெளியிலிருந்தவர்கள் எல்லாரும் பரபரப்புடன் வந்து ஏறிக்கொண்டபின், கால்மணியில் கப்பல் கிளம்பியது.

என்னமோ ஒரு விதமான உணர்ச்சி எல்லோரையும் உலுக்கியது. எனினும் ரகுவைப்போன்ற நிலைமை யாருக்கு வரும்? கப்பல் நகரவாரம்பித்த பிறகு மறுபடியும் தானாகவே நடன கோஷ்டியின் பக்கம் பார்த்தான். அப்போது தாங்கமாட்டாது மாலைகளை அணிந்த சுலோசனா கப்பல் முதல் தளத்தில் நின்று 'போய்வருகிறேன்' என்று குஷியுடன் எல்லோருக்கும் கையை ஆட்டி ஆட்டிக் கூறிச் சிரிப்பதையும் "நடனராணிக்கு ஜே! நடனராஜனுக்குஜே!" என்று ஜேகோஷம் போட்டுப் பெரிதாகக் கையைத் தட்டுவதையும் கண்டு அவன் அப்படியே கல்லாய்ச் சமைந்துவிட்டான். கப்பல் நகரும் உணர்ச்சி கூடத் தெரியாமல் அப்படியே உறைந்தது போலாயிற்று.

## 34

ஒரு சில பத்திரிகைகளைப் பிரித்தால், நடன கோஷ்டியினரின் இங்கிலாந்து யாத்திரை சென்றுள்ள மகிமையும், கவர்னர் தம்பதிகள் அவர்களை வரவேற்றுச் செய்யும் உபசாரத்தின் ப்ரபாவமும், அங்கு விருந்து, இங்கு விருந்து; அங்குள்ள நடனத்தில் சிறந்த கோஷ்டியினர் பேட்டி காணல், சுலோசனா அவர்களுக்குப் பதிலுரைப்பது, வித விதமான நடன நினுசுகள் கண்ணைக் கவரும்படியான படங்களுடன் நிரம்பிக் காக்ஷி யளித்ததோடு இதைப்பற்றிய விமர்சனங்கள் பத்தி பத்தியாகப் புகழ்ந்து வந்திருப்பதைப் படித்த பலபேர் பலமாதிரியாகப் பேசிக்கொண்டார்கள்.

மாதக்கணக்காகியு சுலோசனா வின் பிதாவுக்கு சந்தோஷம் தலைகால் தெரியாது கொந்தளித்து இன்னும் ஒரு சுற்று உப்பிவிட்டார். கவலையறியாத சுலோசனா காட்டில் சுயேச்சையாகத் திரியும் பறவைபோலவே பறந்து வந்தாள்.

நடனமாதாக இருந்து, தற்போது சாதாரண மனுஷி (குடும்ப ஸ்திரீ) யாயுள்ள ஒரு வெள்ளைக்காரி சுலோசனாவுக்கு விருந்து கொடுத்துப் பின்

நாட்டியக் கலையைப் பற்றி பேசிக் கொண்டிருக்கையில் சுலோசன அந்த வெள்ளைக்காரியை நோக்கி... "நீங்கள் ப்ரஸித்தி பெற்ற நாட்டியக் காரியாயிருந்தும் பின்னர் ஏன் விட்டு விட்டீர்கள்! நாட்டியத்தில் சலிப் பேற்பட்டு விட்டதா? உங்கள் சரீரங் கூட வெகு வாட்டமாகத்தானே இருக்கிறது.ஏன்நிறுத்தவேண்டும்?" என்று தானகவே ஆரம்பித்தாள்.

வெள்ளை:—கலை விஷயத்தில் சலிப்பென்பதுகூட உண்டாகுமா! ஆனால் எதற்கும் ஒரு அளவுகோல் உண்டல்லவா! என் நாட்டியத்தை உலகம் மெச்சிக் கொண்டாடிப் பல பல புகழ்மாலைகளைச் சூட்டி உத்ஸாகப்படுத்தியது வாஸ்தவந் தான். அதனல் நான் அடைந்த ஆனந்தம் சொல்ப காலம் வரையில்தான் என்னை அபாரமாய் ஆனந்தசாகரத்தில் ஆழ்த்தி மகிழச் செய்தது; என் பெற்றோர்களை லக்ஷாதிபதியாகச் செய்தது. சில வருஷங்கள் கழிந்ததும், என் உத்ஸாகம் தானகக் குறைந்தது. அதற்குக் காரணம் எனக்கே தெரிய



வில்லை. நான் என் மனத்திற்குப் பிடித்த ஒரு சங்கீத வித்வானை மணந்துகொண்டேன். அவர் எனது நாட்டியத்திற்கென்று வெகு அருமையான பாட்டுக்களைத் தாமே கற்பனையால் இசைப்பார்; மனதைக் கவரும் அபூர்வமான இசையில் தாமே பாடுவார். நான் நாட்டியமாடி வந்தேன்.

அவரது காவியங்களில் மிகச் சிறந்ததொரு பாட்டைக் கொண்டாடாதவர்களில்லை.

மேகங்களை நோக்கிய பயிர்கள் வாடி வருந்தி "எங்கள் தாபத்தைத் தீர்க்க மழை பொழியமாட்டாயா! எங்கள் கஷ்டப்தீர உனது குளிர்ந்த கருணையால் எங்களை ரக்ஷிக்கமாட்டாயா!" என்று வேண்டுவதும், அதைக் கண்ட ஒரு யுவதி "ஆகா! மேகங்களை நோக்கி மழைக்காக வேண்டும் பயிர்களைப்போல் ஆண்டவனை நோக்கி "எங்கள் குலம் விளங்க ஒரு மகவைக் கொடுக்கமாட்டாயா! என் மலட்டுத்தனம் நீங்கி என்னிதயம் குளிரச் செய்யமாட்டாயா!" என்று வேண்டுகிறாள்.

உடனே இடியும் மின்னலும் மழையும் வருகின்றன. பயிர்களின் ஆரவாரம் கூறத் திறமில்லை. இதைக் கண்ட யுவதி தனக்கும் இதேபோல் குழந்தை பிறக்குமா என்று ஏங்குகிறாள். கடவுள் ஒரு ஜோதியால், அவள் கவலையைப் போக்குவதாகக் கனவில் கூறுகிறார். பிறகு அவள் கரு தருக்கிறாள். அந்த சந்தோஷத்தைக் கணவனும் மனைவியும் சேர்ந்து ப்ரமாதமாக அனுபவிக்கிறார்கள். மாதங்கள் சென்று ஒரு அழகிய ஆண் குழந்தை பிறக்கிறது. தம்பதிகள் அடைந்தஇன்பத்திற்கோர்எல்லையே இல்லை; பூரித்து பெருமிதமாக மகிழ்கிறார்கள். பயிரின் செழுமையினால் மக்கள் மகிழ்கிறார்கள். இக்குழந்தை பிறப்பால் அக்குடும்பம்களிக்கிறது ..

இதுதான் கவியின் ஸாரம். இதை எழுதிய பிறகு இதை அவரும் நானும் பாடும்போது அந்தப் பாடலின் இனிமையே... அதன் அர்த்த பாவமே எங்களிருவர் இதயங்களிலும் பதிந்து வேலை செய்தது. என் பெற்றோர்கள் எனக்குக் குழந்தை பிறந்துவிடுமாயின் உடல் வலிமை, பொலிவு முதலியன குறைந்துவிடுமாதலால் குழந்தை பிறக்காத விதம் பலவிதமான காலதிட்டப்படி நடக்க வேண்டும் என்று ப்ரியப்பட்டு அதே முறையில் என்னைப் பழக்கி வந்தார்கள். ஆனால் எங்கள் ஆசையை நிறைவேற்ற பகவான் என்னை கர்ப்பவதியாக்கினார். என் பெற்றோர்கள் அதை உடனே சிதைத்து விடும்படிக்கு மூர்க்கம் செய்தார்கள். நாங்கள் அந்த பாதகத்திற்கு இசையவில்லை.

கலையில் ருசி பார்த்தாகிவிட்டது. இனி எனக்குப் பிறக்கும் குழந்தைக்கு அக்கலையை ஊட்டி அதை ஆடச்செய்து பார்த்துக் களிக்கவே என் மனது விரும்பியதால் நான் கலைக்காக உழைத்தாலும் அதற்கே நான் அடிமையாகி வாழ்வில் ஸாரமில்லாதிருக்க விரும்பவில்லை. தாய்மை உள்ளம் என்னை வசீகரித்து, தாய் என்கிற ஸிம்மாஸனத்தில் உட்காரவே இதயம் துடித்தது.

குழந்தை பிறந்த பிறகு ஆடுவதற்கு முடிந்தால், தேகம் எசவாக விருந்தால் ஆடினால் போகிறது என்கிற ஆசையால் நாங்கள் எங்கள் பிதாவைவிட்டுப் பிரிந்துவிட்டோம். அழகான குழந்தைக்குத் தாயாகிவிட்டபிறகு, என் சந்தோஷமே வேறு மாதிரி பரிணமித்தது. என் மூத்த குழந்தைதான்

மிஸ் பென்னட்... அவள் தற்போது நாட்டியக்கலையில் தேர்ச்சிபெற்று வருகிறாள். எனக்கு இப்போது மூன்று குழந்தைகள். குடும்பத்தலைவியாய் நான் என் வாழ்க்கையைச் சந்தோஷமாகக் கழிக்கிறேன்.

நாட்டியக்காரியாயிருந்த வரையில் குடும்பப் பெண்ணுக்குள்ள நல்ல உயர்ந்த விதத்தில் பழகியும், பல சோதாக்களின்... ஏன்? தாமும் ரஸிகர் என்று பெயர் வைத்துக் கொண்டிருந்தவர்களின்... கள்ளக் கண்ணோட்ட அழுக்கு என்மீது விழுவதைச் சகிக்கமுடியாது தவித்தேன். இப்போது என் மனம் பரிபூர்ண இன்பத்தை அடைகிறது. உங்கள் நாட்டில் நாட்டியக்காரி என்றால் இளப்பமாகவே பேசமாட்டார்களா!... என்று ஒரு பெரிய கதை சொல்வதுபோல் மூச்சு விடாமல் சொன்னாள்.

அடாடா! இதைக்கேட்கும் சுலோசனாவின் அப்போதிய நிலைமையின் பரிதாபத்தை எப்படித்தான் விவரிப்பது? இந்தியப் பெண்களுக்கும் இங்கிலாந்து பெண்களுக்கும் உள்ள பலவித வித்யாஸங்களின் மத்தியில் இப்படியும் ஒரு பெண்மணியிருக்கிறாள் என்பதைக் காண சுலோசனாவின் முகத்தில் சாணி அறைந்தது போலாயிற்று.

'ஒரு புருஷனைத்தள்ளி விவாகரத்துசெய்து வேறொருவனை மணந்து வாழும் வழக்கமுள்ள தேசத்துப் பெண்ணா இப்படிப் பேசுகிறாள்!' என்று சுலோசனாவால் நம்ப முடியவில்லை. கற்புக்கும் கடமைக்கும் உறைவிடமாகிய பாரத நாட்டில் பிறந்த தான் செய்துள்ள கொடிய காரியத்தின் பயங்கரத்தின் அதிர்ச்சி திடீரென்று மின்சாரம் போல் தாக்கி ஆயிரம் தேள்கள் ஏக காலத்தில் கொட்டியதுபோலும், ஆயிரம் வாள்களைக்கொண்டு ஒரே சமயத்தில் இதயத்தை அறுப்பதுபோலும் கூறத்திறமற்ற வேதனைசெய்து வாட்டுகிறது. தனது ரகஸியத்தை அறிந்துதான் இம்மாதிரி இவள் சொல்லித் தன்னை ஆழம் பார்க்கிறாளோ! என்றும் தோன்றி நடுங்கியது.

அவளுக்குச் சரியானபடி பதில் சொல்லமுடியாது தவிக்கிறாள். 'நான் செய்தது எத்தகைய பயங்கரமான காரியம்? எவ்வளவு கொடிய பாதக வேலை...ஐயையோ!' என்று தீயை மிதித்தவள்போல் துள்ளுகையில் இவள் அடுத்த இடத்திற்கு விருந்துக்குப் போகவேண்டிய நேரமாயிற்று, உடனே வரவேண்டும் என்று தகப்பனார் வந்து கூப்பிட்டதால் அசடுவழியும் முகத்துடன் விடைபெற்றுச் சென்றாள்.

அன்று கருவை அழிக்கும் முன்பும், அழித்த பின்பும்கூடத் தோன்றாத ஒரு மன அதிர்ச்சியும், சொல்லத் திறமற்ற பயங்கரமும் வேதனையும் அவளை யறியாது அவள் இதயத்தை முற்றுக்கையிட்டுக்கொண்டன.

## 35

உஷா ஒரு பத்திரிகையை எடுத்துக்கொண்டு வெகு வேகமாய் சுதர்சன் இருக்குமிடம் ஓடிவந்தாள். சுதர்சன் அப்போதுதான் சுலோசனாவின் அத்புதமான பல தோற்றங்களிலுள்ள படங்களைப் பார்த்து அவற்றுடன் கண்களால் பேசி மகிழ்ந்து இன்புற்றிருந்த சமயம் வெகு வேகமாக வரும் உஷாவைப் பார்த்ததும் படங்களை புத்தகத்திற்குள் மறைத்து விட்டு, "என்ன உஷா! இப்படி தலைதெறிக்க ஓடிவருகிறாய்! கல்யாணத்தில் ஆடிய அலுப்பெல்லாம் தீர்ந்துவிட்டதா என்ன!...... ஆமாம். சுலோசனாவுக்கு என்ன உடம்பு! 5, 6... நாட்களாய் வெளி

நாட்டமே இல்லை. உள்ளே போய் பார்க்கலாமென்றால் அனுமதியும் கிடைக்கவில்லை. உண்மையில் உடம்பா அன்றி ஏதாவது...

என்று இழுப்பதற்குள் உஷா வெகு சுதந்திரமாய் அவன் பக்கலில் அமர்ந்து..."நானும் அதைத் தான் யோசிக்கிறேன். ஒன்றும் சொல்ல மாட்டேனென்று பிடிவாதம் செய்கிறாள். இப்போதுதான் எனக்கும் காரணம் இதுவாகத்தான் இருக்குமோ என்று தோன்றுகிறது. இதோ இந்த யுத்த விஷயமான தனிப் பத்திரிகையைப் பாருங்கள்-

இந்திய சிப்பாய்களின் திறமையையும் அவர்கள் வெகு நன்றாகவும் தைரியமாகவும் யுத்த அரங்கில் வேலை செய்வதைப்பற்றியும் படங்களுடன் எழுதியிருப்பதை இப்போதுதான் மிஸஸ் ஒய்ட் வீட்டில் பார்த்தேன். இதோ நிற்கும் இந்த சிப்பாய் சுலோசனாவின் கணவன்போல் சாயல் தெரிந்ததால் பெயரைப் பார்த்தேன்......ரகுநாத் என்றே போட்டிருக்கிறது. இதைச் சரியாகப் பாருங்கள். இந்த அப்பாவி பட்டாளத்தில் சேர்ந்துவிட்டாப்போலிருக்கிறதே. இதே புத்தகத்தில் நாலைந்து இடங்களில் இவன் படமிருக்கிறது...என்று எல்லாவற்றையும் காட்டினாள்.

வெகு சந்தோஷமும் ஆவலும் துடி துடிக்க சுதர்சன் இவைகளை வெகுவாய் உற்று உற்றுப் பார்த்தான்..."ஆம். அதே ரகுநாத்தான் இவன்...சந்தேகமே இல்லை. இதை அவளும் ஒரு வேளை பார்த்திருக்கலாம். அதான் கவலை வந்திருக்கும். ...அடாடா......இப்படியா இவன் கதை முடிந்தது! இவன் மகா வீரன் போல் பட்டாளத்தில் சேர்ந்துவிட்டான். அதற்குப் பலன் உயிரைத்தான் கொடுக்கப்போகிறான்...என்ன முட்டாள்தனம்!"...என்று ஒரு ஒப்பாரி வைத்தான்.

உஷா:— ஆமாம். சுலோசனா இதைப்பார்த்திருந்தால் அவளுடைய பெற்றோருக்குத் தெரியாமலிருக்குமா! இப்போதுதானே அவள் தாயாரும் நானும் பேசிக்கொண்டிருந்தோம். அப்போது நான்கூட இதைப் பார்க்கவில்லை. அந்தம்மாளும் இது விஷயமாக பேச்சே எடுக்கவில்லையே! சுலோசனா உடம்பைச் சாக்குவைத்து இன்னும் நாம் போகவேண்டிய ஊர்களுக்குப்போக முடியாமல் போய்விடுமோ என்ற கவலையாயிருக்கிறதே...

சுதர்:—நான்கூடத்தான் அப்படி நினைக்கிறேன். யாரைப் பார்த்தாலும் சுலோசனாவின் நாட்டியத்தையும் அவளழகையும் கொண்டாடுகிறார்களேயன்றி உன்னையும் என்னையும் தனியாய் வெளியூர்களுக்கு அழைத்துப்போக ஏற்பாடு நடக்காதுபோல் தோன்றுகிறது. சரி! நீ போ...நான் சுலோசனாவைப் பார்த்துவிட்டு வருகிறேன்.—என்று கூறியவாறு வேகமாக அவளுடைய விடுதியை நோக்கிப் புறப்பட்டான்.

## 36

வெள்ளைக்காரியின் வீட்டிலிருந்து மற்றொரு விருந்துக்குச் சென்ற சுலோசனாவின் மன அதிர்ச்சியிலும் குழப்பத்திலும் அவளுக்கு மனது எங்குமே இருக்கை கொள்ளவில்லை. அவள் நினைக்காமலேயே, தான் செய்த மகா பயங்கரமான செய்கையின் நினைவு திடும் திடும் என்று அவளை வாட்டத் தொடங்கியது.

அதே உணர்ச்சியுடன் தவிப்பதால் முகத்தில் களை குன்றி ஏதோ நோயாளிபோல் காணப்பட்டாள். முன்னேற்பாட்டின்படி அன்று சினிமாவுக்குப் போனாள். ஸினிமாவில் வந்த கதை வேண்டுமென்றே

அவளைக் கிளறி எரியும் அடுப்பில் எண்ணெயை ஊற்றுவதுபோல் அமைந்தது.

அதாவது,—அழகிய தம்பதிகள் காதல்மணம்புரிந்து சந்தோஷமான இல்லற வாழ்க்கை நடத்துகிறார்கள். மனைவி கர்ப்பவதியாகிறாள். ப்ரஸவத்தினால் அழகும் இளமையும் குறையும் என்றதனாலும் குழந்தைகளின் தொல்லையால் தங்கள் வாழ்க்கையின் இன்பத்திற்குத் தடை ஏற்படும் என்றும் எண்ணிய கணவன் மனைவியின் கர்ப்பத்தை நிர்ப்பந்தமாய்ச் சிதைத்துவிடுகிறான். மனைவிக்கு விருப்பமில்லை. அவளுடைய மனம் தாய்மை பீடத்தில் ஆரோகணிக்க ஆவலுடன் துடிக்கிறது.

கணவனின் உபத்திரவத்தால் இரண்டு மூன்று தரம் அப்படிச் சிதைத்தபிறகு அவள் மனது புண்ணாகிவிடுகிறது. அதன்பிறகு சிலவருஷங்களாகின்றன. வாழ்க்கையில்ருசி குறைந்து ஏக்கத்தில் வந்துவிடுகிறது பிறகு கர்ப்பமாகவே இல்லை. வருஷங்கள் ஓடி மறைந்து மனைவிக்கு மலட்டுச்சதையிட்டுத் தொம்பைக் கூண்டாய்ப் பருத்துவிடுகிறாள். அவனுக்கு வெறி சற்று அடங்குகிறது வாழ்க்கைக்கு அத்யாவச்யமானது ஒரு பச்சிளங்குழவிதான் என்பதை அதன் பிறகுதான் கணவன் உணர்கிறான். ஒரு குழந்தை பிறக்கக் குட்டிக்கரணம் போட்டும் அந்த 'காலம்' பூஜ்யமாகி விடுகிறது. முதலில் முட்டாள்தனமாகச் செய்ததை எண்ணி வருந்துகிறான். இவர்களின் எதிர்வீட்டுக்காரர்கள் குழந்தைகளோடு குலாவி மகிழ்வதைக் கண்டு தமது முட்டாள்தனத்தை எண்ணி விசனிக்கிறார்கள்.

அதே ஏக்கத்தில் அவள் நோயாளியாகி விடுகிறாள்...... இவர்களுடைய முட்டாள்தன ரகஸியத்தை அறிந்த சிலர் திட்டுகிறார்கள்... இதுவரையில் படம் பார்ப்பதற்குள்ளேயே சுலோசனாவின் பொறுமையை சோதித்து அவளை இம்ஸிக்கவே இப் படம் நடப்பதுபோன்ற சங்கடமும், தன் குற்றமுள்ள நெஞ்சின் துடிதுடிப்பும் ஒன்றுசேர்ந்ததால், தலைவலி அதிகமாக விருப்பதால் படம் பார்க்க முடியவில்லை என்று சொல்லி எழுந்து வந்துவிட்டாள். இந்த உண்மை ரகஸியத்தை யாரும் அறியாததால் அவர்கள் இதைப்பற்றிக் கவனிக்கவும் இல்லை.

தன் கதியும் இப்படித்தான் ஆகிவிடுமோ! குழந்தை இனிமேல் பிறக்காமலேயே போய்விடுமோ!...அதே படத்தில் குழந்தையைப் பெற்றுக் கொண்டு குலாவிய தம்பதிகளின் ஆனந்தம் அவள் இதயத்தையும் கவர்ந்தது. அதை எண்ணிப் பெருமூச்சு விட்டாள். முதலில் ஏதோ வெறி பிடித்த ஆலச செய்துவிட்ட காரியத்தின் பயங்கர எதிரொலி இப்போதுதான் அவளுடைய மனத்தில் சுருக்கென்று தைத்து சகிக்கவியலாத வேதனை செய்ததால் அடுத்த இரண்டு மூன்று நாட்கள் எங்கும் போகாமல் ஓய்வெடுத்துக் கொண்டதாகக் கூறி மவுனமாயிருந்தாள்.

யாருடனும் போகாமல் எங்கும் பேசாமலிருந்ததால் அவளுக்கு உடம்பு சரியில்லை என்கிற கவசம் தானாக வந்து போர்த்திக்கொண்டது. சுலோசனாவின் தாயாரும் தகப்பனாரும் கொஞ்சங்கூடக் கவலையின்றி வெகு குஷியாகக் காணப்பட்டார்கள். கவர்னரின் மகளுடைய அதி விமரிசையான கல்யாணத்தில் வைரத்தினால் இந்தியா மேப்பைப் போன்ற பதக்கத்தை சுலோசனாவின் வீட்டார் பரிசளித்ததைக் கொண்டாடாதவர்கள்

பாக்கி இல்லை. அதேபோல் சுலோசனுவின் அத்புத நடனத்தைப் புகழாதவர்கள் இல்லை. அதைவிடச் சந்தோஷம் அவளுடைய பெற்றோருக்கு வேறு என்ன வேண்டும்?

ஆனல் சுலோசனுவின் கவலையும் வாட்டமும் இரண்டு மூன்று நாட்களுக்குப் பிறகுதான் அவர்கள் கவனித்தார்கள். அப்போதும் உள் காரணம் இன்னதென்று அறியாமல் உடம்புசரியில்லை என்றே தீர்மானித்தார்கள். இன்னிலைமையிலிருக்கையில்தான் சுதர்சன் 'யுத்தச் செய்தி' என்கிற பத்திரிகையுடன் சுலோசனுவிடம் வந்தான். அவளது முகவாட்டத்தையும் மெலிவையும் கண்டு "என்ன உடம்பு! நாலைந்து நாட்களாய் வெளியே வரவில்லையே!" என்று வெகு அன்புடன் கேட்டான்

தலையைக் கோதியவாறு எழுந்து உட்கார்ந்த சுலோசனு "உடம்பு ஏதோ ஒரு மாதிரி இருக்கிறது. அதனல்தான் வரவில்லை" என்ருள்.

சுதர்:—அப்படியானல் நாளைதினம் இன்னும் ஏதேதோ ஊருக்குப் போகவேண்டும் என்று போட்டிருந்த திட்டம் எப்படி ஆவது? உங்களால் முடியாதுபோலிருக்கிறதே!

சுலோ:—நானும் இதுபற்றிதான் யோசித்துக்கொண்டிருக்கிறேன்.

சுதர்:—ஆமாம். உங்கள் கணவரிடமிருந்து உங்களுக்கு ஏதாவது கடிதம் வந்ததா! உங்களுக்குத் தெரிந்துதானே செய்திருக்கிருர்...

சுலோ:—(திடுக்கிட்டவளாய்) என்ன செய்திருக்கிருர்! எனக்கொன்றுமே தெரியாதே! ஏன்! என்ன விஷயம்!—என்று பரபரப்புடன் கேட்டாள். இச் சமயத்தை எதிர்பார்த்துக்கொண்டிருந்த சுதர்சன் "ஓகோ! உங்களுக்குத் தெரிந்து உங்கள் அனுமதியைப் பெற்றுத்தான் பட்டாளத்தில் சேர்ந்து சிறந்த போர்வீரராக ஆயிருக்கிருர் என்று எண்ணினேன். இதோ அவருடைய படங்கள் பாருங்கள்" என்று பத்திரிகையைக் காட்டினன்.

இந்த விஷயத்தைக் கேட்டதும் சுலோசனுவுக்குத் தூக்கிவாரிப் போட்டு ஏதோ சித்திரவதை செய்துவிட்டது. பத்திரிகையை வாங்கிப் பார்த்தாள். போர்க் கோலத்திலும் சாதாரண நிலைமையில் ஒரு மரத்தடியில் ரொட்டி சுடுவதுபோலும் பல போர்வீரர்கள் ஒன்ருக அமர்ந்து ஏதோ ப்ரார்த்தனை செய்வதுபோலும், போர்க்கோலத்துடன் ட்ரில் செய்வதுபோலும்பலவிதமான படங்களைக் கண்டதும் அவளுடைய மண்டையில் செம்மட்டியாலடித்ததுபோன்ற ஒருமகத்தான அதிர்ச்சி உண்டாகி'ஐயோ!' என்று வாய்விட்டும் கத்தினுள். அடுத்த நிமிடம் அவளுக்கு மூர்ச்சையே வந்துவிட்டது. அங்கு உட்கார்ந்திருந்த சுதர்சன் நடுங்கினுன்.

## 37

வெகு விரைவிலேயே நன்ருகப் பழகிவிட்ட ரகுநாதன் சிப்பாய்களின் மத்தியில் நல்ல புகழ்பெற்று விளங்கினுன். போர் நடக்கும் இடங்களுக்குப் போவதையே அவன் பெரிதும் விரும்பினுன். பட்டாளத்தில் சேர்ந்து கப்பலேறிய அன்று அவனது இதயத்திலிருந்த கொதிப்பும் அதிர்ச்சியும் மகோன்னதமான சேவையிலீடுபட்டவுடனே நீங்கி, த்யாகச்சுடரில் குளித்தெழுந்ததுபோன்ற புனிதத்தன்மை உண்டாயிற்று.

எனினும்பட்டாளங்களின்பொழுதுபோக்கிற்காக பலவிதபத்திரிகைகள் கொடுத்திருந்ததில் சுலோசனுவின் சீமை யாத்திரை விசேஷத்தையும் அந்த விஷயமான தடபுடலையும் படிக்கும்போதுமட்டும் அத்தகைய வைராக்கிய இதயமும் கலங்கிப்

போய் கொதிக்கும். சற்று நேரம் தத்தளிப்பான்; பிறகு தானே உதறித் தள்ளுவான்.

ஆனால், ரகுவிற்கு தன்மீது உயிரையே வைத்திருந்த கிழவர்களை மட்டும் மறக்கவே முடியவில்லை. அவர்களுக்கென்னவோ சாப்பாட்டிற்குப் பஞ்சமில்லை. இருப்பினும் மன நிம்மதி இல்லாது செய்துவிட்டோமே என்கிற கவலை மட்டும் பாதிக்கும். 'அவரவர் விதி! இதற்கு யார் என்ன செய்யமுடியும்!' என்று மனத்தைதிடப்படுத்திக்கொள்வான்.

இத்தனை மனப் புயலுக்கும் மத்தியில் சுலோசனாவின் கடைசி கடிதமே அவன் இதயத்தை மின்னும் அளிந்த புண்ணாகச் செய்தது. "ஏழ்மை வாழ்வு பிடிக்கவில்லை...சரியான போஷணை இல்லை... அடாடா! பணம்! பணம்!! என்று பறப்பதில் மற்ற சகலத்தையும்... விலை மதிப்பற்ற கண்ணியத்தையுமல்லவா இழந்துவிட்டாள்! இருக்கட்டும். பணத்தினால் அவள் எவ்வளவு பெருமையும் பயனும் அடைகிறாளோ அடையட்டும். எனக்கு செலவுக்கு வேண்டிய பணம் போக மற்ற பணத்தை அனுப்பி அவளை பணத்தினால் திணறச் செய்துவிடுகிறேன். நான் சம்பாதித்துச் சேர்த்துவைத்து யாருக்குக் கொடுக்கவேண்டும்?... என்று தனக்குள் தீர்மானம்செய்து கொண்டான்.

பட்டாளத்திலுள்ள மற்ற இளம் வயது வீரர்கள் தம் மக்கள் மனிதர்களை எண்ணி ஏங்குவதும், தம் மனைவிக்குக் கடிதம் எழுதுவதும், மனைவிமார்கள் கணவனுக்குக் கடிதம் எழுதுவதும், அக்கடிதங்களைப் படித்து அவர்கள் அடையும் ஆனந்தமும், காதலியைப்பார்க்க வேண்டுமென்று ஒவ்வொருவரும் துடிக்கும் துடிப்பும், உறைந்துபோய் மரக்கட்டையாயுள்ள ரகுவின் உண்மையறியாது அவனைப்பார்த்து "நீ ஏன் ஒருவருக்குமே கடிதம் எழுதவில்லை... உனக்குக் கல்யாணமாயிற்றா இல்லையா! உனக்கு யாருமே மக்கள் மனிதர்கள் இல்லையா! உனக்குக் கடிதமே வருவதில்லையே!... கல்யாணமாகி இருந்தால் உன் மனைவி கடிதமெழுதமாட்டாளா! நீயாவது எழுதமாட்டாயா! ஏன் இப்படி இருக்கிறாய்!"

என்று அவர்கள் வலுக்கட்டாயமாய்த் தொணப்புவதும் அவனுக்கு நாடகம் பார்ப்பது போன்றும் ஏதோ நரகவேதனைசெய்வதுபோன்றும் தோன்றியதேயன்றி பதில் பேசத் தெரியாது விழிப்பான். தன்னுடைய ஆதிகாலத்தின் ஆசைப்பிரவாகம் எல்லாம் கட்டுப்படாத காலவெள்ளமாகப் பொங்கி சகலத்தையும் அடித்துக்கொண்டு போய்விட்டதை எண்ண எண்ண சில சமயம் தாங்கமுடியாது துக்கம் பீறிக்கொண்டு வரும். தன்னையும் மீறி விக்கி விக்கி அழுவான்.

உயிரையும்விடுவதற்குத் துணிந்துவந்துள்ள வீரர்களுக்கு யுத்தரங்கத்திலுண்டாகிய களைப்பு,சோர்வு பயம் பீதி முதலியவற்றிற்கு, தம்தம் மக்கள் மனிதர்களிடமிருந்து வரும் கடிதங்களே பேராறுதலாயும் தெம்பும் மகிழ்வும் கொடுப்பதாயும் இருந்தன. சதா குண்டுச் சத்தமும துப்பாக்கி வெடிசத்தமும் ப்ளேன்களின் பயங்கர இரைச்சலும் அபாயச் சங்கின் அலறலின் ஊளையும் கேட்டுக் கேட்டுப் புளித்துப்போயுள்ள காதுகளுக்கு "உனக்குக் கடிதம் வந்திருக்கிறது." என்று கூறும் சப்தம் ப்ரம்மானந்தமான சங்கீத விருந்து கொடுப்பதுபோன்று ஒரு புத்துணர்ச்சி உண்டாக்கி தேகத்தில் புதிய ஜீவன் உண்டாக்கி ஆனந்தத்தை

அள்ளிவீசும். கடிதங்களைப்படிக்கையில் அவர்களுடையும் மகிழ்ச்சியின் பந்தை அவர்களின்முகமேஎடுத்துக் காட்டி ரகுவை ப்ரமிக்கச்செய்யும். தன் காதலியை எண்ணி ஒரு வீரன் கண்ணீர் விடுவதையும், அவள் கடிதத்தினல் புதிய தேஜஸைப் பெற்றதையும் பார்த்த ரகு இப்படிப்பட்ட அன்யோன்ய தம்பதிகளைப் பிரித்த கடவுளை நொந்து ஏங்குவான்.

ஒரு நாள் இரவு பட்டாளம் கூடியுள்ள காம்பில் எல்லோரும் படுத்திருக்கையில் தற்செயலாக அன்றைய தேதியும் மாதமும் நினைவிற்கு வந்ததும் அவனை அப்படியே ஒரு துள்ளு துள்ளச் செய்தது. "சொல்லவல்லாயோ கிளியே!" பாட்டுப் பாடிக்கொண்டு சுலோசன நாட்டிய மாடியதும், வீதியில் சென்ற போர்வீரர்களின் ஊர்வலத்தைக் காட்டியதும், வீரர்களைப் பற்றி அன்று தான் பேசியதும் நினைவில் வந்து அவனைக் குழப்பின.

அன்று தனக்கு இத்தகைய ஒரு காலம் வரும், தானும் த்யாகச் சுடராய் ராணுவத்தில் சேரப் போகிறேம் என்று சொப்பனம்கூட காணவில்லை. இன்று அவன் மிகவும் அபாயகரமான நிலைமையில் கையில் துப்பாக்கியுடன் நிற்பதை எண்ண எப்படித்தானிருக்கும்? தனக்கும் சுரட்டி ராகத்திற்கும் ஏதோ சம்பந்தமிருக்கிறது. அன்று சுரட்டி ராகம் பிரித்தது. மீண்டும் சுரட்டி ராகம் சேர்த்துவைத்தது.

வீரர்களில் ஒருவன் அதே சுரட்டி ராகத்தை ஆலாபனம் செய்து கொண்டிருப்பதைக் கேட்டதும் அவனுக்கு திக்கென்றுதோன்றியதேயன்றி ஆனந்தமாகப்படவில்லை. ஆலாபனம் செய்தவன் சும்மாயிராமல் "சொல்லவல்லாயோ கிளியே!" என்று மெல்ல ஆரம்பித்ததும் ரகுவைத் தூக்கிவாரிப் போட்டது. 'தம்பி! தயவு செய்து இந்த பாட்டை நிறுத்திவிடு' என்று சொல்லவே துணிந்து, "தம்பி ! இந்த ராத்திரி வேளைக்கு மோகனம் பாடினல் எவ்வளவு ஆனந்தமாயிருக்கும்? அதை விட்டுப் பாழும் சுரட்டி பாடுகிறுயே! மோகனம் பாடேன்" என்ருன்.

வீரன்:—ஐயையோ! மோகனமா! அண்ணு! தயவுசெய்து மன்னிக்கணும். மோகனத்தை நான் மனத்தால்கூட நினைப்பதில்லை. என்னை முற்றிலும் ஏமாற்றி பதைக்கச் செய்த பாழும் மோகனத்தை நான் பாடுவதில்லை. என் வாழ்க்கையிலேயே எனக்குப் புத்துயிரும் அபாரமான ஆனந்தமும் அளிக்கச் செய்தது சுரட்டிதான்.

என் தாயார் மகா ரஸிகை. வெகு அத்புதமாய்ப் பாடுவாள். தன்னை மறந்து ஒருதினம் மோகன ராகம் பாடும்போது திடீரென்று இதயம் நின்று க்ஷணமே என்னைத் தவிக்கச் செய்து பறந்துவிட்டாள். அன்று முதல் மோகன ராகத்தை யாராவது பாடினல்கூட நான் எழுந்துபோய் விடுவேன். என் தாயாரின் மதுர கண்டத்தில் தவழ்ந்து அத்புத லீலை செய்துப் பரவசமாக்கிப் பின் பேரிடியையும் கொடுத்த மோகனத்தை நான் எமனுகவே கருதுகிறேன்.

என்னுடைய இருண்ட வாழ்வில் ஒரு இன்ப ஜோதியை உண்டாக்க வந்த என் இல்லக்கிழத்தி பாரதியாரின் பாட்டுப் போட்டியில் சொல்லவல்லாயோ கிளியே! என்கிற பாட்டைப் பாடித் தங்கப் பரிசு பெற்ருள். அன்று நானும் போட்டிக்குப் போயிருந்தேன். அப்பாடலும் அவளும் என்னிதயத்தைக் கவர்ந்து தன் வயமாக்கிக் கொண்டபிறகு அதே முருகக் கடவுள் எங்களைச் சேர்த்தும் வைத்தார். அன்றுமுதல் இந்த பாட்

டும் ராகமும் எனக்கு ஆனந்த மந்திரம் போலாகிவிட்டன. ஆகையால் இதைப் பாடுகிறேன்'' என்ருன்.

இதைக் கேட்ட ரகு "அட விந்தையான உலகமே! ஒரே பாட்டு, ஒரே ராகம். ஒருவருக்கு ஆனந்தத்தையளிப்பதும் ஒருவருக்கு வேதனையைக் கொடுப்பதும் என்ன ஆச்சரியம்!'' என்று வியந்தான்... அதே சமயம் அபாயச் சங்கின் அலறலைக் கேட்டு வீரர்கள் கதிகலங்கி ஆயுத சகிதம் ஓடினுர்கள்.

## 38

சுலோசனுவின் முகத்தில் ஜலத்தைத் தெளித்து விசிறிய பிறகு தெளிந்து எழுந்தாள். அந்த பத்திரிகை அப்படியே மேஜைமீது கிடந்தது. அதை மறுபடியும் எடுத்துப் பார்த்தாள். "இது உண்மையா! அவர்தானு இது...ஆம்...சந்தேகமில்லாது அவர்தான். வீரன் ரகுநாத் என்று கொட்டை எழுத்தில் போட்டிருக்கிறதைப் பார்த்தபிறகு என்ன சந்தேகம்? பட்டாளத்திலா சேர்ந்துவிட்டார்!...என்று தன்னையேதான் கேட்டுக்கொள்வதும் துடிதுடிப்பதுமாக உள்ள சுலோசனுவைக் கண்ட சுதர்சன்,'' என்ன சுலோசனு! ஏன் ஏதோமாதிரி இருக்கிருய்! உன்னிடம் சொல்லாமல் இப்படி போரில் சேர்ந்துவிட்டானே என்று வருத்தப்படுகிருயா!... இதன் காரணம் என்னவாகவிருக்கும் தெரியுமா? நீமட்டும் நடனக்கலேயில் வெளிநாட்டில் அபாரமான புகழைப் பெற்றுவிடுவது, தான் வெறும் கட்டையாகவிருப்பதா? நீ திரும்பிவர எப்படியும் ஆறுமாத காலமாவது ஆகும். அதற்குள் நாம் உயர்ந்த வீரன். பெருமைபெற்ற சிப்பாய் என்று பெயர் பெற்றுவிடலாம் என்கிற எண்ணத்துடன் போயிருப்பான்.''

என்று சுதர்சன் வழக்கத்திற்கு மாருக நீ என்று ஏக வசனத்தில் பேசுவதைக் கண்ட சுலோசனுவின் முகம் சற்று சுளித்தது. சற்று கடுகடுப்புடன்....."மிஸ்டர் சுதர்சன்! நீங்கள் பேசுவது நன்ருயில்லே. மரியாதைக் குறைவாய் நடக்கவேண்டாம்...என்று கூறி முடிக்குமுன்...

"அடாடா! மரியாதைக் குறைவாய் நான் என்ன நடந்துவிட்டேன்! என் ராணிக்குக் கோபம் வரும்படி நான் எதுவும் சொல்லவில்லையே! ஏன் கோபம் வருகிறது?'' என்று கூறியவாறு அவள் கரத்தைப் பற்றினுன்.

சுலோசனு வெடுக்கென்று கையை உதறிக்கொண்டு எழுந்து நகர்ந்து சென்று, "மிஸ்டர்! இது சுத்தமாக நன்ருகஇல்லே. இதென்ன காரியம்?''என்ருள்.சுதர்சன் அலக்ஷியமாகச் சிரித்துக்கொண்டே... "என்ன காரியமா! மனதிற்குகந்த மகிழ்ச்சியளிக்கும் மங்கள காரியம்! நாட்டியத்தில் பலமுறைகள் பல பேர்களின் மத்தியில் இதே மலர் கரத்தைப்பற்றி அணைத்தும் பல முத்தங்களிட்டும் உன்னைத் தழுவியும் காதல் கட்டங்களில் நடித்த அதே காரியத்தைத்தான் இன்றும் செய்தேன். இங்கு சபை இல்லே. நாம் மட்டுந்தானே இருக்கிருேம்''

என்று கூறுவதைக் கேட்ட சுலோசனுவுக்கு அவளேயறியாது அபாரமான கோபம் வந்துவிட்டது. "என்ன! நாட்டியத்தில் கைப்பிடிப்பதுபோல் பிடித்தீரா! போதும் நிறுத்தும். நாட்டியத்தில் சுலோசனுவும் சுதர்சனனும் அங்கு இல்லே. ராதையும் கிருஷ்ணனும், கோபியும் கிருஷ்ணனும், சத்யபாமையும் கிருஷ்ணனும், சகுந்தலேயும் துஷ்யந்தனும் ஆக பலபேர்கள் தாண்டவமாடினுர்களே யன்றி கேவல

மாக நீர் நினைக்கிறபடி அங்கு இல்லை. தப்பிதமாகப் பேசியதைத் திருத்திக்கொண்டு மரியாதையாக எழுந்துபோகலாம்'' என்று கூறி விட்டு சடக்கென்று அடுத்த அறைக் குச் சென்று கதவைச் சாத்திக் கொண்டாள்.

சுதர்சனுக்கு மிக்க கோபம் வந்து விட்டது. உடனே பின்தொடர்ந்து கதவைத் திறந்துகொண்டு உள்ளே சென்று, "சுலோசனு! நாம் இப்போ திருப்பது வெளிநாடென்பதும், நாம் ஒரே கோஷ்டியினராய் வந்திருப்ப வர்கள் என்பதுவும் மறந்து பேசுகி ருப்போலிருக்கிறது. உன் நிலை மையை சற்று யோசித்து தீர்க்க மாய் ஆலோசித்த பிறகு பேசு. சண்டையில் நேருக்கு நேர் துப் பாக்கிப் பிடித்து சண்டை செய்யச் சென்ற உன்கணவன் இனி திரும்பி வருவது ஹரோஹராதான் என்பது நினைவிருக்கட்டும். அப்படிப் பிழைத்துத் திரும்பி வந்தாலும் உன்னை பழையபடி வைத்து வாழ கனவிலும் விரும்பமாட்டான். காட் டில் காய்ந்த நிலவைப்போல் நீ பாழாகாதே! அவன் விஷயம் இரண்டில் ஒன்று தெரியும் வரை யில் நாம் இந்த உயர்ந்த நாட்டியக் கலைக்கு சேவை செய்துகொண்டே இன்பமாக வாழ்வோம்.

அந்த விஷயம் தெரிந்த பிறகு உடனே மணம் என்கிற விளம்பரத் தைச் செய்து விடுவோம்... என்று கூறி முடிக்கும் வரையில் இதைக் கேட்டுக்கொண்டிருக்க முடியாது பொறுமையை இழந்த சுலோசனு ஒரே ஆவேசம் வந்தவளாய் எதிரி லிருந்த நாற்காலியை தடாரென்று தூக்கி "ஆஹா!...என்னசொன்னுய்? ...சண்டைக்குச் சென்றவர் செத் துப்போவதும் உன்னை மணப்பதும் ...உன்னிடம் அதுவரையில் நேசம் வைப்பதுமா நீ விரும்புகிருய்...... உன்னைப்பற்றி ஒரு காலத்தில் என் சினேகிதை எழுதியதை நான் அப் போது நம்பாது அவளை வெறுத் தேன். அவளையே திட்டினேன்... பாம்பின் விஷத்தை இப்போதுதான் அறிந்து என் புத்தியை நான் செறுப்பாலடித்துக் கொள்கி றேன்...என்று கூறியபடியே தடா ரென்று அவன்மீது வீசி எறிந்தாள்.

இப்படியொரு ராக்ஷஸச் செய் கையை சுலோசனுவிடம் அவன் எதிர்பார்க்கவே இல்லை. ஆகையால் அவன் இச் சம்பவத்தினுல் கதிகலங் கிப்போய் நாற்காலியால் அடிபட்டு அப்படியே பக்கத்திலிருந்த சோபா வின்மீது விழுந்தான். அங்கு தற் செயலாய் வந்த உஷா சுதர்சன் விழுந்து கிடப்பதைக் கண்டு பெரி தாகக் கூக்குரலிட்டு "ஐயையோ! ஆபத்து ஆபத்து!''என்று கத்தினுள்.

சுலோசனுவின் தகப்பனுர் ஓடி வந்துதாங்கிக்கொண்டு "என்ன இது? ஏன் இப்படி விழுந்தீர்கள்? தடுக்கி விட்டதா! ஐயோ! நெத்தியில் அடி பட்டுவிட்டதே!''என்று கூறியவாறு அவன் நெத்தியைத் துடைத்து அவ னுக்கு சிச்ருஷை செய்தார். ஆனுல் என்ன காரணத்தினுலோ சுதர்சன் நடந்ததைக் கூருது ஏதோ கால் தவறி விட்டதாகப் பொய் உரைத்து விட்டுத் தன் இருப்பிடத்திற்குப் போய்விட்டான்.

## 39

"பையனிடமிருந்து கடிதம்ஒன்று மில்லையா தபால்காரரே! பகவானை நேரில் பார்த்தால் உண்டாகும் ஆநந் தம் எப்படியிருக்குமோ! உம்மைப் பார்ப்பதால் சந்தோஷமும் ஒரு வித மான ஆறுதலும் உண்டாகிறது. ஆனுல் கடிதமே கொடுக்காதபோது மனது சலிப்படைகிறது. கடிதம்

வந்து மூன்று மாதமாகிறதே ; என் கவலே அதிகரிக்கிறது. என்ன செய்வேன்?" என்று கிழவர் தபால் காரனைக் கேட்டார்.

தபால்காரனும் சற்று வயதானவனேயாகையால் "சாமீ! இன்று உங்களுக்குக் கடிதம் இருப்பதால் தான் இந்த தெருவில் முதலில் உங்களிடம் வந்தேன். இதோ கவர். இருங்கள். ஏதோ தள்ளாத நாளில் உங்களுக்கு ஏனோ இப்படிப்பட்டக் கவலே? போயும் போயும் அவரு மில்ட்ரி பட்டாளத்திலேயா சேரணும் எதானும் ஆபீஸ்களிலே வேலே செய்யக் கூடாதா! எல்லாம் கால விதி தான். யுத்தமோ, நாளேக்கு நாள் அதி பயங்கரமாய் ஆகிக்கொண்டு வருகிறது. என்ன செய்வது?" என்றான்.

கிழவருக்குள்ள மனக் குழப்பத்தில் இவன் வேறு விளக்கெண்ணெயைக் கொடுப்பதுபோல் பேசுகிறானே பாவி! என்றுதான் தோன்றியது. கடிதத்துடன் உள்ளேபோய் உடனே படிக்கவாரம்பித்தார்.

"என் முன்னறி தெய்வங்களுக்கு வந்தனம். உபய க்ஷேமம். நான் வெகு சவுகரியமாயும் சவுக்யமாயும் சந்தோஷமாயும் இருக்கிறேன். காருண்ய கவர்ண்மெண்டாரின் ஆதரவும் பராமரிப்பும் எழுதிமுடியாது. இங்கு ஆயிரக் கணக்கான வீரர்களுடன் நானும் வெகு குஷியாய் தேசத்திற்காக வேலே செய்கிறேன். இது எனக்கு எத்தகைய சந்தோஷத்தையும், பரமானந்தமான மனத்ருப்தியையும், ஏன் அபாரமான பெருமையையும்கூடத் தருகிறது. நான் இவ்வுலகத்தில் பிறந்த தன் பயனே இப்போதுதான் உணர்கிறேன். என்னேப்பற்றி நீங்கள் சற்றும் கவலேப்படவேண்டாம். நமக்கு சீக்கிரம் வெற்றியைக் கொடுக்க வேண்டுமென்றும் வாகைமாலே சூடி மகிழ்ச்சியுடன் நாங்கள் திரும்பிவர வேண்டுமென்றும் நீங்கள் இருவரும் பகவானே ப்ரார்த்தனைசெய்யுங்கள். இந்திய வீரர்களுடைய மகத்தான சேவையின் சிறப்பையும் அவர்களுடைய தீரத்தையும் புகழ்ந்தும் பாராட்டியும் கொண்டாடியும் ராணுவ அதிகாரிகள் வெளியிட்டுள்ள பத்திரிகைகள் தனி ப்ரசுரங்கள் முதலியவற்றை நீங்கள் பார்த்து மகிழ்வதற்காக இத்தோடு அனுப்பியிருக்கிறேன். படித்து சந்தோஷப்படுங்கள். என் படங்கள்கூட அவைகளில் இருக்கின்றன. அவையும் உங்களே மகிழ்விக்கும்.

இங்ஙனம் உங்கள்
ரகுநாத்"

கண்களில் நீர் வழிந்தவாறு கிழவர் கடிதத்தைப் படித்தார். உம். ஒரு ஏழைப்பெண்ணேக் கல்யாணம் செய்திருந்தால் அவன் கதி இப்படியாகியிருக்குமா! கலா ராணி என்றெல்லாம் புகழ்ந்து செய்த காரியம் குடும்பத்தின் வேரையே அறுக்கும் அரிவாளாக வந்தமைந்தது. மானங்கெட்ட பாதகி சீமையிலிருந்து வந்து விட்டாளாமே! உங்களுக்குத் தெரியுமா!" என்று கங்கா கண்ணீர் வழியக் கேட்டாள்.

"உம். சீமையிலிருந்து வந்தால் என்ன! அல்லது எமன் கோவிலுக்குப் போனல்தான் இனி நமக்கென்ன! நமது ஆசைகளேயும் எதிர்பார்ப்பையும் உடைத்தெறிந்து அவனேயும் ஆண்டிப் பரதேசியாய்ப் பாழாக்கிய பிறகு அந்த சண்டாளியைப் பற்றி நினேக்கக்கூடவா வேண்டும்? என் வயிறு பற்றி எரிகிறது. அந்த மானங்கெட்டவளின் அப்பனுக்கு சர் பட்டம் வந்ததோடு உயர்ந்த பதவியில் உத்யோகமும் கிடைத்துவிட்டதாம். அவளுடைய

அண்ணன் சாதாரண வக்கிலாயிருந்தவனுக்கு ஏதோ ஊரில் ஜட்ஜு வேலை ஆகிவிட்டதாம்.

எது எப்படியானால் நமக்கென்ன! நம் கண்மணி போன்ற குழந்தை நம்மை விட்டுப் பிரிந்து இன்று சரியாக வருஷம் இரண்டாகிவிட்டது: நம்ம அதிர்ஷ்டம் நன்றாக இருந்து நல்லசெய்திகளையே காதில் கேட்டுக்கொண்டிருந்து அவனையும் கண்ணால் பார்த்துச் சந்தோஷப்பட்டால் போதும். அதற்குள் பகவான் அவனடி நிழலில் சேர்த்துக்கொண்டால் நம்மைவிடப் பாக்யசாலி யாருமே இல்லை... என்று கலங்கினான்.

கங்க:—என்ன ஆச்சரியமாய் நாட்கள் ஓடுகின்றன. இன்றுதான் நம்மிடம் கொஞ்சிக் குலாவிப் பேசுவது பேசுவதுபோலிருக்கிறது. இதற்குள் இரண்டு வருஷங்களாகிவிட்டனவா! அவள் எதிரில்போய் என் பையனை இப்படி பாழாக்கிவிட்டாயேடீ! பாவி என்று அடித்துக்கொள்ளலாம்போலிருக்கிறது. என் வயிறு அப்படி கொதிக்கிறது—என்றாள்.

கிழவர்:—உம். சேற்றில் கல்லைப் போட்டால் மூஞ்சியில்தான் தெறிக்கும் தெரியுமா! அந்தபேச்சேவேண்டாம்! குழந்தை ஏதோ அனுப்பியிருக்கிறானே, அதைப்பார்க்கலாம். குழந்தையின் படங்களும்கூட இருக்காமே !—என்று சொல்லிக்கொண்டே அதோடு கூடவிருந்த கட்டை அவிழ்த்தார். அதில் சில பத்திரிகைகளும் தனி துண்டு ப்ரசுரங்களும்கூட இருந்தன. முதலில் படங்களை மட்டும் பார்த்தார்கள்.

என்னே ஆனந்தம் ! இராணுவ உடையில் பலவிதத் தோற்றங்களில் ரகு காக்ஷியளிப்பதைக் கண்டு கிழவரின் இதயத்தில் சொல்லத்திறமற்ற களிவெறியும், கூடவே பிரிவாற்றாமைத் துயரமும் பொங்கின. "என்னப்பனே! தீர்க்காயுசுடன் நீ பல்லாண்டு வாழவேண்டும். வெற்றிக்கொடிதாங்கி வீரவாள் ஏந்தி சுகமாய் வந்து எங்களை மகிழ்விக்க வேண்டும்." என்று இதய பூர்வமாய் வாழ்த்தினர்.

## 40

ஆத்திரத்தில் இப்படி மூர்க்கத்தனமாக நடந்துவிட்டோமோ என்கிற எண்ணமே சுலோசனாவின் இதயத்தில் உதிக்கவில்லை. தான் மிக்க யோக்யன்போல் இதுவரையில் நடித்தவன் திடீரென்று அயோக்யத்தனமாக மாறிவிட்டானே என்கிற மகத்தான கோபம் தான் பொங்கியது. நடந்ததைக் கூறாமல் தடுக்கி விழுந்ததாகப் பொய் சொல்லியிருப்பதால் ஒருவேளை தான் செய்த தவறுதலை உணர்ந்து இப்படிச் சொல்லியிருப்பானோ! என்று தோன்றியதால் தானும் இதைப்பற்றி எதுவுமே தெரியாதவள்போல் மவுனம்சாதித்தாள்.

எனினும் அவளுடைய இதயத்தில் புதியதொரு எண்ணமும் பீதியும் கூறத்திறமற்ற கவலையும் உண்டாயின. தன் கணவனைப்பற்றித் தான் இதுவரையில் கனவில்கூட நினைக்காதிருந்தும் அந்த படத்தையும் அதில் எழுதியிருந்ததையும் பார்த்ததும் தடை செய்யமுடியாத ஒரு துக்கம் பீறிக்கொண்டுவந்துவிட்டது.

திரும்பத்திரும்ப அவன் படத்தைப்பார்த்து "ஐயோ! எதிரிகளின் குண்டுக்கு இரையாகிவிட்டால்...... ...எதிரிகளால் கைது செய்யப்பட்டால் ?"...என்று நினைக்கும்போதே உடம்பு அப்படியே நடுக்கலெடுத்து ஆடியதோடு பற்றி எரிவதுபோன்ற வேதனை உண்டாயிற்று. இச்செய்தியைத் தன் பெற்றோரும் அறிந்து தான் மவுனம் சாதிக்கிறார்களோ! என்கிற சந்தேகம் வேறு உண்டா

கியது. தானாகவே இவ்விஷயத்தைத் தகப்பனாரிடம் தெரிவிக்க எண்ணியவளாய் அவரது தனிவிடுதிக்குச் சென்றாள். கதவருகில் போகும்போதே தாயாரும் தகப்பனாரும் இதே விஷயத்தைப் பற்றிப் பேசுவது காதில்விழுந்ததும், என்ன தான் பேசுகிறார்கள் பார்க்கலாம் என்று எண்ணி மறைந்து நின்றாள்.

தாயார்:—நீங்கள் இப்படி அநியாயமாய்ப் பேசுவது சற்றும் நன்றாயில்லை. அவளிடம் நாம் தெரிவிக்காது மூடி வைத்தால் மட்டும் அவளுக்குத் தெரியாமல்போய்விடுமோ! அப்படித் தானாகத் தெரிந்துகொண்டால் துக்கப்படமாட்டாளா! ஏன்? நாமே சொல்லிவிட்டால் என்ன?...

தகப்:—போடீ பயித்தியக்காரி! அந்த மடையன் தன் உயிரைக் கொடுக்கப் போய்விட்டான். இனி நல்லபடித் திரும்பி வருவது குதிரைக் கொம்புதான். யுத்தம் வெகு மும்முரமாக நடக்கவாரம்பித்துவிட்டதால் நாம்கூட சீக்கிரம் கிளம்ப நேரிடும்போலிருக்கிறது. அதற்குள் இன்னும் சில இடங்களில் நாட்டியம் ஆட ஏற்பாடாகியுள்ளதை முடித்துவிட்டால் சுலோசனாவுக்குக் கை நிறைய பணமும் வாய் நிறையப் புகழும் வந்துவிடும். இந்த தரித்திரச் செய்தியை அறிந்தால் நாட்டியத்தில் மண் விழுந்துவிடும். ஆகையால் நீ பேசாமலிரு. அவள் சந்தோஷமாகவே இருக்கட்டும்.

இதற்குமேல் கேட்க மனம் தாளாத சுலோசனா ஆவேசம்வந்தவளைப்போல் தடதடவென்று உள்ளே வந்து "ஆம்! நான் இனிமேல் முன்னைவிட அளவற்ற சந்தோஷ சாகரத்தில் மிதக்கப்போகிற காலம் வந்துவிட்டது. நீங்கள் மறைத்து ஒளித்து வைக்கும் வரையில் நான் விஷயமறியாமலில்லை. என் முழு முட்டாள்தனத்தையும் பெண் புத்தி பின் புத்தி என்கிற தத்துவத்தின் உண்மை நிதர்சனத்தையும் உள்ளங்கை நெல்லிக் கனிபோல் அறிந்துகொண்டேன். இனிமேல் அதைப் பற்றிப் பேசுவதில் பயனில்லை. அடுத்த கப்பலிலேயே ஊருக்குப் போவதற்கான ஏற்பாட்டைச் செய்யவேண்டும். அதைத் தெரிவிக்கவே வந்தேன். இனி எங்கும் நடனமாட முடியாது. தயவுசெய்து என்னை மன்னிக்கவேண்டும்" என்று படபடத்துக் கூறினாள்.

இதைக் கேட்ட தகப்பனார் ஏளனமாகச் சிரித்துக் கொண்டே, "கண்ணா! என்னம்மா இப்படிப்பட்ட கோபத்துடன் குதிக்கிறாய்! அவன் பட்டாளத்தில் சேர்ந்ததைப் பற்றி நீ பரம சந்தோஷமல்லவா அடையவேண்டும்? அவன் அந்த முறையில் ப்ரமாதமான கவுரவத்தை யடைந்து ராணுவப் பட்டங்கள் பெற்று பெரும் புகழுடன் திரும்பி வருவான். பண விஷயத்தில் நீ என்னுடன் போட்டி போட வேண்டியதாகக்கூட ஆய்விடும். ஆகையால் வீண் கலக்கமடையாதே. ஏற்கெனவே ஏற்பாடாகியுள்ள நாட்டியங்களை நிறுத்தவே முடியாது. இவ்வளவு தூரம் வந்து நாம் மற்ற ஊர்களைப் பார்க்காமல் போவது முட்டாள்தனமாகும். வலியக் கிடைத்த செல்வத்தையும் புகழையும் வீணாக்காதே, நமது இந்தியாவிலேயே உனக்குக் கிடைத்துள்ள பெரும் புகழும் கீர்த்தியும் தனிச் சிறப்பும் வேறு யாருக்குமே கிடைக்கவில்லை என்பதை மறக்காதே!" என்று கூறும்போது அவரை அவசரமாக யாரோ கூப்பிட்டதால் போய்விட்டார்.

நாட்கள் கடகடவென்று ஓடி மறைந்தன. அடிமையைப்போல்

அகப்பட்டுக் கொண்ட சுலோசனுவால் எப்படியும் பேசமுடியாது போய்விட்டது. தினே தினே காதில் அடிபடும் யுத்த பயங்கரச் செய்தி அவளை அறியாமலேயே வேதனையை அளித்து வாட்டியது. மகத்தான ஆசைப்ரவாகம் அடித்துக் கொண்டு வரும் வேகத்தில் தலைகால் தெரியாத சந்தோஷத்தில் வந்து ஆடிப் பெரும் புகழ் பெற்ற அதே சுலோசனு கடைசீ நாட்களில் ஆடி பெயரைக் கெடுத்துக்கொள்ள வாரம்பித்தாள்.

சீமையில்கூட குண்டுகள் வந்து விழ ஆரம்பித்துவிட்டன. உடனே இவர்களை விரைவில் கப்பலேற்றி விட்டார்கள். தாய்நாடு வந்தபிறகு 50 ஆயிரம் ரூபாய் சுலோசனுவின் கை நிறையக் கொடுத்து அவள் பிதா மகிழ்ச்சியடைந்தார். அவருக்கு வெகு தூர தேசத்தில் வேலை கிடைத்ததால் குடும்பத்துடன் சென்று விட்டார்.

183106

இத்தனை மனக் கஷ்டத்திலும் பணத்தின்மீது மோகமும் தடபுடல் வாழ்க்கையில் விருப்பும் மட்டும் குறையவில்லை. ஏற்கெனவே தான் இருந்த ஊரில் 15 ஆயிரம் ரூபாயிக்கு ஒரு பங்களா வாங்கிக்கொண்டாள். ஆதியில் அவள் மனது விரும்பியபடியே சகல சவுகரியங்களையும் செய்துகொண்டு வெகு குசாலாகத் தன் வாழ்க்கையை நடத்தவாரம்பித்தும் கவலை நீங்கவில்லை.

த்கப்பனர் வெகு தூரதேசம் போய்விட்டதால் தங்கைகள், தம்பிகள் முதலியவர்களை இவளே கவனித்துவரும் பொறுப்புண்டாகியது. இதை அவள் தலையில் ஏற்றிவிட்டால் கணவனைப் பற்றிய கவலை சற்று குறையும் என்றுகூட தகப்பனர் நினைத்தார். அதோடு சுலோசனுவுக்கு மனது நிம்மதியடையும் பொருட்டு, தனக்குத் தெரிந்தவர்கள் வீட்டுப் பிள்ளைகள் பலபேர் யுத்த சேவைக்குப் போயிருப்பதாய்க் கூறியதோடு ராணுவ அதிகாரி வெளியிடும் பல அறிக்கைகளையும் வரவழைத்துக் கொடுத்து அவளைத் தேற்றினர்.

இனிமேல் மேல்பூச்சுக்கு எது செய்துதான் என்ன உபயோகம்? அவளும் மகா புத்திசாலியாகையால் ராணுவத்தில் ரகு எப்படி இருக்கிறன்? எங்கிருக்கிறன் என்பது போன்ற பல தகவல்களை விசாரிக்க முயன்றும் அவனைப்பற்றி எதுவுமே தெரியாமல் திகைக்கச் செய்தது. ஆனல் ஒருதரம் ரகு கொடுக்கச் சொல்லியதாக பெருந் தொகை பணம் ஊர் பேர் ஒன்றுமில்லாமல் இவள் கைக்கு வந்து சேர்ந்தது.

அந்த பணத்தைப் பார்த்த பிறகு இவளுடைய துக்கமும் கவலையும் பன்மடங்காகப் பெருகி முன்னிலும் அதிகமாக பாதித்தன. மாதங்கள் வருடங்கள் காற்றினும் கடிய வேகத்தில் சென்று மறைந்தன. யுத்த பயங்கரத்தின் எதிரொலி பத்திரிகைகளிலும் ரேடியோச் செய்திகளிலும் மும்முரமாக ஒலித்ததைக் கண்ட சுலோசனுவின் நிலைமையின் கேவலமும் பரிதாபமும் அவளுக்கே அப்போதுதான் தெரிந்தது. வீட்டில் தம்பிகள், தங்கைகள் முதலியவர்கள் இருந்தும், ஆதியில் அவள் மனம் விரும்பியதுபோல் சகல சுக வாழ்வுக்கான சாதனங்கள் மோட்டார் முதல் டெலிபோன், ரேடியோவரையில் இருந்தும் எதனலோ அவளுடைய மனத்தில்அவைகளால் அதிக த்ருப்தியோ சந்தோஷமோ நிறைந்த எண்ணமே உண்டாகவில்லை. உள்ளுக்குள் ஏதோ ஒன்று உறுத்தி வேலை செய்துகொண்டேயிருந்தது.

# அபராதி

வை. மு. கோ.
69-வது நவீனம்

116 பக்கங்கள்.
விலை ரூ. 1—2.
ரிஜிஸ்தர் போஸ்டில்
ரூ. 1—5.

"ஓர் அபராதியின் கதையா!" என்று நினைக்கும்போதே உங்கள் உணர்ச்சியும் கற்பனையும் கிளறப்பட்டு உங்கள் ஆவல் உச்சஸ்தாயியில் ரீங்காரம் செய்கிறதல்லவா?

ஆம். அது இயற்கையே! புத்தகத்தைக் கையிலெடுத்தால் ஒரே மூச்சில் படித்து முடித்துவிட்டுத்தான் உங்கள் கவனத்தை வேறு விஷயத்தில் செலுத்துவீர்கள்.

நம் சமூகத்திற்கும் குலதர்மத்திற்கும் மகத்தான தீங்கிழைத்துள்ள பல அபராதிகள் இந்த சித்திரத்தைப் படித்த பிறகாவது சற்று நெறியுடன் இருப்பார்களாக!

---

## தாரண வருடத்தில் தமிழகம் கண்ட புதுமை!

★ கற்பனை ஊற்று
★ ஓவியச் சோலை
★ நவரஸ அலங்காரம்
★ அழகுப்பொக்கிஷம்

## தாரண நந்தவனம்

(700 பக்கங்கள். 100 படங்களுடன்)

நூறு சகோதரிகள் சிருஷ்டித்த ருது மலர் மாலை. (ரூபாய் ஒன்பது)

---

## பார்த்திப நந்தவனம்

வஸந்தருது—7 வது மலர் ரூ. 1—2—0
கிரீஷ்மருது—8 வது மலர் ரூ. 1—2—0

உங்கள் பிரதிக்கு ஆர்டர் செய்தாயிற்று? ஷை பார்த்திப மலர்களில் வை. மு. கோ. 68 வது நாவல் வாழ்க்கைத்தோட்டம் தொடர்ந்து வெளி வருகிறது. முன்பணம் அனுப்பவும். வி. பி. கிடையாது.



All rights of reproduction and translation of the contents of JAGANMOHINI are strictly reserved. The names and characters in all stories in this magazine are entirely imaginary and have no reference whatsoever to real persons.


JAGANMOHINI is printed and published by V. M. PARTHASARATHY at the Jaganmohini Press, Vaithamanidhi Cottage, Station Road, Singaperumalkoil JAGANMOHINI is owned and edited by Mrs. V. M. KOTHAINAYAKI AMMAL, assisted by the Editor-in-charge: V. M. SRINIVASAN, M.A., B.L.

Jaganmohini (Oct. 1945) Regd. No. M. 2210



# நந்தவனம்

9-வது மலரிலிருந்து

அ 8 ணா



!